கல்கி




KALKI 12.9.65 35 காச


அமுல் பாலுணவில் உள்ளது
கித்வாய் பரிசுபெற்ற ஃபார்முலா
தி சென்ட்ரல் ஃபுட் டெக்னலாஜிகல் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் நிபுணர்கள். இந்தியாவிலுள்ள குழந்தைகளின் உணவுத் தேவைக்கேற்ற அமுல் பாலுணவின் ஃபார்முலாவை உருவாக்கி கித்வாய் பரிசினைப் பெற்றுள்ளனர். அமுல் உணவில் உள்ள சத்துக்கள், உங்கள் குழந்தையின் உடலிலுள்ள திசுக்களை நல்லமுறையில் வளர்ச்சியுறச்செய்து மிகுந்த சக்தியைத் தருவதுடன், மனநிறைவுதரும் வகையில் எடை கூடவும் உறுதியளிக்கின்றன. உறுதியான பற்கள், வளமைமிக்க எலும்புகள்! தூய்மையான இரத்தம், பழுதற்ற பார்வை, மிருதுவான தோல் ஆகியவற்றிற்கும் உறுதியளிக்கிறது அமுல் பால் உணவு. மேலும் தொத்துநோய், சொறி சிரங்கு, பக்கவாத ரோகம், இரத்தச் சோகை முதலியன வாராமல் தடுக்க பெரிதும் உதவுகின்றது. அமுல் பாலுணவு உங்கள் குழந்தைக்கு மிகச் சிறந்தது.
ISI
கறந்த பாலிலிருந்து தயாரிக்கப்பட்ட அமுல் பாலுணவில், உங்கள் குழந்தைக்குத் தேவையான 7 வைட்டமின்கள் உள்ளன.

கல்கி

பொருளடக்கம்





நித்தம் ஒரு கண்ணாடி. ஓயாமல் பராசக்தியைத் தியானம் செய்யுமானால் அவளுடைய சாயை இதிலே படும். அதிலே சுகமுண்டு.


மகாகவி பாரதியார்

விசுவாவசு ஆவணி 27 — செப்டம்பர் 12

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


ஐயா! என்னை அந்தக் கொள்ளைக் காரனிடமிருந்து காப்பாற்றுங்கள்!
வரிகள்
விலைவாசி ஏற்றம்


நமது..
..பொருளாதார..
முன்னேற்றம்!
PK


திட்டம்



மலர் 25 ★ இதழ் 7

தேசிய சர்க்காரே வழி

தவறான ஆலோசனை காரணமாகப் பாகிஸ்தான் ஆக்கிரமிப்புப் பாதையில் மேன்மேலும் அடிவைத்து வருகிறது. இரு தரப்புப் படைகளிடையே கைகலப்பு வலுத்து, பயங்கரமான யுத்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பழைய போர் நிறுத்தக் கோட்டை இந்தியா காத்துக் கொள்ள வேண்டுமாயின் அதனையும் தாண்டிச் சென்று தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற நிலை ஏற்பட்டு விட்டது. இந்தியப் படை பழைய போர் நிறுத்த எல்லைக் கோட்டை மீறிச் சென்றாலே பாகிஸ்தானின் கெரில்லாப் படையினர் ஊடுருவாமல் தடுக்க முடியும் என்பதால்தான் ஒப்பந்தத்துக்கு மாறாக இந்தியப் படை முன்னேற நேர்ந்திருக்கிறது. இதிலிருந்து போர் நிலைமை எவ்வளவு தீவிரமாகியுள்ளது என்று ஊகிக்கலாம்.

நிலைமையின் தீவிரத்தைப் புரிந்து கொண்டாற்போலவே இந்தியப் பிரதமரும், பாதுகாப்பு மந்திரியும் அறைகூவல் விடுத்தபடி உள்ளனர். ஆனால் இது மட்டும் பிரச்னையைச் சமாளிக்கப் போதாது. ஆட்சித் தலைவர்கள் இரவோடு இரவாகக் கூடிப் பேசிக் காங்கிரஸ் கட்சியின் கட்டுக்கோப்புக்கு வழிதேடுவதும், பார்லிமெண்டில் கட்சி அங்கத்தினர் எவரும் மனம் விட்டுப் பேசாமல் சர்க்காரின் சகல காரியங்களையும் ஆதரித்தாக வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்வதும் யுத்தப் பிரச்னையைத் தீர்க்க உதவாது. காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களின் பரிபூரண விசுவாசத்தை மட்டும் பெரிதாக மதிக்காமல், எதிர்க் கட்சிகள் உள்பட எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்கும் வழி என்ன என்பதையே இப்போது முக்கியமாகக் கருத வேண்டும். 'நம் எல்லோரிடையே ஐக்கியம் வேண்டும்' என்று ஆட்சியாளர்கள் திரும்பத் திரும்பக் கூறுகிறார்கள். காங்கிரஸ் அகராதியில் 'ஐக்கியம்' என்றால் ஆள்கிற கட்சி கூறுவதையெல்லாம் எதிர்க் கட்சிகள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதே அர்த்தம். ஆனால் உண்மையான ஐக்கியம் ஏற்பட வேண்டுமாயின் எதிர்க் கட்சிகளுக்குத் தேசப் பாதுகாப்பில் உள்ள அக்கறையை அரசாங்கம் மதிக்க வேண்டும்; அவை கூறும் யோசனையைப் பாரபட்சமின்றிச் சீர்தூக்கிப் பார்த்துக் காரியத்தில் நடத்திக் காட்ட வேண்டும். சுருங்கச் சொன்னால் நெருக்கடி காலத்துக்குரிய ஒரு தேசிய சர்க்கார் அமைத்து, கட்சி மனச்சார்புகளுக்கு இடம் கொடாமல் அனைவருமாகத் தேரை இழுக்கும் திருப்பணிக்கு இன்றைய ஆட்சியாளர்கள் வழிதேட வேண்டும். இன்று நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையின் பாரத்தைத் தாங்கும் பொறுப்பு தனியொரு கட்சியின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. எனவே அதிகாரத்தின் மீதுள்ள ஏகபோக்கிய ஆசையை விட்டு, கட்சி அரசாங்கத்தின் பளுவைக் குறைத்து, தேசிய அரசாங்கம் அமைத்து, தேசிய அடிப்படையில் நிலைமையைச் சமாளிக்க வேண்டும்.

பாகிஸ்தானுடன் போர் முற்றி வருகிறது என்று சர்க்கார் கூறும்போது உண்மையையே சொல்கிறது. ஆயினும் பிடிகொடுக்காத எதிரியுடன் முகம் கொடுப்பதற்கு ஏற்ற நடவடிக்கையை மேற்கொள்ள அரசாங்கத்துக்கு மனமில்லை. கட்சிப் பொறுப்பை விட்டுக்

தமிழ்த்திரு நாடுதன்னைப்
பெற்ற
தாயென்று கும்பிடடி —
பாப்பா
— பாரதியார்

கொடுத்து, தேசிய அடிப்படையில் செயலாற்றுவதே இன்று ராஜ நீதிக்கு உகந்த நடவடிக்கை. தனது திறமையின்மையை மறைப்பதற்காக ஆள்கிற கட்சி கோபாவேசம் காட்டினால் மட்டும் போதாது. சர்வ கட்சிகளும் ஒன்று கூடி ஒத்துழைக்கச் செய்ய வேண்டும். தனது அதிகாரத்தைத் தானாகவே விட்டுக் கொடுத்துத் தேசிய சர்க்காரை அமைப்பதற்கு அசாதாரணமான திடம் அவசியம். அமைதியான சிந்தனையும், கட்சிப் பற்றின்றிப் பெருந்தன்மையாகப் பிரச்னையை அணுகும் பான்மையும் அத்தியாவசியமாகும். சமய நம்பிக்கை மிக்கவர்களின் தெய்வபக்திக்குச் சமானமான தேச விசுவாசத்தோடு நாட்டின் நிலைமைக்கு முகம் கொடுக்கவேண்டுமாயின், அதற்குச் சுயநலப் பற்றின்மையும், தெளிந்த சிந்தனையும் மிகவும் அவசியம். ஸ்ரீ லால்பஹாதூர் அவர்கள் இத்தகைய தேச விசுவாசத்தையே சமயமாகக் கொண்டவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவரது உணர்வு செயலாக உருப்பெறாதவாறு சகாக்களின் செருக்கு குறுக்கே நிற்கிறது. சிறிய மனிதர்கள் பெரிய பதவியில் அமரும்போது இந்தச் செருக்கே அவர்களது கழுத்தில் கட்டித் தொங்கவிட்ட பாறாங்கல்லாக இறுக்குவது வழக்கம். பிரதமரவர்கள் தமது கூட்டாளிகளின் போக்கை மாற்ற ஆண்டவன் அருள்வானாக!

விளம்பரத்துக்கு விபத்து

பத்திரிகை விளம்பரங்களைப் பெரிதும் கட்டுப்படுத்தி அதன் மூலம் நாட்டின் உற்பத்திக்கும், பத்திரிகைத் தொழிலுக்கும் பெருந்த ஊறு விளைவிக்கக் கூடிய விதிகளைச் சில மாதங்களுக்கு முன் சர்க்கார் வெளியிட்டது. உற்பத்தியாளரும், வியாபாரிகளும், பத்திரிகைத் துறையினரும், விளம்பர ஸ்தாபனத்தாரும் இந்த விதிகளில் உள்ள விபரீதத்தைச் சுட்டிக் காட்டியதன் பேரில் அவை பெருமளவுக்கு மாற்றப்பட்டு, இப்போது புதிய யோசனைகள் வெளியாகியுள்ளன. இவற்றைக் குறித்து நாட்டின் கருத்து வெளியாவதற்கு அவகாசம் அளித்திருக்கிறார்கள். இறுதியில் புதிய விதிமுறை வகுக்கப்படும்.

ஆட்சேபணையின் நியாயத்தைப் புரிந்து கொண்டு பழைய திட்டத்தைக் கைவிட்டதற்காகச் சர்க்காருக்குப் பாராட்டுத் தெரிவிக்கிறோம். எனினும் புதிய யோசனைகள் நாட்டின் பொருளுற்பத்தி, பத்திரிகைத் தொழில் இவற்றுக்குத் தீமை விளைவிப்பதாகவே இருப்பதை விசனத்துடன் சுட்டிக் காட்டுகிறோம். முக்கியமாக வருமானத்தில் நான்கு சத விகிதத்துக்கு அதிகமாக விளம்பரத்துக்குச் செலவழிக்கக் கூடாது என்று கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் என்னவென்று புரியவில்லை. ஒருகால் மூலதனத் தொழில் நிறுவனங்களுக்கும் மிகப் பெரிய தொழிலகங்களுக்கும் இந்த வரம்பு போதுமானதாக இருக்கலாம். ஆனால் மக்கள் வாங்கி உபயோகிக்கும் பண்டங்களில் பலவற்றுக்கு இந்த வரம்பு மிகவும் குறைவாகும். புதிய தொழிலகங்களுக்கு மட்டும் இந்த வரம்பிலிருந்து விலக்களித்திருப்பது போதாது. விருத்தியடைய வேண்டிய நிலையில் உள்ள எல்லாத் தொழிலகங்களுக்குமே நான்கு சத விகித வரம்பு அற்பம்தான். புதிய தொழிலகங்கள் விதிவிலக்குப் பெற்று விளம்பரச் சலுகை பெற்று, அதே சமயத்தில் வளர்ச்சி பெற்ற தொழிலகங்களின் விளம்பரம் கட்டுப்படுத்தப்பெற்றால் புதுச் சரக்குகள் பழையவற்றை மார்க்கெட்டை விட்டு வெளியேற்றும் நிலைமை ஏற்படக் கூடும். எனவே யார் மீதும் எத்தகைய வரம்பும் விதிக்காமலிருப்பதே யுக்தம். விளம்பரத்துக்காகச் செய்யப்படும் செலவு எந்தத் தர்க்க சாஸ்திரப்படியும் வருமானமாகாது என்பதை உணர்ந்து, வருமான விதியின் கீழ் அதைக் கட்டுப்படுத்தும் யோசனையை அடியோடு கைவிட்டு விட வேண்டும். உற்பத்தி பெருக வேண்டும் என்றும், மக்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும் என்றும் ஒருபுறம் முழங்கிக் கொண்டே, மறுபுறத்தில் பண்டங்கள் விற்பனையாவதற்குரிய விளம்பர உபாயங்களை வழியடைப்பது ஒன்றுக்கொன்று முரணாகும்.

சினிமாக்களுக்கு 25 சத விகிதம் விளம்பரச் செலவு அனுமதித்திருக்கிறார்கள். சினிமா மட்டுமல்ல; ஒவ்வொரு தொழிலின் இயற்கையும் ஒவ்வொரு விதத்தில் அமைந்துள்ளது. எந்தத் தொழிலுக்கு எவ்வளவு விளம்பரம் தேவை என்பதைச் சம்பந்தப்பட்ட துறையினர்தான் அறிவர். உதாரணமாகக் கூந்தல் தைலக்காரர்கள் பெருமளவு விளம்பரம் செய்தால்தான் தொழில் நடத்துவது சாத்தியம் எனத் தெரிகிறது. விளம்பரத்துக்கும் வியாபாரத்துக்கும் நேர் விகிதத்தில் பொட்டைக் கணக்குப் போட்டுத் தொடர்பு காண்பது பொருந்தாது. நான்கு சதவிகித விளம்பரம் செய்தால் அடியோடு படுத்துப் போகக் கூடிய ஒரு தொழில் பத்துச் சத விகிதச் செலவால் நல்ல முன்னேற்றம் காணக் கூடும். இது தொழில் நுணுக்கத்தைக் குறித்த விஷயம்; அரசாங்கத்துக்குப் புரிபடாத விஷயம். சர்க்கார் தலையிடுவது முற்றிலும் அநாவசியம். 'அநாவசியக் கட்டுப்பாடுகளையெல்லாம் நீக்க வேண்டும்' என்று பிரதமரவர்கள் கூறிவரும்போது புதியதோர் அநாவசியக் கட்டுப்பாட்டை அமுல் செய்வது கேலிக்கிடமாகும். இன்றளவும் உள்ள நடைமுறையை மாற்றாமல் அப்படியே நீடிப்பதுதான் உசிதம்.

சிறிய பத்திரிகைகள் மீதும், தினசரியல்லாத மற்ற வார — மாதப் பத்திரிகைகள் மீதும் புதிய விதிகள் பலத்த அடியாக விழும். மக்கள் வாங்கி உபயோகிக்கும் பொருட்களைக் குறித்த விளம்பரங்களின் செலவு கட்டுப்படுத்தப்பெற்றால் இப்பத்திரிகைகளின் வருமானம் பெரிதும் பாதிக்கப்படும். அவை உயிர் வாழ்வதே அசாத்தியமாகிவிடும். தமது நாட்டில் எஞ்சியுள்ள சிறிதளவு ஜனநாயக உணர்வையும் சிதைப்பதற்கு இதை விட வேறு ஆயுதம் வேண்டாம்!

என்ன சேதி?

வருக, சேலம் சுப்பிரமணியம்!

சேலம் ஏ. சுப்பிரமணியம் அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்குக் காங்கிரஸ் கட்சியிலிருந்து தாம் ராஜினாமா செய்து விட்டதாகவும், சுதந்திரக் கட்சியில் சேரத் தீர்மானித்து விட்டதாகவும் ராஜாஜிக்கு எழுதியிருக்கிறார். அவர் காங்கிரஸ் கட்சியில் நாற்பதாண்டுகளுக்கு மேலாக இருந்தவர். தற்சமயம் அவர் சென்னை சட்டசபையில் எம்.எல்.ஸி.யாக இருந்து வருகிறார். அப்படிப்பட்டவர் சுதந்திரக் கட்சியில் சேர விரும்புவதாகச் செய்த முடிவு மிகவும் வரவேற்க வேண்டியதாகும். அவரை மனமார வரவேற்கிறோம்.

சைவச் செம்மல் மறைவு

ஈழத்தின் தமிழ்ப் பேரறிஞரும் சைவப் பெரியாரும் பழுத்த அரசியல் மேதையுமான ஸர் கந்தையா வைத்தியநாதன் கடந்த வாரம் திடீரெனச் சிவபதம் அடைந்தது தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஒரு மாபெரும் நஷ்டமாகும். ஸர் கந்தையாவுக்கு வயது 69.

ஸர் கந்தையா கடந்த பத்து வருட காலத்துக்கு அதிகமாகத் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் திருக்கேதீச்சரத் திருப்பணிக்கே அர்ப்பணித்து வந்தார். சரித்திர முற்காலத்திலே மாதோட்டமென்று உலகப் பிரசித்தி பெற்றிருந்த இந்த ஸ்தலம் ஈழத்தின் பழம்பெரும் சைவ ஸ்தலங்களிலொன்று. நாயன்மார்களினால் பாடல் பெற்ற இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தை அதன் பழம் பெருமைக்குத் திருப்பிக் கொண்டுவர ஸர் கந்தையா படாத பாடு பட்டார். பல லட்சம் ரூபாய் செலவில் ஆலயத்தில் கருங்கல் திருப்பணி செய்து, தமது ஜீவிய இலட்சியம் பூர்த்தியடைந்த பின்னர் அதே ஸ்தலத்தில் திருக்கேதீச்வர ஆலய நிழலிலேயே அவருடைய ஆவி பிரிந்தது, அந்தப் புண்ணிய ஆத்மாவின் பெருமையைக் குறிக்கிறது. அவருடைய இந்தப் பெரும் பணி சைவ உலகில் அவருடைய திருநாமத்தை என்றென்றும் நிலைத்திருக்கச் செய்துவிட்டது.

ஸர் கந்தையா லௌகிக வாழ்க்கையில் வகிக்காத உயர் பதவிகள் இல்லை. பார்க்காத நாடு இல்லை. சிவில் சேவையில் நீதிபதியாகவும், அரசாங்க அதிபராகவும், வெளி நாட்டுப் பாதுகாப்பு இலாகா நிரந்தரக் காரியதரிசியாகவும், செனட்டராகவும், வீடமைப்பு மந்திரியாகவும் அவர் கடமையாற்றினார். 1956ம் வருடத் தேர்தலில் அவருக்குத் தோல்வி ஏற்பட்டது ஈசுவரகிருபை என்றே கூறவேண்டும். இல்லாதபட்சத்தில் ஈழத்தின் பழம் பெரும் சிவ க்ஷேத்திரமான திருக்கேதீச்வரம் இன்றுள்ள உன்னதமான நிலைமையை ஒருபோதும் அடைந்திருக்க மாட்டாது. அரசியலாருக்கு ஏற்பட்ட நஷ்டம் சமயத்துக்குக் கிடைத்த பேரதிர்ஷ்டமாக அமைந்தது, சைவ உலகம் செய்த பாக்கியமேயாகும். வாழ்க ஸர் கந்தையா நாமம். வளர்க அவர் ஆரம்பித்து வைத்த திருப்பணிகள்.

ராஜாஜியின் கருத்துக்கள்

ஸ்ரீ மஸானி சமய சந்தர்ப்பம் பாராமல் சர்க்கார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார் என்கிற குற்றச்சாட்டை நான் ஒப்புக்கொள்வதற்கில்லை. வெறும் மாயத் தோற்றங்களையே எண்ணிக் கொண்டிராமல் அவ்வப்போது பிரத்யட்ச நிலைக்கு முகம் கொடுத்து நிற்கத்தான் வேண்டும். வெளியார் ஆக்கிரமிப்பு இருக்கிறது என்பதால் உள்நாட்டு நிலை சீர்கெட அநுமதிக்கலாகாது. யுத்தம் வலுத்தால், அதற்கேற்ப உற்பத்தியும் அதிகரித்தேயாக வேண்டும்.

தேசியப் பொருளாதார ஆராய்ச்சிக் கழகத்தின் அறிக்கையைப் பார்த்தால் நமது பொருளாதார நிலை புரியும். பெர்மிட் லைசென்ஸ் ராஜ்யத்தின் கீழ் ஒரு சலுகை வர்க்கம் உருவாகிச் செழிப்படைந்து வருவதால் தேசத்தின் வருமானப் புள்ளி விவரத்தைப் பார்த்தால் ஓரளவு நல்ல பலன் ஏற்பட்டிருப்பதாகப் பிரமை ஏற்படும். ஆனால் வருமான வர்க்கங்களை இனவாரியாகப் பிரித்துள்ள கழகத்தின் அறிக்கை உண்மை நிலையை உள்ளபடி கூறுகிறது. கிராமப்புறத்தில் உள்ளவர்களின் சராசரி தினப்படி வருமானம் அறுபத்தெட்டே பைசா என்று அறிக்கை கூறுகிறது. மிகவும் தாழ்ந்த மட்டத்தில் நாளொன்றுக்குச் சராசரி இருபத்தேழே பைசா வருமானம் பெறுவோர் இருக்கிறார்கள். சோஷலிஸம் என்ற வேஷதாரிக் கொள்கையும், ஐந்தாண்டுத் திட்டங்களுமே இந்நிலைக்குக் காரணம் என்று ஸ்ரீ மஸானி விளக்கினார்.

இரண்டாம் யுத்தத்துக்கு முன் நமது ரூபாய் பெற்றிருந்த மதிப்போடு அதன் இன்றைய மதிப்பை ஒப்பிட்டால் உள்நாட்டில் ஒரு ரூபாய் என்பது பதினாறு பைசாவுக்குத்தான் சமானம். அந்நியச் செலாவணியில் அதன் மதிப்பு அமெரிக்கச் சதத்தில் பத்து தான். நாம் பாகிஸ்தானோடு போர் புரிய வேண்டுமென்பதால் இந்த உண்மைகளை ஒளிக்கத்தான் வேண்டுமா? பார்லிமெண்ட் விவாதத்தைத் தடுத்தாலும் பாகிஸ்தானுக்கே இந்த உண்மைகள் தெரியும். உற்பத்தி குன்றிய நிலையிலும் யுத்தம் செய்து வெல்ல முடியும் என்று தவறாக நினைத்துப் போர் முழக்கம் செய்பவர்களை விட, உள்நாட்டில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைச் சுட்டிக் காட்டுபவர்களே உண்மையான தேச சேவை செய்கிறார்கள். நமது உள்நாட்டு நிலையைத் திருப்திகரமாக மாற்றி அமைத்தால்தான் இருமுனைகளில் பாகிஸ்தானுடனும் சீனாவுடனும் வெற்றிகரமாகப் போர் புரிய முடியும் என்பதை அரசாங்கத்தினர் உணர வேண்டும்.

வெளி விவகாரங்களில் நாம் செய்ய வேண்டியதென்ன என்றும் ஸ்ரீ மஸானி எடுத்துக் கூறினார். வியட்நாமில் அமெரிக்கா எத்தகைய சங்கட நிலையில் உள்ளது என்பதை நாம் அநுதாபத்துடன் புரிந்துகொண்டு, நமது கொள்கையை மாற்றி அமைத்துக் கொண்டால்தான் இன்றைய நெருக்கடியில் பாதுகாப்பு வசதி பெற முடியும் என்று அவர் எடுத்துக் காட்டினார்.

ஃ ஃ ஃ

மகேந்திர ஜாலம் என்று ஒரு செப்பிடி வித்தை உண்டு. ஜாலக்காரன் ஒரு கயிற்றைச் செங்குத்தாக நிறுத்தி அதன் மீது ஏறி அந்தர்தானமாவது போல் பிரமையை உண்டாக்குவான். நேரு அவர்கள் தந்துள்ள திட்டப் பிதுரார்ஜிதம் இந்த மகேந்திர ஜாலத்தைச் சேர்ந்ததுதான். எதுவுமே நடக்காத போதிலும், ஏதோ அற்புதம் நடந்து விட்டது போல் பிரமை மட்டும் ஏற்படுத்துகிறார்கள்.

இந்தத் திட்டங்களுக்காக எவ்வளவு ஆயிரம் கோடிகள் செலவாயின என்பதை அறிவோம். நம் மக்கள் தந்த வரிப் பணமும் வெளி நாட்டிலிருந்து வந்த கடன் பணமுமாகச் செலவிட்டோம். ஆனால் இவ்வளவு செலவழித்தும் ஒரு சில சலுகை வர்க்கத்தினர் தவிரப் பொதுமக்கள் பதினைந்தாண்டுகளுக்கு முன்னிருந்ததைவிட மகிழ்ச்சியான வாழ்க்கை நிலை பெற்றிருக்கிறார்களா? இதுவே அல்லவோ முக்கியமான கேள்வி. சமூக நலன் பற்றிய மற்றப் பேச்செல்லாம் வெறும் புரளியும், மாயமுமேயாகும். ஆயினும் இந்த மாயையை மக்கள் நம்பி, மாயாவிகள் தொடர்ந்து மகேந்திர ஜாலம் புரிய அநுமதித்து வருகின்றனர்.

தேசம் நாசமாயினும் சரி, அதிகாரத்தை விட்டுக் கொடுப்பதில்லை என்ற பிடிவாதத்துடன் ஆட்சியாளர்கள் கொள்கைகளை விடாமல் தொடர்ந்து வருகிறார்கள்.

ஃ ஃ ஃ

பெரிய தொழிலகங்கள் காங்கிரஸின் தேர்தல் நிதிக்காக இரண்டு கோடி ரூபாய் வசூலித்துத் தர வேண்டும் என்று நிதி மந்திரி உத்தரவிட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். காங்கிரஸே தொடர்ந்து ஆட்சியில் அமரும் என்றும் அவர் கூறியிருக்கிறார். இதைத் தொழிலதிபர்களுக்குத் தந்த வாக்குறுதியாகவும் கருதலாம்; அல்லது அச்சுறுத்தலாகவும் கருதலாம். சர்க்கார் நடத்தும் அதிகாரத்தைக் காங்கிரஸ் கட்சியே பெற வேண்டும் என்பதற்காகத் தனியாரிடமிருந்து நிர்ப்பந்த நன்கொடை வசூலிப்பது, சர்க்கார்—தனியார் இருவரும் ஒத்துழைக்கும் 'கலப்புப் பொருளாதாரத்'தின் ஒரு விந்தையான வடிவம்!

இதுபோல் ஆட்சி அதிகாரத்தைக் காட்டிக் கட்சிக்குப் பணம் சேர்ப்பது பற்றிப் பிரிட்டனின் நிதி மந்திரி எண்ணியேனும் பார்க்க முடியுமா? அவ்வாறு செய்தால் அவரைப் பதவி நீக்கம் செய்து அரசியலிலிருந்தே வெளியேற்றி விடுவார்கள். பெரிய

தொழிலதிபர்கள் மூலம் பணம் திரட்ட நிதி மந்திரி தாக்கீது பிறப்பித்திருப்பது உண்மையாயின், இந்தப் பண பலத்தைக் கொண்டு நடக்கும் தேர்தல் வெற்றியை எந்தச் சுதந்திரமான ஹைகோர்ட்டும் ஒப்புக்கொள்ளுமா? ஆனால் இந்தியாவில் இந்த வெட்கங்கெட்ட நிலைமை 'வாடிக்கை'யாகி விட்டது. இதிலிருந்து வெளியேறும் மார்க்கத்தை மக்கள் அறியவில்லை. எனினும் அவர்களுடைய வாக்குச் சீட்டின் சக்தியில்தான் தேசத்தின் நம்பிக்கை உறைந்திருக்கிறது.

ஃ ஃ ஃ

காங்கிரஸ் கட்சியின் பார்லிமெண்ட் அங்கத்தினர்களுடைய கூட்டம் நடைபெற்றபோது, அக்கட்சி அங்கத்தினர்கள் பலர் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும், பண வீக்கத்தைத் தடுக்க வேண்டுமென்றும், மூலதனம் சேர வசதி அளிக்க வேண்டுமென்றும் நிதி மந்திரியிடம் வற்புறுத்தியதாக 'ஹிந்துஸ்தான் டைம்'ஸின் விசேஷ நிருபர் ஆகஸ்ட் முப்பதாந் தேதியன்று எழுதியிருக்கிறார். காங்கிரஸ் அங்கத்தினர்கள் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்ட நிலைக்காகக் கவலைப்பட்டு இவ்விதம் கூறியிராவிடினும், 1967ல் மக்களிடம் வாக்குப் பெற்றாக வேண்டும் என்ற விசாரத்திலாவது இவ்வாறு யோசனை சொல்லியிருப்பார்கள். நாசகரமான திட்டங்களைப் பின்பற்றிவிட்டு, நாசத்தை மட்டும் தடுக்க முயல்வது அசாத்தியம். ஏழைகள் தாங்கக் கூடிய பளுவுக்கும் ஓர் எல்லை உண்டு. வெளி நெருக்கடியால் கூட அந்த எல்லையை விஸ்தரிக்க முடியாது. இன்றோ நிதி மந்திரியின் தவறுதல்களால் விளைந்துள்ள உள்நாட்டு நெருக்கடி வெளி நெருக்கடியை விட உக்கிரமாக உள்ளது.

ஃ ஃ ஃ

'பிளாக் டிவலப்மெண்ட்' ஜீப்களைத் தேர்தல்களின்போது உபயோகப்படுத்தாமலிருப்பதற்காகக் கலெக்டர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்தே சென்ற தேர்தல்களின்போது ஆள்கிற கட்சி இந்த ஜீப்களை துஷ்பிரயோகம் செய்துகொண்டதற்கு அழுத்தமான அத்தாட்சி கிடைக்கிறது. இதற்காக அவமானமோ, பச்சாத்தாபமோ தெரிவிக்கப்படாமல், வெறும் காரியாலய நடைமுறையில் மாறுதல் செய்வதுபோல் புது உத்தரவு வெளியாகியுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் ஒழுங்கீனமான பல நடவடிக்கைகளில் ஒன்றுதான் ஜீப் துஷ்பிரயோகம். எதையும் நம்புகிற எளிமையும், கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் சத்தியமும் நம் மக்களின் நற்பண்புகள். இவற்றை உபயோகப்படுத்திக் கொண்டே காங்கிரஸ் அவர்களை ஏமாற்றி, லஞ்சப் பணத்துக்கு வோட்டுப் பெற வாக்குத் தத்தமும் வாங்க முடிகிறது. பல நாட்களாகத் தொகுதிக்குச் செய்யாதிருந்த சௌகரியங்களைத் தேர்தல் சமயம் பார்த்து, சர்க்கார் செலவில் செய்து தருகிறார்கள். சாதி பேதங்களைத் தங்களுக்கு அநுகூலமாக்கிக் கொள்ளுகிறார்கள்.

காங்கிரஸுடைய தேர்தல் தந்திரங்களின் பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம்.

காங்கிரஸ்காரர்களைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. அவர்கள் அதிகாரத்தைச் சுவைத்துவிட்டார்கள். அதன் விளைவே இவையாவும்.

ஃ ஃ ஃ


காங்கிரஸார் நேர்மையான முறையில் ஆட்சிக்கு வராவிடினும், ஆட்சியேனும் நன்றாக நடைபெற்றால் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் நாம் காண்பதென்ன? வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்த தானியங்களை 'ரேஷன்' பெறுவதற்காக மக்கள் ''க்யூ''வில் நிற்கிறார்கள். சுதந்திரமில்லாத நாடு நாடே அல்ல. மக்களின் சுதந்திரங்களை எவ்வளவுக்கு அரசாங்கம் பறிக்கிறதோ, அவ்வளவுக்கு அவர்களுடைய தேசப் பற்றையும் பறித்து விடுகிறது. மக்களின் சம்பாத்தியத்தையும் சேமிப்பையும் எவ்வளவுக்கு அரசாங்கம் பறிக்கிறதோ அவ்வளவுக்கு அவர்களுடைய தொழிலூக்கத்தையும் பறித்து விடுகிறது. ஓர் அளவைக் கடந்தபின் உழைக்க வேண்டும் என்கிற விருப்பத்தையும், உழைக்கும் திறனையுமே மக்கள் இழந்து விடுகின்றனர். அதாவது தேசம் தனது தலைசிறந்த செல்வத்தை இழந்து விடுகிறது.

ஃ ஃ ஃ

சில சட்டங்களை ரத்து செய்யாவிடினும், காலக் கிரமத்தில் அவற்றை மறந்துபோகும்படி விட்டுவிடுவதே நன்மை பயக்கும். இவ்வாறு, ரௌலத் சட்டம் ரத்தாகாவிடினும் நாளாவட்டத்தில் அதை மறந்தோம். ஆட்சி மொழி பற்றிய சாஸனத்தின் பதினேழாவது பகுதியை ரத்துச் செய்யக் காங்கிரஸுக்குத் தைரியமில்லாவிடினும், அதை மறந்துபோகுமாறு விட்டுவிடலாம். சர்க்காரின் தலையீடின்றியே நமது மொழிகளும் இலக்கியங்களும் சுதந்திரமாக வளரட்டும். நூறாண்டுகளுக்கு மேலாகச் சுலபமாகவும், தெளிவாகவும், திருப்திகரமாகவும் பயனாகி வந்த அகில தேசப் படிப்பாளிகளின் மொழியான ஆங்கிலமே மத்திய ஆட்சி மொழியாகவும், ராஜ்யங்களிடையே தொடர்பு மொழியாகவும் நீடிக்கட்டும், ஹிந்தி பேசாதவர்கள் சற்றும் விரும்பாத மொழித் திட்டத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ அமுல் செய்ய இப்போது முயல வேண்டாம்!

ஃ ஃ ஃ

நான்காவது திட்டத்தில் 'நெகிழ்ச்சி' காட்ட முடியாது என்று தில்லி பிடிவாதமாக முடிவு செய்துவிட்டது. திட்டம் ரப்பரால் செய்ததல்ல; எனவே அதை நெகிழச் செய்ய முடியாது என்பது நிதி மந்திரி அவர்களின் கருத்து. அதற்குப் பதில் மக்களையே திட்டத்துக்குத் தகுந்தபடி ஆயுதப் பிரயோகத்தால் 'நீட்டி'விடலாம் என்று கருதுகிறார். வீராப்பு வீழ்ச்சிக்கு வழிகாட்டும்; அகம்பாவம் அழிவுக்கு வழி செய்யும்.



அண்ணா பிறந்த நாள்

இவ்விதழ் அட்டையில் தி. மு. க.வின் தனிப் பெருந் தலைவர் திரு ஸி. என். அண்ணாதுரை அவர்களின் படத்தை வெளியிட்டு அவருக்குப் பிறந்த நாள் (செப்டம்பர் 15) வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

அரசியல் தலைவர்கள் என்பவர்கள் சில சமயங்களில் காலத்தை எதிர்த்தும் சில சமயம் காலத்தோடு ஒட்டியும் போக வேண்டும். இன்னும் சில சமயங்களில் எதிர் காலத்தை உய்த்துணர்ந்து, திட்டங்கள், கொள்கைகளில் மாறுதலியற்றி முன்னேறிச் செல்ல வேண்டும். இவற்றுக்கெல்லாம் நுணுக்கமான அறிவு பெற்றிருக்க வேண்டும். அத்தகைய அறிவும் ஆற்றலும் பெற்ற தலைவர் திரு ஸி. என். அண்ணாதுரை அவர்கள் என்பது அவரது அரசியலைச் சென்ற பதினைந்து ஆண்டு காலமாகக் கவனித்து வந்தவர்களுக்குத் தெரியும்.

1957ம் ஆண்டில் தி.மு.க. தன்னை ஒருசட்ட சபைக் கட்சியாகத் தேர்தலில் போட்டியிடும் கட்சியாக—மாற்றிக் கொள்ளத் தீர்மானித்ததே அதன் தலைவரின் சிறந்த ராஜதந்திரத்தை எடுத்துக் காட்டியது.

'தி. மு. க. வும் அண்ணாதுரையும் தமிழகத்தோடு நின்றுவிட வேண்டியவர்கள். இங்கே அவர்கள் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி விட்டால் அப்புறம் கவலையில்லை' என்று காங்கிரஸ்காரர்கள் 1962-ம் தேர்தலில் அண்ணாதுரை வெற்றி பெறாமல் செய்யப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். அவை உண்மையில் அண்ணாதுரைக்கு வெற்றியாகவே முடிந்தது. காஞ்சி சென்னை சட்ட சபைத் தொகுதியில் தோற்ற அண்ணாதுரைக்குத் தில்லி ராஜ்ய சபைக்குச் செல்லும் வாய்ப்பையும் வெற்றியையும் தேடித் தந்தது. தமிழகத் தலைவராக மட்டும் இருந்த ஸி. என். ஏ. அகில இந்தியத் தலைவராகும் வாய்ப்பைக் காங்கிரஸ்காரர்கள் ஏற்படுத்திக் கொடுத்து விட்டார்கள். அந்த அளவுக்கு நாம் காங்கிரஸ்காரர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

தில்லி மக்கள் சபையிலும் ராஜ்ய சபையிலும், இச் சபைகளுக்கு வெளியிலும் ஹிந்தி ஆட்சி மொழியாவதைத் தீவிரமாக ஆதரித்து வெறி பிடித்துப் பேசியவர்கள் இப்பொழுது அவ்வளவு வேகமாகப் பேசுவதில்லை. இதற்கு முக்கிய காரணம் திரு ஸி. என். ஏ. அவர்களின் ராஜ்ய சபைப் பிரசங்கங்கள். காரண காரியங்களை விளக்கி, எதிராளியின் கஷ்டங்களை உணர்ந்து அதற்குத் தக்கபடி தமது வாதங்களை வகுத்து அண்ணாதுரை உண்மையான உணர்ச்சியோடு நிகழ்த்திய உரைகள் மாற்றாரின் மனத்தையும் பெரிதும் கவர்ந்துள்ளன.

காங்கிரஸார், அவசர காலச் சட்டத்தின் கீழ்ப் பிரிவினை பற்றிப் பேசுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று அரசியல் நிர்ணயச் சட்டத்துக்கே ஒரு புதிய திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அதாவது, தி.மு.க.வின் ஆயிரக்கணக்கான தொண்டர்களைச் சிறையில் அடைத்து, கட்சியையே நசுக்கிவிட காங்கிரஸார் திட்டம் வகுத்தனர். மிகவும் இக்கட்டான இந்த நிலையில் எப்படிப்பட்ட தலைவருக்கும் சிந்தனை மழுங்கத்தான் செய்யும். அத்தகையநிலையில் சிந்தையைத் தெளிவு படுத்திக் கொண்டு மிகவும் தீரமானதொரு செயல் புரிந்தார். நீலகண்டன், விஷத்தைத் தான் வாங்கிக் கழுத்தில் அடக்கிக் கொண்டு, உலகை உய்வித்தாற் போல், 'அண்ணாதுரை கொள்கையைக் கைவிட்டவர்' என்ற கெட்ட பெயர் தமக்கு வந்தாலும் பரவாயில்லை, தி. மு. கட்சியைச் சாகவிடக் கூடாது என்று தீர்மானித்தார். தி. மு. க. பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டது என்று அறிவித்த வுடனேயே, காங்கிரஸ்காரர்கள் ஏமாந்து போனார்கள். தி. மு. க.வின் செல்வாக்கும், திரு ஸி. என். ஏ. அவர்களின் செல்வாக்கும் இன்னும்-பன்மடங்காகி விட்டன. இன்று பாரத நாட்டில் 'நான் தி. மு. க. அநுதாபி' என்று சொல்லிக் கொள்வதில் வெட்கமோ, தாழ்வு மனப்பான்மையோ கொள்ள வேண்டிய அவசியமில்லை என்ற நிலையை ஏற்படுத்திவிட்டார் அண்ணாதுரை அவர்கள்.

சமீபத்தில் திரு அண்ணாதுரை அவர்கள் கிழக்காசிய நாடுகள் பலவற்றைச் சுற்றிப் பார்த்து விட்டு வந்திருக்கிறார். அங்கெல்லாம் தனி நபர் முயற்சியின், சுதந்திரப் பொருளாதாரப் போட்டித் தொழில் முறையில் தொழில்கள் பெருகி யிருப்பதையும், சுபிட்சம் கொழிப்பதையும் கண்ணாரக் கண்டும், காரணங்களைக் காதாரக் கேட்டும் வந்திருக்கிறார். அதன் அடிப்படையில் அவர் அகில இந்திய ரீதியிலும், தமிழ் நாட்டிலும் வேலை செய்வாராகில் அடுத்த தேர்தலில் தமிழகத்தில் தி. மு. க. ஆட்சியையும், தில்லியில் இன்றுள்ள எதிர்க்கட்சியின் ஆட்சியையும் நிலை நிறுத்தலாம். பாரத மக்கள் திரு அண்ணாதுரை அவர்களுக்கு நன்றியும் வாழ்த்துக்களும் தெரிவிப்பார்கள்.



திரு ஸி. என். ஏ.



சிலந்தி வலை மர்மம்!

உலகத்திலேயே இருபத்தையாயிரம் வகைச் சிலந்திகள் உள்ளன. சிலந்தியின் வலை கால் ரூபாய் எடைகூட இல்லாமல் இருந்தபோதிலும், அதை நீளமாக அவிழ்த்துப் பார்த்தால், அது 370 மைல் தூரம் வரை நீள்கிறதாம். அந்த வலையின் நூலைப் போன்ற ஆயிரம் நூலை ஒன்றாகச் சேர்த்தால் அது தலைமயிரைப் போல் கனமாக இருக்குமாம்.

— வி. எஸ். ராஜகோபால்

குளித்த சாதம்!

என் தங்கைக்கு ஒரு மகன். கணபதிராமன் என்று பெயர்.

ஒரு நாள் கணபதிராமன் மிக வருத்தத்தோடு, கண்கள் சிவக்க நின்றிருந்தான். அவனது கோபத்துக் கான காரணத்தைத் தங்கையிடம் விசாரித்தேன்.



அவள் சொன்னாள்: "அமாவாசையும் அதுவுமாக அவனுக்குப் பழைய சாதம் போட வேண்டுமாம்........"

அவனைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் இறங்கினேன். "என்னடா, கணபதி நல்ல நாளும் அதுவுமாகப் பழைய சாதம் சாப்பிடலாமா? போ, சமர்த்தாகக் குளித்து விட்டு வா. அதற்குள் சமையல் முடிந்து விடும். கடச் கடச் சாப்பிடலாம்" என்றேன்.

அதற்கு அவன், "போ, பெரியம்மா. நான் குளிக்காட்டா என்ன.... சாதந்தான் குளிச்சிருக்கே...." என்று கூறினான்.

'அமாவாசையன்று குளித்த சாதம் போட்டால் என்ன? அது தூய்மையானதுதானே!' என்ற கேள்வி அவனுடையது.

— மீனாட்சி

தனி மனிதன் அளித்த சொத்துரிமைக்கு நெப்போலியன் அளித்த மதிப்பு

"நெப்போலியனுக்குக் குழந்தை பிறந்தவுடன், அந்தக் குழந்தைக்குத் தனியாக ஓர் அரண்மனை கட்ட நினைத்தான். அதற்காக பான் டி திருவுக்கு எதிரில் உள்ள எல்லா வீடுகளும் விலைக்கு வாங்குவது எனத் தீர்மானிக்கப் பட்டது. அவற்றில் ஏழை ஒருவனின் சிறு வீடும் இருந்தது.



அதன் அதிக மதிப்பு ஆயிரம் பிராங்குகள்தான் பெறும். ஆனால் அதன் சொந்தக்காரனோ பத்தாயிரம் பிராங்குகள் கேட்டான். அதிகாரிகள் அரசனிடம் இதனைத் தெரிவித்தார்கள். 'சரி. கொடுத்து வாங்கி விடுங்கள்' என்றான் நெப்போலியன்.

தொகையைக் கொண்டு போய்க் கொடுத்துக் கிரயம் எழுதப் போகும்போது முப்பதாயிரம் பிராங்குகளுக்குக் குறைவாக அந்தக் கொடுப்பதில்லை எனத் தான் முடிவு பண்ணிவிட்டதாகக் கூறினான் வீட்டின் சொந்தக்காரன்.

மீண்டும் நெப்போலியனிடம் சென்று செய்தி அறிவிக்கப்பட்டது. அதற்கும் நெப்போலியன் சம்மதித்து முப்பதாயிரம் பிராங்குகள் கொடுத்து வாங்கி விடுங்கள் என்றான். அதன்படி பத்திரம் எழுத வந்தபோது நாற்பதாயிரம் கொடுத்தால்தான் கொடுப்பேன்; விருப்பமானால் வாருங்கள் என்றான் வீட்டுக்குரியவன்.

மறுபடியும் அரசனிடம் போய் இதைத் தெரிவித்தார்கள். போனால் போகட்டும், வாங்கி விடுங்கள் எனக் கட்டளையிட்டான் காவலன்.

ஆனால், மறுபடியும் வீட்டின் சொந்தக்காரன் ஐம்பதாயிரம் கொடுத்தால் விற்பேன்; இன்றேல் விற்கப் போவதில்லை என்றான்.

இதை அறிந்த நெப்போலியனுக்குக் கோபம் வந்து விட்டது. 'அந்த வீட்டை வாங்க வேண்டாம். சட்டத்துக்கும் தனி மனிதனின் சொத்துரிமைக்கும் நான் அளிக்கும் மதிப்பாக அவ்வீடு அங்கேயே இருந்து போகட்டும்' என்றான்.

ஆதாரம்: ஹாசிலெட் எழுதிய நெப்போலியனின் வாழ்க்கை வரலாறு. - வெ. வரதராசன்

குருவியின் வஞ்சம்




மூன்றாண்டுகளுக்கு முன்னர் செஞ்சீன குருவிகளைக் கொல்லும் வாரம் அனுஷ்டித்தது. சலிக்கமில்லாமல் இலட்சக்கணக்கான குருவிகளை அழித்தனர் சீனர்கள். இந்தப் பயங்கர அழிப்புக்குக் காரணம்: இச்சின்னஞ்சிறு பறவைகள் நெல்லையும் இதர தானியங்களையும் தின்றுவிடுவதின் மூலம் உற்பத்தியில் நஷ்ட மேற்படுத்தினவாம். ஆமாம்! அந்தத வருஷ விளைச்சல் எப்படி? முன்னர் இருந்ததைவிடப் படுமோசம்.

குருவிகள் மடிந்துவிட்டன. ஆனால் குருவிகளுக்கு இரையாகி வந்த புழு பூச்சிகள் தங்குதடையின்றிப் பெருகி, தானியத்தைப் பன்மடங்கு தின்று தீர்த்து விட்டன! எப்படிச் செஞ்சீனப் பொருளாதாரம்!

-- பாகுக்

பல்சுவைப் பக்கம் 2



புள்ளி விவரங்கள்

நாட்டிலே மக்களின் தொகை ஏராளமாக இருக்கிறது. ஆயினும் நாட்டு அலுவல்களைக் கவனிப்பவர்கள் எத்தனை பேர்? புள்ளி விவரக் கணக்கு எடுக்கப்பட்டபோது தெரிய வந்த உண்மை இது:

நகரங்களில் உள்ள மக்கட் தொகை		164000000
கிழவர்கள்	...	45000000
	மீதி	119000000
குழந்தைகள்	...	57000000
	மீதி	62000000
அரசாங்க உத்யோகஸ்தர்கள்	28000000	
ராணுவத்தில் உள்ளவர்கள்	10000000	
அரசாங்கக்கார்ப்பரேஷன் அலுவலகங்களில்	20000000	
		58000000
	மீதி	4000000
மருத்துவ மனை நோயாளிகள்	3800000	
வெளிநாட்டில் செல்லுவோர்	175000	
சிறைகளிலும் மன நோய் விடுதிகளிலும்	24998	3999998
நாட்டு அலுவல்களைக் கவனிக்க மீதி உள்ளவர்கள்		2

! இந்த இருவரும் யார், தெரியுமா? வேறு யாருமில்லை. நீங்களும் நானுமேதான்!

மேன்மக்கள் மேன்மக்களே !



நவகாளி யாத்திரைக்குப் பின்னர் கல்கத்தா திரும்பினார் காந்திஜி. நகரம் முழுவதும் வகுப்புக் கலவரத்தால் ரத்தக் களரியாகி காந்திஜி மன வேதனையால் அழுத்துக் கொண்டிருந்தார். அவருக்குச் சமாதானம் இருக்கவில்லை. ஒரு கோப்பை வெந்நீரில் எலுமிச்சைச் சாறு கலந்துக் குடித்துவிட்டுப் பின்னர் உண்ணாவிரதம் மேற்கொள்வதென்று முடிவு செய்து அதற்கான அறிக்கையைத் தயாரித்துக் கொண்டிருந்தார். அப்போது ராஜாஜி காந்திஜியைக் காண வந்தார்.

ராஜாஜியிடம் தாம் தயாரித்த அறிக்கையைக் கொடுத்தார் காந்திஜி. அதைப் பார்த்துவிட்டு, "நீங்கள் மேற்கொள்ளும் போதும் நடவடிக்கையை நான் ஏற்றுக்கொள்வேன் என்று எதிர்பார்ப்பதில்லை" என்று வழக்கமான அன்புடன் கூறினார் ராஜாஜி. "உண்ணாவிரதம் காரணமாக நீங்கள் இறக்க நேரிட்டால் நிலைமை இன்னும் சீர்கெட்டுவிடும்" என்றார்.

"அந்த நிலைமையை நான் பார்க்காமலாவது இறந்துவிடுவேன். என் கடமையை நான் செய்தே தீரவேண்டும்" என்று முடிவாகக் கூறிய பின் அதற்கு மேல் ராஜாஜி அவரை வற்புறுத்தவில்லை.

தென் ஆப்பிரிக்காவில் பதினைந்து நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டபோது தண்ணீர் மட்டும் குடித்து வந்தது அவருக்கு ஒத்து வராததால் இப்போது அதோடு எலுமிச்சம்பழச் சாற்றையும் சிறிது சேர்த்துக் குடிப்பது என்று முடிவு செய்தார் காந்திஜி.

"உங்களையே நீங்கள் கடவுளிடம் ஒப்படைத்துக் கொள்ள இருக்கும்போது தண்ணீருடன் எதற்காக எலுமிச்சம் பழச்சாற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்?" என்று கேட்டார் ராஜாஜி.

"நீங்கள் சொல்வது நியாயம்தான். இது என் பலவீனத்தைத்தான் காட்டுகிறது. இந்த வாசகத்தை அறிக்கையில் எழுதும்போது எனக்கே உறுத்தலாகத்தான் இருந்தது....."

காந்திஜியின் அறிக்கையிலிருந்து எலுமிச்சம் பழச் சாறு சேர்த்துக் கொள்வதாக இருந்த வாசகம் நீக்கப்பட்டுவிட்டது. அதன் பிறகுதான் அறிக்கை பத்திரிகைகளுக்கு வெளியிடப்பட்டது.



பியாரிலால் அவர்கள் எழுதிய "மகாத்மா காந்தி - இறுதிக் கட்டம்" என்ற நூலிலிருந்து.

-தகவல்: ஸ்ரீதேவி

● காலை நேரத்தின் தெம்பு மாறி, மத்தியான வெயிலில் களைப்பு மேலிடும்போது, வேலையின் சுமையால் கால் நரம்புகள் தளரும்போது, செல்ல வேண்டிய பாதை முடிவற்றுத் தெரியும்போது, உங்கள் நோக்கம் எதுவுமே நிறைவேறாத நிலைமையில் - அந்தக் கட்டத்திலேதான் நீங்கள் தயங்காமல் மேலே நடக்க வேண்டும். ● சௌஜன்யத்தைக் கருதிக்கூட உனது அநுபவத்தை மறக்காதே. சமாதானத்தைக் கருதிக்கூட உனது கொள்கைகளைக் கைவிட்டுவிடாதே. ● தான் அதிகாரத்தில் இருப்பதின் அவசியத்தைத் தினம் புலப்படுத்தி வருபவனே அதிகாரத்தை வகிக்கத் தகுதியுடையவன்-



''எங்கள் ஆபீஸுக்குத் திறப்பு விழா நடத்திய தாங்களே மூடு விழாவையும் சிறப்பாக நடத்திக் கொடுக்க வேண்டும்.''

இவை வாராதவை !

எத்தனையோ சினிமாப் படங்கள் கற்பனையில் பிறந்து, திட்டத்தில் வளர்ந்து திரைக்குவராமலேயே மறைந்துவிடுகின்றன.


○ ஒரு காலத்தில் ஜனாப் ஜின்னாவின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக்க பம்பாய்த் தயாரிப்பாளர் ஒருவர் திட்டமிட்டார். நடிகர் கே. என் சிங் ஜின்னாவாக நடிப்பது என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் அரசியல் தகராறுகள் தோன்றும் என்று இந்தத் திட்டம் கடைசியில் கைவிடப்பட்டது.

○ பிரகாஷ் கம்பெனியார் புத்தரின் ஜீவிய சரித்திரத்தை ஒரு முழு நீளத் திரைக் காவியமாக்கத் திட்டமிட்டனர். இதற்காகப் பெரும் ஆராய்ச்சிகளும் செய்யப்பட்டன. ஆனால் இலங்கைவாழ் பௌத்தர்கள் இந்தத் திட்டத்தைத் தீவிரமாக எதிர்த்ததன் காரணமாக இந்த முயற்சியும் கைவிடப்பட்டது.

○ ''பிரபாத் மிகப் பிரபலமாக இருந்த காலத்தில் உமர்க்கய்யாமின் வாழ்க்கைச் சரிதையைத் திரைப்படமாக்குவதென்றும், அதனைச் சாந்தாராம் டைரக்ட் செய்வதென்றும் திட்டமிடப்பட்டது. கதாநாயகனுக்குப் பொருத்தமாக எந்த நடிகரும் அகப்படவில்லை. பொதுமக்களிடமிருந்து, குறிப்பாக சினிமா ரசிகர்களிடமிருந்து யாரைக் கதாநாயகனாகப் போடலாம் என்பது பற்றி ஆலோசனைகள் வரவேற்கப்பட்டன.

○ யூஸுப் கான் என்னும் கல்லூரி மாணவர் ஒருவர் உர்து இலக்கிய சாம்ராட் பெஹ்ஸாத் லக்னவி கதாநாயகனாக நடிக்கப் பொருத்தமானவர் என்று ஆலோசனை கூறினார். எதுவும் தோதுக்கு வராமல் திட்டம் தேய்ந்தது. ஆனால் ஆலோசனை கூறிய அந்தக் கல்லூரி மாணவர் இன்று பிரபல நடிகராகிவிட்டார். அவருடைய திரைப்பெயர் - திலீப் குமார்! - ''கோவை''

உபகாரி உத்தண்டன்



சக்தி வாய்ந்த இந்த
பிரஞ்சு ஔஷதம்
திரும்பவும்
உங்களுக்குக் கிடைக்கிறது.



ரத்தத்தைச் சுத்தப்படுத்துகிறது. தோல்வியாதிகளிலிருந்து நிவாரணம் அளிக்கிறது.

காலில் ஏற்படும் ரணங்கள், மற்றும் சொறி சிரங்கு, படை, முகப்பருக்கள், கட்டிகள், கொப்பளங்கள், சீழ்ப் புண்கள் போன்ற அநேக சரும வியாதிகளுக்கு மூலகாரணம் அசுத்தமான ரத்தம்தான்.

இந்த விதமான நோய்கள் பலவற்றிற்கு மேல்பூச்சாகக் களிம்பையோ மருந்தையோ தடவுவதால் பிரயோசனம் இல்லை. சில நாட்களில் வியாதி திரும்பவும் வந்து விடுகிறது. சிலர் ஒவ்வொரு வருஷமும் சொறி சிரங்கு, கட்டிகள், முகப்பருக்கள், கால் ரணங்கள், சீழ்ப் புண்கள் போன்ற நோய்களால் வருந்துகிறார்கள். இந்த வியாதிகளின் அடிப்படைக் காரணம் ரத்தத்தில் இருக்கிறது.

ரிச்லேஸ் பிளட் பியூரி:பையர் (RICHELET'S BLOOD PURIFIER) சாப்பிட்டுப் பாருங்கள். ஆச்சரியகரமான அதன் சக்தியைக் கண்டு நீங்கள் அதிசயப் படுவீர்கள். சருமத்தின் ஆழமான பகுதிகளையும் அது சுத்தப்படுத்துகிறது. ரத்தம் சுத்தமாகிறது. விருத்தியாகிறது. மேல் புண்களும், படைகளும் மறைந்து சருமம் தனது இயற்கையான, ஆரோக்கியமான பளபளப்பைப் பெறுகிறது.

ரிச்லேஸ் லாக்ஸட்டிவையும் (RICHELET'S LAXATIVE) கல்லாஸ் ஆயின்ட்மென்டையும் (GALLA'S OINTMENT) உபயோகியுங்கள்.

ரிச்லேஸ்
பிளட் பியூரி:பையர்

எல்லா மருந்துக் கடைகளிலும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்.
விவரங்கள் அறிவிக்கும் இலவச அறிவிப்புக்கு (FOLDER) எழுதுங்கள்.

இந்தியா வெங்கும் ஏஜண்டுகள் தேவை. விண்ணப்பிக்கவும்:

இந்தியாவில் ஸோல் டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
மஹாஸ்வரி ஜெனரல் ஸ்டோர்ஸ்,
19/35, பெரிய கடை வீதி, கோயமுத்தூர்

புகழ் பெற்ற போலிகள்

இருந்தாலும் விளம்பரம்; இறந்தாலும் விளம்பரம்!

காசு பணத்துக்காகக் கபட நாடகம் ஆடி ஊரை ஏமாற்றுவதுதான் போலித்தனத்தின் அஸ்திவாரம். அதற்காகவேதான் போலிகளாக அவர்கள் மாறுகிறார்கள். அல்லது போலிச் சாதனங்களைக் கையாளுகிறார்கள். ஆனால் பெருமைக்காகவும் ரசிகத்தன்மைக்காகவும், எந்த அளவிலும் பிரதிபிரயோசனத்தை எதிர்பார்க்காமல் போலியாக மாறிய பெருமை ஸ்டான்லி வேமன் என்ற நபரையே சாரும்! ஆம்! அந்தப் பெயர்கூடப் போலிதான். செவிகளில் நன்றாக ஒலிக்கிறது என்ற காரணத்துக்காகச் சூட்டிக் கொண்ட பெயர்! அசல் பெயர் ஸ்டீபன் வின்பெர்க்.

1891ம் ஆண்டில் புரூக்ளின் பகுதியில் நேர்மையாகத் தொழில் நடத்தி வந்த எளிய குடும்பத்தில் ஸ்டீபன் வின்பெர்க் பிறந்தான். சற்றுக் குள்ளமான உருவம், கண்களில் ஒருவித தீக்ஷண்யம். வயதுக்கு மீறிய உலக ஞானம். இவை யெல்லாம் சேர்ந்த வின்பெர்க்குக்குத் தான் பெரியவனானும் போது ஒரு டாக்டராகப் பணி செய்ய வேண்டுமென்ற ஆசை. ஆனால் குடும்பச் சூழ்நிலை அவனைப் பள்ளிப் படிப்பை முடிக்கக் கூட அனுமதிக்கவில்லை. கூலியாள், குமாஸ்தா என்றெல்லாம் நேரத்துக்கேற்ற பல வேலைகளில் அவன் ஈடுபட வேண்டியதாயிற்று.

"வாழ்க்கை என்னை ஏமாற்றுகிறது. என்னை உதறிவிட்டுத் தள்ளிச் செல்கிறது. நான் அதை ஏமாற்றப் போகிறேன். என் முயற்சி தாற்காலிகமானதாக நிலையற்றதாக இருக்கலாம். ஆனால் அதைப் பற்றிக் கவலையில்லை. எனக்குப் பணம் வேண்டாம். நான்கு பேர் பார்வையும் கவனமும் விழும் நிலை வேண்டும்" என்று அடிக்கடி தனக்குத் தானே சொல்லிக் கொண்ட வின்பெர்க் தன் முயற்சியின் முதற்படியாகத் தன் பெயரை ஸ்டான்லி வேமன் என்று மாற்றிக் கொண்டான்.

ஸ்டான்லியின் நெடுநாளைய ஆசை உருவம் பெறுவதற்கான முதல் சந்தர்ப்பம் அவனுடைய இருபத்தைந்தாவது வயதில் தான் கிட்டியது. 1916ம் ஆண்டில் ஒருநாள் அவன் தன்னைத் திடீரென்று ஒரு ருமேனியப் படைத் தளபதியாகக் கற்பனை செய்து கொண்டான். டெலிபோனை எடுத்து வாஷிங்டன் நகரில் உள்ள கடற்படை இலாக்காத் தலைவருடன் தொடர்புகொண்டு ருமேனிய அரசாங்கத்தின் பிரதிநிதி என்ற ஹோதாவில் தன் அரசாங்கத்தின் மரியாதையைத் தெரிவிக்கும் வகையில் நியூயார்க் துறைமுகத்தில் இருக்கும் ஓர் அமெரிக்கப் படைக் கப்பலைப் பார்வையிடப் போவதாகவும் தெரிவித்தான்.

'ஆஹா! உங்களை வரவேற்கிறோம். எதிர்பார்க்கிறோம்' என்ற பதில் மறுமுனையிலிருந்து வந்தது. நிர்வாகத்தின் உயர்பதவியிலிருப்பவர்களும் இப்படி அநாயாசமாகவும், அலட்சியமாகவும் பேசினால் அவர்கள் நிச்சயம் சந்தேகப்பட மாட்டார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் இந்த முறையைக் கையாண்டான்.

மறு நாள், தங்க வெள்ளி நட்சத்திரங்கள் பதித்த படைத்தலைவன் உடையில் ஸ்டான்லி யு. எஸ். எஸ். வியோமிங் என்ற அமெரிக்கப் படைக் கப்பலுக்கு விஜயம் செய்தான். கடற்படையினரும் சிப்பந்திகளும் அணிவகுத்து நின்று மரியாதை செய்தார்கள். பிறகு ஸ்டான்லி, அந்தக் கப்பலின் உயர் அதிகாரிகள் அனைவருக்கும் நியூயார்க் நகர பிரபல ஹோட்டல் ஒன்றில் தடபுடலாக ஒரு விருந்து வைத்தான். 'பில்லை என்னுடைய அரசாங்கத் தூதுவரகத்துக்கு அனுப்பி வையுங்கள்' என்று ஹோட்டல் நிர்வாகிகளிடம் சொல்லி விட்டான். அவர்களும் அப்படியே செய்தார்கள்.

வாஷிங்டனிலிருந்து ருமேனியத் தூதரகம், அதைச் சேர்ந்த எந்தப் படைத் தலைவரும் இந்த விருந்தை ஏற்பாடு செய்யவில்லை என்று பில்லைத் திருப்பி அனுப்பிவிட்டது. ஹோட்டல்காரர்கள் தாங்கள் ஏமாந்து போனதை வெளியே சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் இருந்துவிட்டார்கள். ஆகையால் போலீஸாருக்கு, ஸ்டான்லியைத் தேடிக் கண்டுபிடித்துக் கைது செய்யும் வேலையில்லாமலே போய் விட்டது.

பண விஷயத்தில் ஸ்டான்லிக்கு இந்தச் சம்பவம் எந்த ஆதாயத்தையும் தேடித் தரவில்லை. ஹோட்டலில் விருந்து சாப்பிட்டதோடு சரி. ஆனால் தன்னுடைய மதிப்பு நிறைந்த கப்பல் விஜயத்தைப் பற்றி மாத்திரம் நினைத்து நினைத்துப் பூரிப்படைந்தான். அந்தப் பூரிப்பிலே அடுத்த ஐந்து வருடங்களை எங்கெங்கோ வேலை செய்து கழித்தான்.

1921ம் ஆண்டு ஜூலை மாதம். ஸ்டான்லி அப்போது புரூக்ளின் பாங்கி ஒன்றில் வேலை பார்த்து வந்தான். அப்போதுதான் மீண்டும் புகழ் ஒளியில் அவனை இழுத்த சம்பவம் நேர்ந்தது.

ஆப்கானிஸ்தானிலிருந்து இளவரசி பாத்திமா, தன் நாட்டின் சீர்குலைந்த பொருளாதாரத்தைச் சுட்டிக்காட்டி, அமெரிக்க அரசாங்கத்திடமிருந்து கடன் உதவி


பெற நியூயார்க் வந்து வால்டார்ப் அஸ்டோரியா ஹோட்டலில் தங்கியிருந்தாள். அமெரிக்க சர்க்கார் அந்த அம்மையார் வரவை அரசாங்க முறையில் ஏற்கவில்லை. பாத்திமா மனமுடைந்து போயிருந்தார். இந்த நேரத்தில்தான் ஸ்டான்லி அவருக்கு அபயம் கொடுக்க முன்வந்தான்.

தன்னை அமெரிக்க சர்க்காரின் ஓர் அண்டர் செக்ரடரி என்று அறிமுகப்படுத்திக் கொண்டு ஸ்டான்லி அந்த அம்மையாரை வாஷிங்டனுக்கு அழைத்துச் சென்றான். சில வெளிநாட்டு அதிதிகள் தங்கள் செலவைத் தாங்களே மேற்கொள்ள வேண்டும் என்ற ஏற்பாடுகள் நிலவுவதாகச் சொல்லி அந்த அம்மையார் கைப் பணத்தையே செலவழிக்கச் செய்தான். வாஷிங்டனில் இறங்கியதும் ஜனாதிபதியின் அந்தரங்கக் காரியதரிசிக்கு டெலிபோன் பண்ணினான். செக்ரட்டரி ஆஃப் ஸ்டேட், பாத்திமா அம்மையாரை ஜனாதிபதி சந்தித்துச் சில நிமிடங்கள் பேசுவது உசிதம் என்று கருதுவதாகத் தெரிவித்தான். தன்னை அந்த செக்ரட்டரி ஆஃப் ஸ்டேட்டின் காரியாலயத்தில் ஓர் அதிகாரி என்று அறிமுகப்படுத்திக் கொண்டான். அவன் பேசிய தினுசில் அந்தரங்கக் காரியதரிசி ஏமாந்து விட்டார். ''ஆஹா ! நான் ஜனாதிபதியிடம் சொல்லி அந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்ற பதிலும் வந்தது.

ஒரு கடற்படை அதிகாரி போல் ஸ்டான்லி உடையணிந்து பாத்திமாவுடன் ஜனாதிபதி வாரன் ஹார்டிங்கைப் பார்க்க வெள்ளை மாளிகைக்குச் சென்றான். அன்று ஜனாதிபதி உற்சாகமாக இருந்தார். வந்தவர்களுடன் சேர்ந்து புகைப்படம் பிடித்துக் கொண்டார்.

அந்தப் புகைப் படத்தைப் பார்த்த கடற்படைத் தலைவர் திடுக்கிட்டார். ஸ்டான்லி போன்ற அதிகாரி யாருமே அவர் ஆபிக்கத்தில் கிடையாது. அவன் ஒரு போலி என்ற நம்பிக்கையில் அவனைக் கண்டுபிடிக்கப் போலீஸ் உதவியை நாடினார்கள். ஆனால் அதற்குள் ஸ்டான்லி தன் வேலை முடிந்த தென்ற ஆனந்தத்தில் தலைமறைவாகப் போய் விட்டான். பாத்திமாவுக்கு அவன் விஜயம் பலன் அளித்ததா அளிக்கவில்லையா என்ற கவலை அவனுக்கு இல்லை! வெள்ளை மாளிகையில் ஜனாதிபதியுடன் நின்று புகைப் படம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை. அதை நிறைவேற்றிக் கொண்டு விட்டான் ! மீண்டும் ஐந்து வருடங்கள் ஆசாமி எந்தத் தகிடுதத்தத்துக்கும் ஆசை காட்டவில்லை.

1926ம் ஆண்டில் ஆஸ்திரேலியா தேசத்தைச் சேர்ந்த அடால்ஃப் லாரென்ஸ் என்ற புகழ் பெற்ற ரண சிகிச்சை மருத்துவர் அமெரிக்க நாட்டுக்கு வரப் போகிறார் என்று ஸ்டான்லி கேள்விப்பட்டான். அவ்வளவு தான் ! சிறு வயதில் தான் ஒரு டாக்டராக வேண்டுமென்று எழுந்த ஆசைக்கு இப்போது ஒரு வாய்ப்புக் கொடுக்கத் துணிந்தான். ஆஸ்திரேலிய டாக்டர் கப்பலில் வந்து இறங்கியபோது நியூயார்க் நகர சுகாதார கமிஷனரின் காரியதரிசி டாக்டர் வேமன் தான்தான் என்று அறிமுகப்படுத்





''வண்டி லேட்டாம். ரொம்ப நேரமாகும். முனியா நீ வீட்டுக்குப் போ. ஐயாகிட்டே சொல்லிடு. நான் ஊருக்குப் போயிட்டு வரேன்!''

''இல்லீங்க, உங்களை வண்டியிலே ஏத்தி விட்டுட்டுப் போய்த் தகவல் சொன்னாத்தான் ஐயா நிம்மதியாத் தூங்குவாரு. ஆறுமாசமா இதையே சொல்லிகிட்டு இருக்காரு!''

திக் கொண்டு அடால்ஃப் லாரென்ஸுடன் பல ஆஸ்பத்திரிகளுக்கு விஜயம் செய்ய ஆரம்பித்தான். லாரென்ஸுக்குத் துவிபாஷியாகவும் சில இடங்களில் உதவினான். பல இடங்களில் லாரென்ஸைப் பின்னணியில் தள்ளிவிட்டுத் தாமே மிகவும் பெரிய டாக்டர் போல் ஆர்ப்பாட்டம் செய்தான்.

ஒரு பெரிய ரண சிகித்சைக்கு ஏற்பாடு செய்து விட்டு லாரென்ஸ் அவசரமாக வெளியே போக நேர்ந்தது. அந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஸ்டான்லி தன் இஷ்டம்போல் ரண சிகித்சை ஆயுதங்களைக் கையாள ஆரம்பித்தான். கூட இருந்த அந்த ஆஸ்பத்திரி டாக்டருக்கு இது மனத்தில் விபரீத சந்தேகத்தை ஏற்படுத்தியது. பக்கத்து அறைக்குப் போய்ப் போலீஸுக்கு டெலிபோன் பண்ணினார். போலீஸ் வருவதற்குச் சற்றுத் தாமதமாயிற்று. அதற்குள் ஸ்டான்லி எப்படியோ வரப் போகும் விபரீதத்தை உணர்ந்து மெதுவாகக் கம்பி நீட்டி விட்டான்!

ஒரு வருடம் ஸ்டான்லி தலை மறைவாக ஒரு பலசரக்குக் கடையில் குமாஸ்தாவாகப் பணியாற்றினான். மீண்டும் ஒரு முறை டாக்டராக மாறச் சந்தர்ப்பம் வராதா என்று தவம் கிடந்தான். அந்த வாய்ப்பும் வந்தது.

அந்த நாளைய வெகு பிரபல பேசாத் திரைப்பட நடிகர் ருடால்ஃப் வாலண்டினோ 1926ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் நியூயார்க் நகரில் காலமானார். அவருடைய காதலியும், அவரைப் போலவே பேசாத் திரையுலகில் புகழ் பெற்றிருந்தவளுமான போலா நெக்ரி என்ற நடிகை இந்தச் செய்தி கேட்டு நியூயார்க் பிரபல ஹோட்டல் ஒன்றில் மயக்கமடைந்து உடல்நலம் பாதிக்கப்பட்டாள். அவ்வளவுதான்! ஸ்டான்லி வேமன் டாக்டராகி விட்டான். தன் வாசாலகத்தால் அந்தப் பிடிவாத நடிகையைச் சூழ்ந்திருந்த அசல் டாக்டர்களை ஊடுருவி அவள் அருகில் போய் அவளைச் சில மருந்துகளை விழுங்கச் செய்தான். அவள் உடல்நல முன்னேற்றத்தைப் பற்றி மணிக்கு மணி தன் கையெழுத்திட்ட அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தான்.

இதே டாக்டர் வேமன் சில நாட்களுக்கு முன் டாக்டர் லாரென்ஸை ஏமாற்றி அடித்த கூற்றுக்களையும், பிடிபடும் சமயத்தில் தப்பி ஓடிய செய்திகளையும் கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்த அதே பத்திரிகைகள் இன்று அதே வேமன்தான் போலாநெக்ரியின் பெயருடன் தன்னை இணைத்துக்கொண்டிருக்கிறான் என்று கொஞ்சம் கூடச் சந்தேகிக்காமல் அந்த அறிக்கைகளை வெளியிட்டன.

ருடால்ஃப் வாலண்டினோவின் சவ அடக்கத்தில் போலா நெக்ரி கலந்து கொண்டபோது வேமன் அவளுக்குப் பாதுகாப்பாகக் கூடவே போனான். எல்லோர் பார்வையும் அவன் மேலேயும் விழுந்தது. எத்தனையோ புகைப்பட நாயகனாக ஆனான். அந்த அதி விளம்பர நாள் கழிந்ததும் ஆசாமி தலைமறைவானான்.

ஆனால் இந்தத் தடவை போலீஸ் ஐந்து வருடங்களுக்குப் பிறகு வெள்ளை மாளிகை மோசடிக் குற்றத்துக்கு, வேமனைப் பிடித்து விட்டது. ஒரு வருடம் ஒரு நாள் சிறைத் தண்டனை பெற்று மீண்டும் வெளியே வந்தான் அவன்.

அடுத்த பதினைந்து ஆண்டுகளில் அவன் புகழ் வேண்டிப் பல அவதாரங்கள் எடுக்க முற்பட்டான். விளம்பரத்துக்காகவும், இடைப் புகழுக்காகவுமே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஸ்டான்லி வேமன் விளம்பரத்துடனேயே செத்தும் வைத்தான்.

1960ம் ஆண்டில் ஒரு நாள் இரவு. நியூயார்க் ஒதுப்புற ஹோட்டல் ஒன்றில் ஸ்டான்லி குமாஸ்தாவாகப் பணியாற்றி வந்தான். திடீரென்று அவன் முகத்துக்கு நேராக ஒரு கைத் துப்பாக்கி முனை தெரிந்தது. கொள்ளைக்காரன் ஒருவன் ஸ்டான்லி எண்ணிக் கொண்டிருந்த இருநூறு டாலர்களுக்குச் சைகை காட்டினான்.

ஸ்டான்லி என்ன மற்றவர்களைப் போல் சாதாரணமாகப் பணத்தைத் தூக்கிக் கொடுத்துவிட்டு எல்லோரையும் போல் கொள்ளைக்காரனுக்குச் செய்திகளில் முக்கியத்துவம் கொடுப்பானா? அந்த முக்கியத்துவம் அவனுக்கல்லவா தேவை! விளைவு, கொள்ளைக்காரனின் துப்பாக்கிக் குண்டு அவனை வீழ்த்திச் சாகடித்தது. மறுநாளைய பத்திரிகைகள் அனைத்திலும் வேமன் படம் வந்தது! இருந்தும் புகழ் பெற்று இறந்தும் விளம்பரம் பெற்ற ஒரே போலி, ஸ்டான்லி வேமன்தான்!

— திருவேரகத்தான்



பின்னியின் D-318 பற்றிய இரண்டு கருத்துக்கள்

அம்மா சொல்வது :-

D 318 நீடித்து உழைக்கிறது; பள்ளிக்கூட யூனிபாரங்களுக்கு மிகவும் சிறந்தது. சிறுவரின் கடினமான உபயோகத்திற்கு ஈடு கொடுக்கும்' துணி இதுதான்.

குழந்தைகள் சொல்வது :-

யூனிபாரம் அணிந்தபடியே நாங்கள் விளையாட்டுகளில் ஈடுபட்டால் அம்மா எங்களை ஒன்றும் சொல்வதில்லை. ஏனெனில் அவை சிறிதும் கெடாமல் நீடித்து உழைக்கும் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும்.

நினைவிருக்கட்டும், பள்ளிக்கூட யூனிபாரங்களுக்கென்றே பல வண்ணங்களில் D 318 கிடைக்கிறது.

BINNY'S FABRICS

BINNY & CO. LIMITED, MADRAS

உங்களுக்குத் தேவையான பின்னி துணிகளை இந்த அடையாளம் காணும் அனுமதிபெற்ற விற்பனையாளரிடமிருந்து கண்ட்ரோல் விலைக்கு வாங்குங்கள்.

பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட்

பின்னி & கம்பெனி லிமிடெட், மதராஸ், ஸ்தாபனத்தின் ஒரு மில் JWT-BY-3127

கொரில்லாப் போர் முறையின் 'தந்தை' என்று அழைக்கப்படுபவர் மா-ஸே-துங். செஞ்சீனர்களின் சாகசத்தை நமது வடக்கெல்லையிலும் மலேயாவிலும் கண்டோம், வியத்நாமில் பார்த்து வருகிறோம். காஷ்மீரத்தில் நடந்த சமீப நிகழ்ச்சிகளைக் கவனித்தால் பாகிஸ்தானுக்கும் கொரில்லாப் போர் முறை மீது ஆசை விழுந்திருப்பதாகத் தெரிகிறது. இத் தருணத்தில் நாம் விழிப்புடன் இருப்பதுடன் கொரில்லாப் போர் முறையின் நுணுக்கங்களைப் பற்றியும் நன்கு அறிந்து வைத்துக் கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகிறது.

திரைப்படங்களில் வரும் வீரமான கதா நாயகனை ஒரு தன்னந்தனியான இடத்தில் ஏழெட்டு முரடர்கள் சூழ்ந்துகொள்கிறார்கள்; கத்திகளினாலும், அரிவாள்களினாலும் தாக்குகிறார்கள். கதாநாயகன், அவன் கண்ணில் பட்ட ஓர் அப்பளக் குழவியை எடுத்துக் கொண்டு அவர்களைப் பதிலுக்குத் தாக்குகிறான். இரண்டுபேர் கொல்லப்படுகிறார்கள், மற்றவர்கள் ஓடிப்போய் விடுகிறார்கள். கதா நாயகனது அப்பளக் குழவி ஆயுதத்தை ஒருவன் பிடுங்கிக் கொண்டுவிடுகிறான். ஆனால் கதாநாயகன் கீழே கிடந்த கோடரியை எடுத்துக்கொண்டு அவர்களை நையப் புடைத்து



ஓடச் செய்துவிடுகிறான். படம் பார்ப்பவர்கள் இந்த வீரக் காட்சியைக் கண்டு ஆச்சரியப்படுகிறார்கள். அப்போது சில ரசிக சிகாமணிகள் தங்கள் மூக்கின்மீது ஒரு விரல்மட்டுமல்ல, பத்து விரல்களையும் வைத்துக் கொள்வதுண்டு.

சென்ற சில வாரங்களாகத் தினசரிப் பத்திரிகைகளில் வெளியாகும் வியட்நாமில் நடைபெற்று வரும் போரைப் பற்றிய செய்திகள் இந்தத் திரைப்படக் காட்சியை ஞாபகப்படுத்துகின்றன. அந்தச் செய்திகள் பின்வருவதுபோன்றிருக்கும்:

ஐந்நூறு வியட்காங் கொரில்லாக்கள், டா நங் என்ற இடத்திலுள்ள மண்ணெண்ணெய்க் கிடங்குகளைத் தாக்கி 20 லட்சம் காலன் எண்ணெயை எரித்து நாசமாக்கினர். கிடங்குகளைக் காவல் காத்துக்கொண்டிருந்த முப்பது பேரும் ஓடி ஒளிந்தனர்.

'மரைன்ஸ்' என்ற அந்தப் புகழ் பெற்ற அதிவீர தீர அமெரிக்கப் போர் வீரர்கள் நூறு பேரைக் கொரில்லாக்கள் தாக்கிப் பலரைக் கொன்று விட்டனர். பிறகு அந்தக் கொரில்லாக்கள் 35 பேரும் மறைந்து விட்டனர்.

மலைப் பகுதியில் மறைந்து கொண்டிருந்த கொரில்லாக்களை ஒரு ஹெலிகாப்டர் விமானம் தாக்கத் தயாராக இருந்தபோது அவர்களுள் சிலர் அதைச் சுட்டு வீழ்த்தினர்.''

கடைசியாக 15-8-1965ந் தேதியன்று நடந்த ஒரு சம்பவம்: ஸெய்கானில் வியட்நாம் கொரில்லாக்கள் ஒரு மோட்டார் வண்டியில் வந்து, வியட்நாம் போலீஸ் விசாரணைக் காரியாலய மொன்றைத் தாக்கிவிட்டுச் சென்றனர். மூன்று பேர் இறந்தார்கள். முப்பது பேர் காயமுற்றனர்.

இந்தச் சண்டைச் செய்திகளைப் படித்ததும் நாம் ஆச்சரியப்படுகிறோம். ஆனால், இரண்டு சண்டைகளுக்கும் வித்தியாசம் உண்டு. திரைப்படத்தில் நடைபெறுவது நடிப்புச் சண்டை. வியட்நாம் பிரதேசத்தில் நடைபெற்றுக் கொண்டிருப்பது உண்மையான சண்டை. கத்தியின்றி ரத்தமின்றி நடப்பதல்ல.

சர்வ வல்லமை உள்ள அமெரிக்க ஐக்கிய நாட்டின் வீரப் படையினரை இப்படித் திணற அடித்து வரும் அந்தக் கொரில்லாக்கள் யார்? அவர்கள் ஆப்பிரிக்காவில் வசித்து வரும் மனிதர்களின் மூதாதையர் எனப்படும் கொரில்லாக் குரங்குகள் அல்ல என்று எல்லோருக்கும் தெரியும். பின்னர் அவர்கள் யார்?

'கொரில்லா' என்ற ஸ்பானிஷ் வார்த்தைக்குச் 'சிறிய போர்' என்று அர்த்தம். அந்தப் போர் முறையைக் கொள்பவர்கள்தான் கொரில்லாக்கள்.

நெப்போலியன் ஸ்பானிஷ் சைன்யத்தை முறியடித்து அந்தத் தேசத்தைக் கைப்பற்றிக் கொண்டபோது தப்பியோடிய பல சைன்யப் பிரிவினர் மலைப் பிராந்தியங்களிலும், காடுகளிலும் ஒளிந்து கொண்டனர். பிறகு அடிக்

கடி வெளியே வந்து எதிரியின் படையினருக்குத் தொந்தரவு கொடுத்து வந்தனர்.

தோல்வியுற்ற சைன்யத்தைச் சேர்ந்தவர்கள் இப்படி ஒளிந்திருந்து தாக்கும் முறை வெகு காலமாகவே பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது. படைகளேயன்றி, கலகம் செய்து கிளம்பும் ஒரு தேசத்தின் பிரஜைகளும் அரசாங்கத்தின் சைனியத்தை எதிர்த்து நிற்க முடியாதபோது இந்த முறையைத்தான் பின்பற்றி வந்திருக்கிறார்கள்.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது ஜெர்மன் படைகள், மின் வேகத் தாக்குதல் முறையைக் கையாண்டு ரஷ்யாவுக்குள் பல நூற்றுக்கணக்கான மைல்கள் தூரம் முன்னேறி விட்டன. தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் சிதறுண்ட ரஷ்ய சைனியப் பகுதிகள் தலைமறைவாக இருந்து கொண்டு எதிரி சைனியத்தின் பின்னணியைத் தாக்கி ஓயாமல் தொந்தரவு கொடுத்து வந்தன. இந்த முயற்சியில் ரஷ்யப் பொதுமக்களும் ஒத்துழைத்தார்கள். இதன் பயனாக ஹிட்லர் தமது சைனியம் முன்னேறுவதை நிறுத்திக் கொண்டு, இவர்களுடன் போராடிக் கொண்டிருக்கச் சில லட்சம் துருப்புக்களை உபயோகிக்க வேண்டியதாயிற்று. இது, உலகத்தின் முதல் பெரிய கெரில்லா யுத்தமாக அமைந்தது.

கம்யூனிஸ ரிஷிகளான கார்ல் மார்க்ஸ், லெனின் முதலியவர்கள் கெரில்லாச் சண்டை போடுவதைப் பற்றித் தங்களது உபதேச கிரந்தங்களில் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். இந்தப் போர் முறை அநுபவத்தில் வெற்றியளித்ததைக் கண்ட ரஷ்ய ராணுவ நிபுணர்கள் அதைப் பற்றி மேலும் தீவிரமாக ஆராய்ச்சி செய்தனர். அதற்கெனச் சட்டதிட்டங்கள் வகுத்துக் கெரில்லாப் போர் முறையை யுத்தக் கலையின் ஒரு பிரிவாகச் செய்தனர். அதிலிருந்து அந்த முறைக்கு ஓர் அந்தஸ்து ஏற்பட்டது. ஆனால் மற்ற மேல்நாட்டு இராணுவ நிபுணர்கள் இதைப் பற்றி அலட்சியமாகவே இருந்தனர்.

கெரில்லாப் போர் முறையைக் கையாண்டு நூற்றுக்கு நூறு வெற்றி கண்டவர் சீனக் கம்யூனிஸ்ட் தலைவர் மா ஸே துங். முதலில் அவர் சீனாவில் படையெடுத்து வந்திருந்த ஜப்பானியத் துருப்புக்களை வெளியேறச் செய்தார். பிறகு சியாங்கே ஷேக்கை ஓடும்படி செய்தார். எனவே, கெரில்லாப் போர் முறையைப் பற்றிச் சொல்லத் தகுதி வாய்ந்த அவர் அது சம்பந்தமான போதனைப் பிரசுரங்களை எழுதி வெளியிட்டார்.

ஏசுநாதர், மனிதன் நல்வாழ்வு வாழ்வதற்காகப் பத்துக் கட்டளைகளை அருளியிருக்கிறார். மா ஸே துங் மனிதனை மனிதன் அமைதியாய் வாழ விடாதிருப்பதற்காகக் கெரில்லாப் போரைப் பற்றிப் பத்துக் கட்டளைகள் விதித்திருக்கிறார்.

"சிதறுண்டு தனித் தனியே இருக்கும் எதிரிகளைத் தாக்கு. பின்னர் பலமான எதிரிகளைத் தாக்கலாம்!" என்பது முதல் போதனை.

"இடங்களைப் பிடித்துக் கொள்வது நமது முக்கிய லட்சியமல்ல. எதிரியின் பலத்தைக் குறைப்பதுதான் பெரிய காரியம். வெற்றி நிச்சயம் கிடைக்கமாட்டாதென்று தோன்றும் போரில் ஈடுபடாதே"; "நீ சண்டையிடத் தேவையான ஆயுதங்களை எதிரியினிடமிருந்தே பற்றிக் கொள்" என்பன மற்ற சில உபதேசங்கள்.

இந்தப் பத்துக் கட்டளைகள்தான் கெரில்லாப் போரின் பால பாடம்.





சீனக் கம்யூனிஸ்ட் படைகளின் புகழ் பெற்ற கோஷங்கள்.

"எதிரி முன்னேறுகிறான்; நாம் பின்னடைகிறோம்."
"எதிரி ஓரிடத்தில் தங்குகிறான்; நாம் துன்புறுத்துகிறோம்"
"எதிரி சோர்வடைகிறான்; நாம் தாக்குகிறோம்."
"எதிரி பின்வாங்குகிறான்; நாம் துரத்திக் கொண்டு செல்கிறோம்"

என்பனவாகும். இவைதான் கெரில்லாப் போர்முறையின் அடிப்படையான கொள்கைகள் என்று மா லோ துங் வற்புறுத்திக் கூறுகிறார்.

சீனத் தலைவர் தமது போர் முறைக்கு 'யுசிசான்' என்று பெயரிட்டிருக்கிறார். அந்த மூன்று சீன வார்த்தைகளும் 1. சுற்றித் திரி, 2. பலமாகத் தாக்கு, 3. யுத்தஞ் செய் என்று முறையே பொருள்படும். ஆனால் அவர் விவரிக்கும் முறைகள் பெரும்பாலும் கெரில்லாப் போர் முறைகள். உலக ராணுவ நிபுணர்கள் மாவோதுங்கைத் தற்கால கெரில்லாப் போர் முறையின் பிதா என்று மதிக்கின்றனர்.

கெரில்லாப் போர் என்பதை ஒழுங்கற்ற போர், சம்பிரதாய முறையில் நடத்தப்படாத போர் என்றெல்லாம் சொல்வதுண்டு. ஆனால் அதற்கும் ஒரு முறை உண்டு. சொல்லப் போனால் முறைக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அந்த முறையற்ற போருக்கே ஓர் இலக்கணம் வகுத்தது போலாகி விட்டது. பல அம்சங்கள் சம்பிரதாய முறைப் போரின் முக்கிய அம்சங்களுக்கு நேர் விரோதமானவையாக இருக்கும்.

கெரில்லாப் போர் வீரர்களுக்கென்று தனிப்பட்ட இராணுவ உடை எதுவும் கிடையாது. அவர்கள் அணிவகுத்துச் செல்வதில்லை. அவர்கள் அநேகமாகப் பகல் வேளைகளில் எதிரியைத் தாக்குவதில்லை.

'முன் வைத்த காலைப் பின் வாங்காமல் யுத்தம் செய்வ'தைப் பற்றிப் புகழ்ந்து பழைய காலக் கவிஞர்கள் பாடியிருக்கிறார்கள்.

"கெரில்லாப் போரில் பின்வாங்குவது ஒரு கடமையாகும். கெரில்லாக்கள் ஓட வேண்டும், ஓடிக் கொண்டேயிருக்க வேண்டும். விரோதிகளிடம் சிக்கிக் கொள்ளக் கூடாது. போரிடுவதைவிட நாம் பின்வாங்குவது அதிகமாயிருக்கலாம். ஆனால் ஒவ்வொருமுறை அப்படிச் செல்வதும் பிறகு போரிடுவதற்காகத்தான்" என்று மாவோ துங் கூறுகிறார்.

ஒருசில கெரில்லாக்கள் நூற்றுக்கணக்கான எதிரியின் போர்வீரர்களை அலட்சியமாக எதிர்த்துப் போராடாமல் ஓடிவிடுவதனால் வீர சுவர்க்கம் எனப்படுவதை அடையாதிருக்கக்கூடும். ஆனால் பிறகு சரியான சமயத்தில் எதிரியைத் தாக்கி நாசம் செய்வதற்காகத் தான் உயிரைக் காப்பாற்றி வைத்துக்கொள்கிறார்கள். எனவே புறமுதுகிட்டு ஓடித் தப்பிப்பதென்பது அல்லது தப்பிவிடுவதுபோல் பாவனை செய்வது கெரில்லாக்களின் முக்கிய கடமையாகும். கெரில்லா ஒரு கோழையல்ல; உயிரை லட்சியம் செய்பவனல்ல. வீர தீரம் நிறைந்தவன். ஆனால், லட்சியம் நிறைவேறும்வரையில் போராடுவதற்காக அவன் உயிர் வாழ்ந்திருந்தாக வேண்டும்.

எதிரி ஓய்வெடுத்துக்கொள்ள விடாதே. மூச்சு விடச் சாவகாசம் கொடாதே. தூங்க விடாதே. அவன் உன்னை எதிர்பார்க்கும் இடத்திலோ, எதிர்பார்க்கும் நேரத்திலோ அவனுடன் சண்டை போடாதே. நீ அவனை எதிர்பார்க்காத இடத்தில் எதிர்பார்க்காத நேரத்தில் அவனைத் திடீரென்று தாக்கு. இவையெல்லாம் மாவோதுங்கின் போதனைகள்.

கெரில்லாப் போரில், போர் முறைக்கு அடுத்தபடியாகச் சண்டை போடும் இடம் முக்கியத்துவம் பெறுகிறது.

அடர்ந்த புதர்கள், காடுகள், சதுப்பு நிலங்கள், கடக்க முடியாத பாலைவனங்கள் முதலியன உள்ள பிரதேசங்கள் கெரில்லாப் போருக்கு ஏற்றவை.

கெரில்லாக்கள் ஒளிந்திருந்து திடீரென்று தாக்க வசதியான மறைவிடங்களும், தாக்கிய பிறகு தப்பி ஓடிவிடக்கூடிய இரகசியமான குறுக்குப் பாதைகளும் உள்ள பிரதேசமாயிருப்பது அவசியம். மற்றும், தேசத்தின் எல்லைப்புறத்தில் அமைந்திருப்பது விசேஷம். எல்லைப்புறத்துக்கப்பால் உள்ள அந்நிய தேசத்தினர் உதவி கிடைப்பதாயிருந்தால் மிகவும் நல்லது.

கெரில்லா வீரன் நல்ல தேகக்கட்டும் பலமும் உள்ளவனாயிருக்க வேண்டும். 'மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார்' என்று பாராட்டக் கூடியவனாக இருக்க வேண்டும். அவனுக்கு உடல் வாகிக்கான பிரத்தியேக இராணுவ உடைகள் கிடையாது. மற்ற சாதாரண மனிதர்களைப் போல், அவன் போர் புரியும் நாட்டு மக்களைப் போலவே உடை உடுத்தியிருக்க வேண்டும்.

அவன் உணவை அநேகமாக முன்கூட்டியே கையில் எடுத்துக் கொண்டு செல்வதில்லை. போருமிடத்தில் என்ன கிடைக்கிறதோ அதையே புசிக்க வேண்டும். அவன் மிக வேகமாக நடக்கக் கூடியவனாகவும், ஓடக் கூடியவனாகவுமிருக்க வேண்டும். பகலெல்லாம் ஒளிந்து ஒளிந்து ஓடி இரவில் கண் விழித்து எதிரியைத் தாக்க வேண்டும்.


போர் நடக்கும் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு பகுதியும் அவனுக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். அவன் நடமாடும் பகுதிகளிலுள்ள பொதுமக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்றவனாக இருக்க வேண்டும். சவு. இரக்கம் என்பதே அவன் மனத்தில் கனவிலும் தோன்றக் கூடாது.

கெரில்லாப் படைகள் சம்பந்தமான விதிகள் மிகவும் கண்டிப்பானவை. ருஷ்ய கெரில்லாப் படையின் தலைவர் கிரிஷின் பிறப்பித்த உத்தரவுகள் சில வருமாறு:

13–10–1943: ...பிரிவுத் தலைவர் பக்காரேவ் சொல்லாமல் சென்று விட்டதற்காக அவரைச் சுட்டுக் கொல்லவும்.

19–1–1943: உளவாளியான அண்டிரி ஜெங்கோவோ தன் கடமையைச் சரியாகச் செய்யவில்லை. அவனைச் சுட்டுக் கொல்லவும்.

4–5–1943: பெண்கள் அடிக்கடி காம லீலைகளில் ஈடுபடுவதனால் ஏழுபேர்கள் கருவுற்


கேஸல்ஸ்
எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்.,

றிருக்கிறார்கள். அவர்களால் தொந்தரவு தான். ஏழுபேரையும் சுட்டுக் கொல்லவும்.

22–9–1943: ...பிரிவுத் தலைவர் லுக்ஜனுன் குடித்துவிட்டுத் தமது படையினருடன் தமாஷ் செய்து கொண்டிருந்தார். அவரைச் சுட்டுக் கொல்லவும்.

இந்தக் கடுமையான இராணுவ அதிகாரச் சூழ்நிலையில், கெரில்லா தப்புவதைப் பற்றி எண்ணுவதற்கே இடமில்லை.

கெரில்லாக்கள் திடீரென்று தாமாகவே இராணுவ வீரர்களாகத் தோன்றிவிடுவதில்லை. கெரில்லாப் படை ஆரம்பமாகும் போது மாஜி இராணுவத் தலைவர்கள், சாதாரண மக்களுக்குப் பயிற்சி அளிப்பார்கள். அவர்கள் மற்றவர்களுக்குப் பயிற்சி அளிப்பார்கள். இப்படியாகப் பயிற்சி அளிப்பது பரவிக் கொண்டே போகும். அவர்கள் மிகச் சாதாரண ஆயுதங்களையும், கர்நாடகமான, மோட்டாவான ஆயுதங்களையும் உபயோகித்தே சண்டை செய்யத் தயாராக இருக்க வேண்டும்.

கெரில்லாக்கள் எல்லாருமே படையில் சேர்ந்திருக்க மாட்டார்கள். பொறுக்கி எடுத்த சிலர் மட்டுமே அதில் இருப்பார்கள். ஒரு கெரில்லாப் படையில் ஆயிரம் பேர் இருந்தால் பதினாயிரக்கணக்கானபேர் அந்தப் படையினருக்கு உதவியாக மறைமுகமாகவே வேலை செய்வார்கள்.

கெரில்லாப் படையினர் ஆயிரக் கணக்கான வீரர்கள் கொண்ட பட்டாளம் பட்டாளமாக இயங்குவதில்லை. முப்பது முதல் ஐம்பதுவரை கொண்ட சிறு சிறு கூட்டத்தினராக வேலை செய்வார்கள். ஒவ்வொரு கூட்டத்தினர் எதிரியைத் திடீரென்று தாக்கி விட்டுப் போன இடம் தெரியாமல் மறைந்து போய் விடுவார்கள். பிறகு ஒரு குறிப்பிட்ட இடத்தில் சேர்ந்து கொள்வார்கள்.

''பொதுமக்களின் ஆதரவு, அநுதாபம் என்ற கடலில் கெரில்லாக்கள் என்ற மீன்கள் நீந்த வேண்டும்'' என்று மாவோதுங் திரும்பத் திரும்பக் கூறுகிறார். கெரில்லாக்களுக்கு உணவளித்து, அவர்களை ஒளித்து வைத்திருப்பது பொதுமக்கள்; முக்கியமாகக் கிராமவாசிகள். அவர்கள் எதிரித் துருப்புகளின் நடமாட்டத்தைப் பற்றித் தகவல்களைச் சேகரித்துக் கொடுத்துக் கொண்டே யிருப்பார்கள்.

சென்ற யுத்தத்தின் உடனடியாக கிரீஸ் தேசத்தில் தோன்றிய கெரில்லாப் படையில் 30,000 பேரே இருந்தனர். ஆனால் இவர்களை ஒடுக்க இரண்டு லட்சம் வீரர்கள் கொண்ட இராணுவம் ஏழு வருட காலம் இராப் பகலாகப் போராட வேண்டியிருந்தது.

தென் கொரியாவில் கெரில்லாப் படையினரை அடக்க ஐ. நா. இரண்டு லட்சம் பேரடங்கிய சைன்யத்தை உபயோகித்தது.

வியட்நாமில் பல லட்சக் கணக்கான பிரஞ்சுத் துருப்புகள் மிக நவீனமான ஆயுதங்களுடனும், விமான வசதிகளுடனும் ஏழு வருட காலம் இருபதினாயிரம் கெரில்லாக்களுடன் போரிட்டு வந்தது. இறுதியில் தேசத்தை விட்டுவிட்டு ஓட நேர்ந்தது.

சாதாரணமாக ஒரு கெரில்லா வீரனைச் சமாளிக்கப் பத்து பக்கா இராணுவ வீரர்கள் தேவைப்படுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

கெரில்லாப் படைகள் தோன்றி, போரிலீடுபட்டு வரும் பிரதேசங்கள் எல்லாம் அநேகமாக கம்யூனிஸ்ட் நாட்டின் தொடர்புள்ளவை, அல்லது கம்யூனிஸ்ட் நாடுகளின் எல்லைப்புறத்தி லுள்ளவை. கெரில்லாப் படையினர் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்களாம். யாரிடமிருந்து யாரை விடுதலை செய்ய? தேச மக்களைத் தற்சமயம் தேசத்தை நிர்வகித்து வரும் ஆட்சியிலிருந்து விடுதலை செய்ய!

பிறகு யார் பதவிக்கு வருவார்களாம்? கெரில்லாப்போரை நடத்தும் உள்நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சி! அப்படியானால் அதற்கு மறைமுகமாக உதவி செய்த கம்யூனிஸ்ட் நாட்டுக்கு அதனால் என்ன லாபம்? அந்த நாடுதான் பதவி ஏற்கும் கோஷ்டியை மறைமுகமாக அடக்கி ஆண்டு கொண்டிருக்கும். அந்த நிலை ஏற்படுத்துவதுதான் மறைமுகமான லட்சியம். அல்ஜீரியா, காங்கோ, போன்ற சிற்சில ஆப்பிரிக்க நாடுகளில் மட்டுந்தான் கம்யூனிஸ்ட் தொடர்பற்ற சுதந்திரக் கெரில்லாப் படைப் போராட்டம் நடைபெற்றிருக்கிறது.

இந்தக் கெரில்லாப் படைகளை ஒடுக்குவதற்கு வழியே இல்லையா? எல்லைப்புறங்களில் கம்யூனிஸ்ட் நாடோ, அல்லது கெரில்லாப் படையினிடம் அநுதாபம் உள்ள நாடோ இல்லாதிருந்தால் மிகவும் சிரமப்பட்டு ஒடுக்கிவிடலாம். பிலிப்பைன்ஸ் தலைவர் மக்ஸே ஸே கடுமையான எதிர் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார். படையினரைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பெரிய தொகை சன்மானமளித்தார். அத்துடன் நில சம்பந்தமான சீர்திருத்தச் சட்டங்கள் செய்து விவசாயிகளைக் கெரில்லாப் படையினின்றும் விலகச் செய்தார்.

அமெரிக்காவினால் வியட்நாமைத் தரை மட்டமாக்கி அங்கே கெரில்லாப் பூண்டே இல்லாமல் செய்துவிட முடியும். ஆனால் அதைப் பலமாகத் தாக்கினால் கம்யூனிஸ்ட் நாடுகள் ''இது அநியாயம். தர்ம யுத்தமில்லை'' என்று கூச்சலிடுவார்கள். ஜனநாயக ஆட்சியுள்ள நாட்டினரே அதைவிடப் பெரிய கூச்சல் போடுவார்கள். அமெரிக்காவிலேயே பலர் இந்த முயற்சியைக் கண்டிப்பார்கள். இப்போது அத்தகைய கூக்குரல்களும், கண்டனங்களும் பலமாக இருக்கின்றன.

கம்யூனிஸ்ட் நாடுகள் நேரடியாக யுத்தம் தொடுப்பதில்லை. மற்ற நாடுகளில் சிலரைக் கிளப்பி விட்டு அவர்களுக்கு ஆயுத உதவியும், பண உதவியும் அளித்து மறைமுகமாக யுத்தம் செய்கின்றன. இது சர்வதேச சட்டங்களின்படி யுத்தம் ஆகாது. இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு கம்யூனிஸ்ட் நாடுகள் தங்கள் செல்வாக்கையும் அதிகாரத்தையும் பெருக்கி வருகின்றன.

சமீபத்தில் பாகிஸ்தான் காஷ்மீருக்குள் கெரில்லாப் படையை அனுப்பி யிருக்கிறது. இது நவீன கெரில்லாப் படை. நவீன யுத்த ஆயுதங்களுடன், கையில் கடிகாரம் கட்டிக் கொண்டு சிகரெட் பிடித்துக் கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள்!

கல்யாணமான பிறகு பெண்கள் தொடர்ந்து உத்தியோகம் பார்க்கலாமா?

"கூடாது!" என்பவர்: **குமாரி ஷ்யாமளா** (பொது சுகாதாரத் துறை டைரக்டர் அலுவலகத்தில் பணியாற்றுபவர்)

"ஏன் கூடாது?" என்பவர்: **ஸ்ரீமதி ராஜேஸ்வரி** (விவசாய டைரக்டர் அலுவலகத்தில் பணியாற்றுபவர்)

"ஏனுங்க! மிஸஸ் ராஜேஸ்வரி! உங்களை நேத்துப் பார்க்கவேயில்லை. ஆபீஸுக்குப் போகலியா?... உங்க பஸ் வந்தப்புறம்தான் என் பஸ் வந்தது. லீவு போட்டுட்டீங்களா? பெர்மிஷனா?"

"இரண்டுமில்லே ஷ்யாமளா! குழந்தைக்கு டிரஸ் பண்ணி, கான்வென்டுக்கு அனுப்பிச் சுட்டு அவருக்கும் சாப்பாடு போட்டுக் கடிகாரத்தைப் பார்த்தால் ஒன்பதே கால்தான் ஆகியிருந்தது. கொஞ்சம் வீட்டு வேலை, பார்க்கலாமேன்னு நினைச்சேன். அப்புறம் தான் கடிகாரம் ஓடலேன்னு தெரிஞ்சுது. பறக்கப் பறக்க பஸ் ஸ்டாப்புக்கு வந்து அரை மணி நேரம் லேட்டாக ஆபீஸுக்குப் போனேன்."

"அப்படியா சமாசாரம்?... குடும்பத்தையும் கவனிச்சுக்கிட்டு வேலையும் பார்க்கிறதுன்னா கொஞ்சம் சிரமம்தான்! இல்லையா மிஸஸ் ராஜேஸ்வரி?"

"நீ என்ன சொல்றே ஷ்யாமளா?"

"கல்யாணமாகிக் குடியும் குடித்தனமுமான பிறகு நம்மைப் போன்ற பெண்கள் உத்தியோகம் பார்க்கப் போகக் கூடாது என்கிறேன். உங்க அபிப்பிராயம் என்ன?"

"ஏன் கூடாதுன்னு நான் கேட்கிறேன். ஒரு குடும்பத்திலே கணவனும் மனைவியும் உத்தியோகம் பார்த்துச் சம்பாதிக்கக் கூடியவர்களாக இருந்தால் அந்தக் குடும்பத்தின் பொருளாதாரத் தரம் உயருகிறது. ஓரளவு வாழ்க்கையைத் திட்டமிட்டுச் செழிப்பாக நடத்த முடிகிறது. குறிப்பாகச் சொன்னால் படித்த பெண்கள் கல்யாணமான பிறகு அவசியம் கணவனுக்கு உதவியாகச் சம்பாதிக்க வேண்டும் என்றுதான் நான் சொல்லுவேன்."

"குடும்ப வாழ்க்கையிலே பொருளாதாரம் என்கிற ஒரே அம்சத்துக்குத்தானா நீங்கள் முக்கியத்துவம் கொடுப்பீர்கள்? அது போன்று இன்னும் எத்தனையோ அம்சங்கள் இல்லையா...?"

"நிறைய இருக்கின்றன. ஒரு நல்ல ஓவியனுக்குக் கற்பனைத் திறம் இருக்கிறது. வண்ணக் கலவைகளில் அவன் நிபுணன். அவன் சாதனை வெற்றிகரமாகத் திகழ வேண்டுமானால் ஒரு திரைச் சீலை இருந்தால்தானே அதில் அவன் தன் கைத்திறனைக் காண்பிக்க முடியும்? அதுபோல், நடுத்தர வர்க்கக் குடும்பங்களுக்குப் பொருளாதாரம் என்பது தான் திரைச் சீலை! அது ஓரளவுக்கு நல்லதாக இருந்தால்தான் அந்தக் குடும்பச் சூழ்நிலை பரிமளிக்கும்."

"சரி! மனைவியும் சம்பாதிப்பவளாக இருந்தால் சற்று நிம்மதிதான் என்று கணவன் குடும்ப பட்ஜெட்டைப் பற்றிச் சிந்திக்கும் போது வேண்டுமானால் நினைக்கலாம்!...மற்ற வேளைகளில்...."

"ஏன்? மற்ற வேளைகளில் என்ன நினைப்பார்கள்...?"

"இரண்டு பேருமே ஏதோ இயந்திரங்கள் போலக் கடிகாரத்தின் ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டு, உத்தியோகம், காரியாலயம் என்று அலைகிறோமே. நாம் ஒரு நாள் உடல் சோர்வுடனோ, மனச் சோர்வுடனோ வீட்டுக்குச் சீக்கிரம் வந்தால் இதமாக இரண்டு வார்த்தைகள் சொல்ல வசதியில்லாமல் மனைவி எப்போது காரியாலயத்திலிருந்து வருவாள் என்று காத்திருக்க வேண்டியிருக்கிறதே என்று நினைக்கலாமல்லவா?"

"நீ எதையோ நினைத்துக் கொண்டு அதற்கு வார்த்தைகளில் சரியான உருவம் கொடுக்க முடியாமல் சிரமப்படுகிறாய் என்று நினைக்கிறேன். காரியாலயத்திலிருந்து திரும்பும் கணவனை எதிர்பார்த்துக் கால் கடுக்க வாசற்படியில் நின்று, கண்டவுடன் முகம் மலர்ந்து காப்பி கொடுத்து உபசரிக்கும் மனைவியாக அவள் வீட்டில் இருக்க வேண்டும் என்று சொல்வதற்குப் பதிலாக இப்படிச் சுற்றி வளைத்து வேறு விதமாகச் சொல்கிறாய். அப்படித்தானே ஷ்யாமளா?"

"வைத்துக் கொள்ளுங்களேன். ஓர் ஆதர்ச மனைவி அப்படித்தான் இருக்க வேண்டும் என்பது என் லட்சியம். என்ன சிரிக்கிறீர்கள்?"

"கதைகளையும், நாவல்களையும் படித்து விட்டு இப்படிக் கற்பனை உலகில் மிதக்கிறாயே என்று நினைத்துச் சிரிக்கிறேன். இதெல்லாம்கூடக் கொஞ்சம் பழைய காலத்துக் கதைகளில்தான் வருகின்றன. இப்போது எழுதுபவர்கள் இப்படி மனைவியின் பாத்திரத்தை வாசற்படியில் அதிகம் கொண்டு நிறுத்துவதில்லை. அவர்களுக்குக் காலத்தின் போக்குத் தெரியும். கணவன் ஆபீஸிலிருந்து திரும்பி வரும் நேரமாச்சே என்று அவசரம் அவசரமாக அடுக்களையில் அஞ்சறைப் பெட்டியில் டிபன் பண்ண உதவக் கூடிய சாதனம் ஏதும் இருக்கிறதா என்று தேடிக் கொண்டிருப்பார்கள்."

"திரும்பவும் நீங்கள் அப் பொருளாதார வட்டத்துக்குள் வந்து விட்டீர்கள். இதற்குப்

பதில் சொல்லுங்கள்! கணவன் மனைவி இருவரும் வேலைக்குப் போகும் வீடுகளில் குழந்தைகள் மீது சரியான கவனம் செலுத்தப்படுவதில்லை. அவர்கள் அதனால் பாசமற்ற முறையில் வளர்கிறார்கள். பிற்காலத்தில் அவர்களுக்குப் பெற்றோர்களின் மீது பிடிப்பற்றுப் போய் விடுகிறது. இதற்காகவாவது பெண்கள் கல்யாணமானவுடன் தொடர்ந்து வேலைக்குப் போவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்கிறேன் நான்!

வலிமை சேர்ப்பது
    தாய் முலைப் பாலடா!
மானஞ் சேர்க்கும்
    மனைவியின் வார்த்தைகள்
கலி அழிப்பது
    பெண்க ளறமடா!
கைகள் கோத்துக்
    களித்து நின்றாடுவோம்

என்ற மகாகவி பாரதியின் பாடலை நினைவுபடுத்திக் கொள்ளுங்களேன்.''

''உன் வாதத்துக்கு உதவ நீ அந்தப் பாடலைத் துணைக்கு அழைக்கிறாய். குழந்தைகளுக்குப் பந்த பாச உணர்ச்சிகள் அற்றுப் போகும் என்று கூறுவது மேலை நாட்டின் பண்புகளில் ஒன்றாய் இருக்கலாம்! அவர்கள் குழந்தைகளை விட்டு எத்தனை காலமும் பிரிந்திருக்க அஞ்சுவதில்லை. ஆனால் இங்கு அப்படியில்லை. உத்தியோக நிமித்தம் சில மணி நேரங்கள் வெளியே போயிருக்கும் தாயார் திரும்பி வந்தவுடன் தன் அன்பைச் சேர்த்து வைத்துப் பொழிகிறாள். அந்தக் குழந்தை கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுக்கக் கூடிய வசதி இருக்கிறது என்ற ஆனந்தமும் அவனுக்கு உண்டு. மேலும் நமது பண்பாட்டில் பாசம் தேய்ந்து போகும் என்பதற்கு இடமேயில்லை. எப்போதும் தாயாரின் புடவை நுனியைப் பிடித்துக் கொண்டே செல்லம் கொஞ்ச நினைக்கும் குழந்தைகள் கூட, இந்தத் தனிமையால் நெஞ்சில் உறுதி பெறும் வாய்ப்பைப் பெற்று விடுகிறார்கள். மேலும் பழங்காலத்திலிருந்தே கிராமத்துப் பெண்கள் வயல்களுக்கு வேலை செய்யப் போவதற்குத் திருமணம் தடையாக நின்றதில்லை. நகர வாழ்க்கையிலும் குடியும் குடித்தனமுமாக இருக்கும் எத்தனையோ அம்மையார்கள் டாக்டர்களாகப் பணியாற்றத்



தான் செய்கிறார்கள். இவர்களையெல்லாம் விட நம் போன்ற நடுத்தர வர்க்கத்தினர்களுக்கு உத்தியோகம் அவசியமானது. நாம் நாட்டெழுத்தும் குறுக்கெழுத்தும் படிக்கிறோமே! விவாகமானதும் அவைகளை மறந்து விட்டு வீட்டில் இருந்தால் நமக்குத்தானே நஷ்டம்?''

''என்ன இருந்தாலும் ஒரு மனைவி என்ற நிலையில் நாலு ஆண்பிள்ளைகள் நடுவில் வேலை வருவது சற்றுச் சிரமமாகத்தானே இருக்கும்?

''விவாகம் ஆகும்வரை பெற்றோர்களுக்கு சற்று உதவியாக இருக்கலாம் என்றோ அல்லது விவாகச் செலவுகளுக்கு அத்தியாவசியமான பணத்தைச் சேர்த்துக் கொள்ளலாமென்றோ தான் பெண்கள் உத்தியோகத்துக்குப் போக வேண்டும். அதற்கு மேல் குடும்பம்தான் அவர்கள் அலுவல்.''

''மிஸ் சியாமளா! இது உன் லட்சியமாக இருக்கலாம். ஆனால் இதை நீ ஒரு பொதுப் 'பாலிஸி'யாக மற்றவர்கள் மேல் சுமத்த முயலக்கூடாது. நாகரிகம் அதிகமாக வளர்ந்த அமெரிக்காவிலே இப்போது குறைந்த வயதில் விவாகம் பண்ணிக் கொள்வது பரவலாகி விட்டது. பதினெட்டு பத்தொன்பது வயதிலேயே இளைஞர்கள் உத்தியோகம் பார்க்கும் யுவதிகளைக் கல்யாணம் செய்து கொள்கிறார்கள். காரணம், அந்த உத்தியோகம் பார்க்கும் மனைவிகள் தங்கள் கணவர்களின் மேற்படிப்புக்கு உதவி செய்கிறார்கள். படிப்பு முடிந்த அந்தக் கணவர்கள் உத்தியோகத்தில் புகுந்து அவசியமானால் தங்கள் மனைவிகள் மேலே படிக்க உதவுகிறார்கள். அவர்களும் பெரிய வேலைகளுக்குப் போகிறார்கள். நாமும் அதைப் பின்பற்றுவதில் தப்பு இல்லையே!''

''இப்போது மாத்திரம் நீங்கள் மேலை நாடுகளைத் துணைக்குக் கூப்பிடுகிறீர்களே!''

'' உலக வாழ்க்கையின்
    நுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை
    கற்கவும்
இலகு சீருடை
    நாற்றிசை நாடுகள்
யாவும் சென்று
    புதுமை கொணர்ந்திங்கே

என்று அதே பாரதிதான் சொல்லியிருக்கிறார்!''

கண் விழித்துப் பார்த்தபோது வண்டி பண்ருட்டியிலேயே நின்று கொண்டிருப்பது தெரிந்தது. ஜன்னல் ஓரத்தில் கண்ணாடித் தடுப்பில் தலை சாய்த்தவாறு ஒருக்களித்துப் படுத்திருந்த நண்பர் அநுதாபமாக ஒரு புன்முறுவலை வீசி விட்டு, ''வண்டி இப்போதைக்குப் புறப்படாது போலிருக்கிறது, ஸார்! திண்டிவனத்துக்குப் பக்கம் — 'குட்ஸ்' வண்டி தடம் புரண்டு விட்டதாம்'' என்றார்.


நான் கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி எட்டு ஆகியிருந்தது. இந்நேரம் சென்னையில் அல்லவா இருக்க வேண்டிய வண்டி அது!

''சாப்பிடுவதற்கு ஏதாவது கிடைக்குமா?'' என்று கேட்டவாறே மேல் பலகையிலிருந்து இறங்கினேன். பசி வயிற்றில் தடம் புரண்டு கிடந்தது.

சாதாரண நாட்களில் ஈ ஓட்டிக் கொண்டிருக்கும் மரக்கறி உணவுச் சாலைகளிலும், ஈ ஓட்டாமலிருக்கும் பலாப்பழ வியாபாரிகளைச் சுற்றிலும் அன்று சொல்ல முடியாத கூட்டம். முந்திரிப் பழக் கூடை ஒன்றைச் சுமந்து கொண்டு வந்த கிழவன், மடி நிறையச் சில்லறையைக் கட்டிக் கொண்டு பத்தே நிமிடங்களில் திரும்பிப் போனான். நாலு வியாபாரிகளின் கூடைகள் இரண்டே நிமிடங்களில் காலியாயின.

பசியை ஓரளவு தணித்துக் கொண்டு திரும்பி வந்து பிளாட்பாரத்தில் நின்றேன். திருச்சியில் ஏறியபோது என்னுடன் மூன்று பேர்கள்மட்டுமே இருந்த பகுதியில் இப்போது மேலும் மூன்று பேர்கள் வந்து சேர்ந்திருந்தார்கள். ஒருவன் இளைஞன். இருபத்தாறு அல்லது இருபத்தேழு வயதுக்கு மேல் இராது அவனுக்கு. மற்றொருவர் நாற்பது வயதுக் காரர். மூன்றாவது பிரயாணி ஒரு பெண் மணி! அவளுக்கு இருபது வயது இருக்கலாம்.

இளைஞன் உல்லாச புருஷன் என்பது முதற் பார்வையிலேயே தெரிந்து விட்டது. அடிக்கடி தலையை வாரிவிட்டுக் கொண்டே இருந்தான். பெட்டியிலிருந்து விதம் விதமான கிரீம்களையும், வாசனைத் தைலப் புட்டி



கலையும் எடுத்து மாற்றி மாற்றி அடுக்குவதை ஒரு பொழுதுபோக்காக அவன் செய்துகொண்டிருந்தான். புகைப்பட ஆல்பம் ஒன்றை எடுத்து வெளியே போட்டான். ஆனால் யாரும் அதை ஆர்வத்தோடு வாங்கிப் பார்க்க முன்வராதது அவனுக்கு ஏமாற்றமாக இருந்திருக்க வேண்டும். கற்றைக் கடிதங்களை எடுத்துப் பரப்பினான். அவற்றில் ஒரு கடிதத்தின் தலைப்பில் காலஞ்சென்ற மகாராஜா ஒருவரின் பெயர் கொட்டை எழுத்துக்களில் கண்ணைக் குத்தியது. இன்னொரு கடிதம் அயல்நாட்டு உறைக்குள் தவித்துக் கொண்டிருந்தது.

நாற்பது வயதுக்காரர் ஓர் அப்பாவி மனிதர். அவருடைய தோல் பையில், 'வைத்தா' என்ற பெயர்ச் சீட்டு தெரிந்தது. குறுகிய நெற்றியில் முட்டைக் கண்களுக்கு மேலே புருவங்களின் அடர்த்தியான கேசத்தைத் தவிர அவருடைய தோற்றத்தில் குறிப்பிட்டுச் சொல்லும்படி எதுவும் இல்லை.

அந்தப் பெண் நல்ல அழகி. எளிமையான உடை தரித்திருந்தாள்.

இந்த மூவரும் மூன்று கோணங்களில் அமர்ந்திருந்தார்கள். ஜன்னல் ஓரத்து நண்பருக்கு இருப்புக் கொள்ளவில்லை. ''என்ன ஸார், இப்ப ஆகிப் போச்சு?... வண்டி புறப்படுமா புறப்படாதா? எனக்கு அவசர ஜோலி இருக்கு பட்டணத்திலே'' என்றார்.


இளைஞன் ஏதோ க்ரீமை முகத்தில் தேய்த்தபடியே அவரைப் பார்த்து, ''எனக்கு அவசர வேலை எதுவும் இல்லை, ஸார்! வண்டி எப்போது போனாலும் சரிதான். போகாமலே இருந்து விட்டாலும் சரிதான்'' என்றான். சொல்லி விட்டுக் கடகடவென்று சிரித்தான்.

நான் முகத்தைச் சுளித்தேன். பையனுடைய முதல் பேச்சே நன்றாக இல்லையே!

சிரித்ததோடு மட்டுமில்லை; ஒரு மூலையில் 'தேமே' என்று உட்கார்ந்திருந்த அந்தப் பெண்ணின் பக்கம் பார்வையை ஓட்டி, தன் ஹாஸ்யத்தை அவள் எப்படி ரசித்தாள் என்பதைக் கவனித்தான் அவன். அவளோ இந்தப் பக்கமே தலையைத் திருப்பவில்லை.

இளைஞன் தொடர்ந்தான்: ''சில நாட்களில் எனக்குப் பொழுதே போகாது.... அப்போதெல்லாம் இப்படியே கிளம்பிவிடுவேன்...... அவசரத்துக்கும் அவசியத்துக்கும் நான் ரயிலை நம்புவதில்லை. சொந்தக் காரிலே தான் போவது. என் கார் இப்போது கொஞ்சம் பழுதாகி இருப்பதால் ரிப்பேருக்கு விட்-

ஏ.எஸ்.ராகவன்



ரயில் பிரயாணத்தில் எத்தனை எத்தனையோ ரஸமான சம்பவங்கள். இந்தச் சம்பவங்களை யெல்லாம் நன்ருகப் பார்த்து அனுபவித்து, மகிழ்ந்தவர் அந்த இலாகாவில் பணி புரியும் ஏ. எஸ். ராகவன். அந்த இளைஞன் முரடன், அயோக்கியன் என்று முதலில் நினைக்கிறோம். ஆனல் கடைசியில் கதையில் ஒரு திருப்பத்தைத் தந்து விடுகிருரே! ★

டிருக்கிறேன்..... அக்கிரமம் ஸார், நூற்றாறு ரூபாய் 'பீஸ்' பண்ணுருன்!

"அடுத்த மாதம் ஸ்டேட்ஸுக்குப் போகலாம் என்றிருக்கிறேன். அப்பொழுது..."

எனக்குப் பொறுக்கவில்லை. "ஆஹா.... தாராளமாகப் போய் வாருங்கள்" என்றேன்.

"நீங்கள் சொல்லி விட்டால் போதுமா? அரசாங்கத்திடமிருந்து அநுமதி கிடைக்க மாட்டேன் என்கிறதே!"

"சே! சே! என்ன அரசாங்கம் இது! உங்களைப் போன்றவர்கள் அயல்நாடு போவது இந்தத் தேசத்துக்கு எவ்வளவு நன்மை!" என்றேன் கிண்டலாக.

'களுக்' என்ற சிரிப்பொலி கேட்டது. சிரித்தவள் பெண்மணி. ஜன்னலோரத்து நண்பருக்கு உள்ளூற மகிழ்ச்சி ஏற்பட்டது. இளைஞனின் மூக்கை நான் நன்ருக உடைத்து விட்டேன் என்று.

அவனுக்கு அது தெரிந்தால்தானே! ஒரு தைலப் புட்டியை மூக்கில் வைத்து ஓர் இழுப்பு இழுத்துவிட்டு, 'அதை ஏன் கேட்கிறீர்கள், ஸார்?.... வாஸ்தவத்தில் நான் புறப்படுகிறேன் என்ருல் கண்ணை மூடிக் கொண்டு 'பாஸ்போர்ட்' தர வேண்டியது தான் நியாயம்..... எங்கள் குடும்பத்தின் பெருமை என்ன, அந்தஸ்து என்ன! கேவலம் ஒரு கிராம முன்சீப் வில்லாய் விறைக்கிருன், ஸார்! சொத்து பற்றி அத்தாட்சி வேண்டுமாம். அதற்காக அவனிடம் போய் நிற்க வேண்டியிருக்கிறது..... ஏன், ஸார்! இந்த அரசாங்க அமைப்பையே மாற்றினுல் என்ன?" என்று கேட்டான்.

"மாற்றலாமே..... நம்முடைய சௌகரியத்துக்கு இல்லாத அரசாங்கம் இருந்தென்ன, போயென்ன?"

"அப்படிச் சொல்லுங்கள்...." என்றவன் அந்தப் பெண்ணைக் கடைக் கண்ணுல் பார்த்தான். அதே சமயம் அவள் பார்வையும் பட்டது போதும். இளைஞன் முகத்தில் அசடு வழிந்தது.

பெட்டியை மறுபடியும் குடைபலானுன் அவன். ஒரு கண்ணுடியை வெளியே எடுத்து அதில் தன் முக அழகைப் பரீட்சித்தான். அழகைவிட அசடு அதிகம் வழிந்ததைப் புரிந்து கொண்டு விட்டான் போலிருந்தது. உடனே அதை துடைத்தெறியச் சங்கல்பம் செய்து கொண்டவனுய்ச் சோப்பு, சீப்பு, துண்டு முதலிய உபகரணங்களுடன் தண்ணீர்க் குழாயை நாடி ஓடினுன்.

ஜன்னலோரத்து நண்பரும், நாற்பது வயதுக்காரரும் காற்ருட நடக்கலாம் என்று வெளியேறினர். அந்தப் பெண்ணும் இறங்கினுள். நான் மட்டும் உட்கார்ந்திருந்தேன்.

இளைஞன் திரும்பி வந்தான். அந்தப் பெண்ணைக் காணும் என்றதும் படபடப்புடன், "எங்கே ஸார், அவள்?" என்ருன்.

"ஏன்?" என்றேன் கோபமாக.

அவன் சிரித்தான். முகத்தைத் துடைத்தவாறே கிண்டலாக, "அவளைக் கவனித்தீர்களா, ஸார்?" என்ருன். அடுத்து என் பதிலுக்குக் காத்திராமல், "பெண் 'ஒரு மாதிரி' என்பது முதல் பார்வையிலேயே தெரியவில்லையா உங்களுக்கு?" என்று கேட்டான்.

இதுகாறும் பொறுத்துப் போகிறதென்று பேசக் கொடுத்துக் கொண்டிருந்த எனக்குக் கோபம் வந்துவிட்டது. "இதோ பாருங்கள், மிஸ்டர்..." என்றேன்.

இளைஞன் பின்வாங்கி விட்டான். "அதாவது.... ஸார்.... நீங்கள் கவனிக்கவில்லை போலிருக்கிறது. அவள் ஒரு மாதிரிதான். அதாவது, ஸார், இவ்வளவு அழகான பெண் தனியாக வரலாமா?... இருங்கள் வந்து விட்டேன்..." அவசரமாக இறங்கிப் பிளாட்பாரத்தில் ஓடினுன். பிறகு அவளோடு திரும்பி வந்தான். அந்தப் பெண்ணே முகத்தைத் திருப்பிக் கொண்டு வண்டிக்குள் நுழைந்து விட்டாள். அசடு வழிய நின்ருன் அவன் வெளியே.

"ஏனம்மா, இந்தப் பையனை உனக்குத் தெரியுமா?" என்று கேட்டேன்.

அவள் திடுக்கிட்டவள்போல் விழித்தாள். பிறகு நிதானமாகத் தலையைப் பலமாக ஆட்டி, "தெரியாது" என்ருள். தன் அவஸ்தைகளுக்கு ஒரு விடிவு வந்துவிட்டது போன்ற நிம்மதி அவள் முகத்தில் பளிச்சிட்டது.

நாற்பது வயது வண்டிக்குள் வந்தது. அவரைக் கண்டதும் அவள் முகம் மலர்ந்தது.

இளைஞனும் வந்துவிட்டான் அவசரமாக.

நான் அவனை முறைத்துப் பார்த்தவாறு, "தம்பி, நீயார்? எந்த ஊருக்குப் போகிருய்?" என்று கேட்டேன்.

"என்னைச் சேகர்னு கூப்பிடுவாங்க. நான் சென்னை வரை வரலாமென்றிருக்கிறேன். ஆனல் ஒரு குறிப்பில்லை. நீங்கள்?..."

நான் பதில் சொல்லவில்லை. ஒரு குறிப்பில்லாமல் இவன் பயணம் செய்வானும். நான்மட்டும் எங்கே போகிறேன் என்பதை இவனுக்குச் சொல்லியாக வேண்டுமோ?

"நீங்கள் எதுவரையில்?" கேள்வியை அப்பெண்ணை நோக்கி வீசினுன் அவன்.

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இக்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-2, சில்விக்ரீன் அட்வைஸரி சர்விஸ் தபால் பை 10022. பம்பாய்-1

Silvikrin

சில்விக்ரீன்—கேச ஆரோக்கியத்துக்கான வழி



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை காள் பூராவுக்கும் நன்கு சீரியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலக்துள்ளது.




SP/1/P/7/65

பதில் வரவில்லை. அவன் அதற்காகக் கவலைப்படவில்லை. ஆல்பத்தை எடுத்து வைத்துக் கொண்டு, ''இப்படத்தில் இருக்கிறதுயார்னு சொல்லுங்க, பார்ப்போம்'' என்றான்.

கம்பளிக் கோட்டும், தலைச் சுமையுமாக ஒரு பைராகி நின்றுகொண்டிருந்தார் படத்தில்.

''தெரியல்லியா?...நானே தான் ஸார்..... காஷ்மீர் போனபோது எடுத்தது. ரவிலால் கோஷ்டி சினிமாப் படம் எடுக்கப் போச்சில்ல, அப்போ, 'சேகர், நீயும் வாடா'ன்னு கூப்பிட்டாரு ரவிலால். அவர் எனக்கு 'திக்' பிரண்டு ஸார். போயிட்டு வந்தேன். அது கிடக்குது. இந்தப் படத்தைப் பாருங்க..''

கையில் கத்தியுடன் பல்லைக் கடித்தவாறு ஒரு முரடனின் படம் அது.



''டிராம் வண்டி போனப்புறம் ஜெயந்தி சமயத்திலே சிலை ஊர்வலங்களுக்கெல்லாம், நம்ம வண்டியைத் தான் உபயோகப்படுத்திக் கொள்றாங்க அண்ணே!''

''நாடகத்திலே வில்லன் வேஷம் போட்டேன். அப்போ எடுத்த படம், ஸார் இது.''

''பொருத்தமான வேஷம்தான்'' என்று கூறினேன்.

மீண்டும் களுக்கென்ற சிரிப்பொலி கிளர்ந்தது அந்தப் பெண்ணிடமிருந்து. இளைஞன் முறுவல் பூத்துக் கொண்டான். ''இதோ, இந்தப் படம் என் சேவைகளைப் பாராட்டி விழா நடந்தபோது எடுத்தது...'' என்றான் மற்றொன்றைக் காட்டி.

''என்ன சேவை செய்தீர்கள்?''

இளைஞன் கடகடவென்று சிரித்தான். ''சேவை செய்தாத்தான் பாராட்ட வேண்டுமா ஸார்?... இதெல்லாம் ஒரு பப்ளிசிடி... நாலு பேரு மாலை போட்டால், விழா நிகழ்ச்சிநிரலில் கண்டபடி பேசினால் பாராட்டு.''

''கண்டபடி பேசினால் பாராட்டா?''

''கேலி செய்யாதீங்க ஸார்...'''

வண்டி ஒரு வழியாகப் புறப்பட்டது.

பிறகு சிகரெட்டைப் பற்றவைத்தான். குப்பல் குப்பலாகப் புகையை ஊதினான்.

விழுப்புரம் வந்தது. ஆம். அதுதான் வந்தது. வண்டி அங்கே போய்ச் சேர்ந்ததாகச் சொல்ல முடியாது. வாஸ்தவத்தில் அது நின்றதற்கும் ஓடியதற்கும் அதிக வேற்றுமையே தெரியவில்லை.

அந்தப் பெண் கைப் பையுடன் கீழே இறங்கினாள். நாற்பது வயதுக்காரரும் தோல் பையுடன் இறங்கினார். அதைப் பார்த்ததும் இளைஞனும் அவசர அவசரமாகத் தன் பெட்டியை எடுத்துக் கொண்டு இறங்க ஆரம்பித்து விட்டான். ''சென்னைக்கு வரவில்லையா தம்பி?'' என்றேன். ''இல்லே, இல்லே. இங்கே இறங்க வேண்டியிருக்கிறது'' என்று பதில் சொல்லிவிட்டு ஓட்டமாக ஓடினான் அவன்.

ஜன்னல் ஓரத்து நண்பர் அநுதாபத்துடன் என்னைப் பார்த்தார். ''பாவம், அந்த அரைப் பைத்தியத்தை சமாளிக்க மிகவும் சிரமப்பட்டு விட்டீர்கள்'' என்றார்.

நான் சிரித்தேன்.

ஐந்து நிமிடங்கள் கூட ஆகவில்லை. அந்தப் பெண் மட்டும் திரும்பி வந்து, எதிரே பிளாட்பாரத்தில் நின்றாள். இளைஞனும் நிச்சயம் வந்துவிடுவான் என்ற உறுதியில் தலையை வெளியே நீட்டினேன். வியர்க்க விறுவிறுக்க அவன் வந்தே விட்டான். வண்டிக்குள் வந்து உட்கார்ந்தான். அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். நாற்பதைக் காணவில்லை.

வண்டி புறப்படுவதற்கு முதல் மணி அடித்து விட்டார்கள். பிளாட்பாரத்தில் நின்றவள் நகரத் தொடங்கினாள். இளைஞன் கீழே இறங்கி அவளருகில் ஓடி, அவள் கையை இறுகப் பற்றிக்கொண்டு விட்டான். அவள் திமிறினாள். அவன் விடவில்லை.

இரண்டாவது மணியும் அடித்து வண்டி புறப்படவும் தொடங்கிவிட்டது.

இளைஞன் அவளை இழுத்துக்கொண்டு எப்படியோ வண்டிக்குள் ஏறிவிட்டான்.

''சீ! ஒரு பெண்ணிடம் இப்படி நடந்து கொள்ள வெட்கமாக இல்லே?'' என்று சீறினாள் அவள்.

''சரி, சரி...சும்மா உட்கார்...'' என்றான்.

அவள் உட்காரவில்லை. என்னைப் பார்த்து, ''போலீசைக் கூப்பிடுங்கள் ஸார்... இவனைச் சும்மா விடக் கூடாது. கும்பகோணத்திலிருந்தே என்னை நிழல் போலத் தொடர்ந்து வருகிறான் இவன்'' என்றாள்.

இளைஞனின் முகம் கறுத்துவிட்டது. ''என்னிடமிருந்து நீ தப்பித்துக்கொண்டு போக முடியாது, தெரிந்துகொள்'' என்றான்.

நான் அவனை உற்றுப் பார்த்தேன். அவன் தலை குனிந்திருந்தது. ''மிஸ்டர்... என்ன இதெல்லாம்?'' என்றேன்.

''நீங்கள் சும்மா இருங்கள் ஸார்!'' என்றானே தவிர ஏதும் சொல்லத் தயாராக இல்லை அவன்.

''பண்பாடு, நாகரிகம் இன்னதென்று தெரியாமல் நடக்கிறவர்களைப் போலீசில் பிடித்துக் கொடுக்க வேண்டும்'' என்றேன்.

அவன் என்னை முறைத்துப் பார்த்தான். பிறகு ஒரு புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு படிக்கிற பாவனையில் அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவளோ இப்போது அழத் தொடங்கிவிட்டாள். இடையிடையே தனக்குத்தானே ஏதேதோ பேசிக் கொண்டு பல்லைக் கடித்தாள். சில சமயம் அழுகையையும் மீறிச் சிரிக்கவும் செய்தாள்.

நான் முடிவு செய்துவிட்டேன், இண்டிவனத்தில் வண்டி நின்றதும், முதல் வேலையாகப் போலீசிடம் இவனை ஒப்படைத்து விடுவதென்று.

''ஸார்... ஸார்... என்ன, ஸார், இது?'' குழறினான் அவன்.

''ஒன்றுமில்லை... உங்கள் சேவைகளைப் பாராட்டி விழா நடத்துகிறோம்'' என்றேன்.

போலீஸ்காரர் அவனருகில் சென்று, ''மிஸ்டர்! எழுந்திருங்கள்...உம்..'' என்றார்.

''எதற்காக?'' என்றான் இளைஞன்.

''எதற்காகவா? என் நகைகளையெல்லாம் பெட்டியில் பூட்டி வைத்துக் கொண்டிருக்கிறீர்களே...அதற்காக...'' என்றாள் பெண்.

இளைஞனின் வாய் அடைத்து விட்டது. பரிதாபமாகச் சுற்று முற்றும் பார்த்தான். தான் இதுகாறும் நடத்திய பெரிய மனித வேஷம் பொல பொலவென்று அவிழ்ந்து விட்டதே என்கிற துயரம் நாணத் திரையாகப் படர்ந்து விட்டது.

''நகைகளா?... நான் எடுக்கவில்லை ஸார். அவளேதான் கொடுத்தாள் என்னிடம்'' என்றான் படபடப்புடன். ஆனால் குரலில் வேகம் இல்லை.

''அதை ஸ்டேஷனில் வந்து சொல்லுங்கள்'' என்றார் போலீஸ்காரர்.

''நான் வரமாட்டேன். என்னிடம் டிக்கட் இருக்கிறது. பிரயாணம் செய்யும் உரிமையை யாரும் பறிக்க முடியாது'' என்றான் இளைஞன் பிடிவாதமாக.

அதற்குள் வண்டி புறப்பட்டு விட்டது.

''செங்கல்பட்டில் உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்'' என்றார் போலீஸ்காரர்.

இளைஞன் புத்தகத்துக்குள் தலையைப் புதைத்தான். ஒரு தடவையாவது மறந்தும் கூட அந்தப் பெண் இருந்த திசையை அவன் பார்க்கவில்லை. போலீஸ்காரர் முன்னால் வாலாட்டலாமா? பரம சாதுவாக மாறி விட்டான். ஆனால் நெடு நேரம் புத்தகத்துக்குள் ஆழ்ந்திருக்கவும் அவனால் முடியவில்லை.

''ஏன் ஸார், இப்போ ஐ. ஜி. யாரு?'' என்று கேட்டான்.

''உங்க தாத்தா...'' என்றார் போலீஸ்.

''நீங்க தமாஷ்காரர், ஸார். எங்க தாத்தா ஐ. ஜி.யா இருந்தவர்தான். ரத்னவேலு முதலியார் தெரியுமா? அவர் இருந்த போது டப்பின்டன் துரைதான் கலெக்டர். எங்க வீட்டிலே குரூப் போட்டோ கூட இருக்குது.''

போலீஸ் விழித்தார்.

''சர்க்கிள் யாரு இப்போ?'' இளைஞன் கேட்டான்.

பதில் சொல்லிக் கொண்டிருக்கப் போலீஸ்காரருக்குப் பைத்தியமா, என்ன?

இளைஞன் அதற்காகக் கவலைப்படவில்லை. ''ராமமூர்த்தி இருந்தாரே, அவரேதான் இருக்காரா இப்பவும்? எங்க அப்பாவுக்கு அவர் ரொம்பவும் வேண்டியவர். அடிக்கடி எங்க வீட்டுக்கு வருவார். நான் ஒரு நாள் புலி வேட்டைக்குப் போனபோது அவரும்கூட வந்திருந்தார்... நான் புலியெல்லாம் கூடச் சுட்டிருக்கேன் ஸார். ஆல்பம் பார்க்கிறீங்களா?'' போலீஸ்காரர் எழுந்து கதவருகில் போய் நின்றுகொண்டார்.

செங்கல்பட்டு வந்தது. இளைஞன் எழுந்தான். அந்தப் பெண்ணைப் பார்த்து, ''உம்.. நீயும் வா போலீஸ் நிலையத்துக்கு'' என்றான்.

''நான் வரவேண்டிய அவசியம் இல்லை'' என்றாள் அவள்.

போலீஸ்காரர், அவன் கைகளைப் பற்றி, ''வாப்பா...இங்கே கலாட்டா செய்தா யாருக்கும் தெரியும் சேதி'' என்றார்.

இச்சமயம் ஜன்னலுக்கு வெளிப்புறமிருந்து ''சேகர், என்னப்பா இது?... காலையிலிருந்து உனக்காகக் காத்திருக்கிறேன்... ஏன் இவ்வளவு நேரம்?'' என்ற குரல் கேட்டது. அடுத்து அதே குரல் ஒரு துள்ளுத் துள்ளி, ''அடடே, மாலதியா?... என்னம்மா இது? ஒரு தகவலும் இல்லாமல் திடீரென்று புறப்பட்டு வந்திருக்கிறாய்?'' என்று விசாரித்தது.

''அதை ஏன் கேட்கிறாய் போ'' என்றான் சேகர். ''உன் தங்கையைப் போலீஸ் பந்தோபஸ்துடன் அழைத்து வந்திருக்கிறேன்'' என்று தொடர்ந்தவன் என்னைச் சுட்டிக் காட்டி, ''ஸார்தான் போலீஸை வரவழைத்தார்'' என்றான்.

எனக்கு எதுவும் விளங்கவில்லை.

அவனே விளக்கினான்: ''திருச்சி போவதற்காகக் கும்பகோணம் ஸ்டேஷனுக்கு வந்தேன். அங்கே மாலதியைப் பார்த்தேன். உடனே என் பயணத்தை மாற்றிக்கொண்டு, உனக்கும் தந்தி கொடுத்துவிட்டு இங்கே வந்து நிற்கிறேன். அடுத்த வாரம் நான் ஸ்டேட்ஸுக்குப் போயாக வேண்டும். சித்தசுவாதீனம் இல்லாத பெண்ணை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ள வேண்டாமோ? நான் வராமல் இருந்தால் இந்நேரம் அவளுடைய நகைகளையெல்லாம் பிடுங்கிக்கொண்டு அந்த முட்டைக் கண் வைத்தா அவளைப் பாண்டிச்சேரியில் நடுத்தெருவில் நிறுத்திவிட்டுப் போயிருப்பான். விழுப்புரத்தில் இவளை இறக்கி அழைத்துக்கொண்டு போனான் வைத்தா. கையில் நகைப் பை இல்லை என்று தெரிந்ததும் அவன் மட்டும் நழுவி ஓடிவிட்டான். இந்த அசடும் வரமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தது. சரி... சரி... அந்தக் கதை எல்லாம் எதற்கு? அவளை ஜாக்கிரதையாக அழைத்துக்கொண்டு போ... நான் ஸ்டேட்ஸுக்குப் போனதும் கடிதாசு போடுகிறேன்.''

போலீஸ்காரர் போய்விட்டார். என்னால் அந்த இளைஞனை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. சித்தசுவாதீனம் இல்லாமற்போனது யாருக்கு? எனக்கா, அந்தப் பெண்ணுக்கா? இறைவா, மனிதத் தன்மை என்கிற ஜோதியைத் தரிசிக்கச் சாதாரண, சாமான்யக் கண்களுக்குச் சக்தி இல்லையே!



வீணை வித்தகரின் வெளிநாட்டு விஜயம்


வீணை வித்துவான் எஸ். பாலசந்தர் அவர்கள் அப்பியாசம் செய்யாத இசைக் கருவிகள் குறைவு என்றே சொல்லலாம். கஞ்சிரா முதல் சித்தார் வரையில் எதிலும் கச்சேரி செய்யும் அளவுக்கு வாசிக்கும் திறமை உள்ளவர். வீணையில் அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன். காலம் செல்லச் செல்ல ஆர்வம் மோகமாகி, மோகம் ஆவேசமாக மாறி, நாளாக ஆக வீணையே உலகம் என்று ஆக்கிக் கொண்டு விட்டார். தமது சொந்த முயற்சியினால் வீணையின் நுட்பங்களனைத்தையும் அறிந்து கொண்டு கர்நாடக சங்கீதத் துறையில் பூரண சந்திரனாக இன்று பிரகாசிக்கிறார் பாலசந்தர். அவருடைய விடாமுயற்சிக்கும் மேதைக்கும் இதைவிட உதாரணம் தேவையில்லை.

பாலசந்தர் வீணையைக் கையாளும் முறையும், அவர் அதில் எழுப்பும் இசை அலைகளும், இனிமை ஒலிகளும் பலதரப்பட்டவை. கர்நாடக ராக வித்யாசங்களும், நிரவல்களும், தானங்களும் புதுப் புது மாதிரிகளில் அளிக்கும் அதே வாகனத்துடன் ஹிந்துஸ்தானி பாணியில் சஞ்சாரங்களையும் ரக்திகளையும் இனிக்க இனிக்கப் பொழிவார். பத்துப் பேர் மட்டுமே உயர் சங்கீதத்தைக் கேட்டு மகிழும் வண்ணம் அடக்கமாகவும் வாசிக்கத்தெரிந்த பாலசந்தர் வீணையைக் கோட்டு வாத்தியத்துக்குள்ள கம்பீரத்துடனும், கலகலப்புடனும், ஒலி ஜாலங்களுடனும் வாசித்துக் கேட்போரைப் பிரமிக்க வைப்பார். வழி வழி வந்த சம்பிரதாயத்தை மட்டுமே தழுவிக் கச்சேரிகள் செய்ய வேண்டும் என்று எண்ணாமல் தமது கற்பனை வளத்தினால் புதுமைகளையும் அநாயாசமாகப் புகுத்திக் கேட்பவர்களைத் திகைக்கவும் வைப்பார். மேனாட்டு ரசிகர்கள் இவரை வீணையில் ''ஜால வித்தைக்காரர்'' என்று பாராட்டு வழங்கினார்களாம்.

கர்நாடக சங்கீதத்தின் நுட்பங்களையும், மற்ற நாட்டு இசைகளில் காணப்படாத பாவ அம்சங்களையும் உணர்ச்சியூட்டும் சிறப்புக்களையும் மேனாட்டு மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்கும் முயற்சியில் வெற்றி கண்ட வித்வான்களில் பாலசந்தருக்கு முக்கிய இடம் உண்டு. அமெரிக்காவில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே சுற்றுப் பிரயாணம் செய்து அனுபவப்பட்ட ஸ்ரீ பாலசந்தர் இப்போது ருஷ்யா, ஹங்கேரி முதலிய நாடுகளுக்கும் சென்று, பல கச்சேரிகள் நிகழ்த்தி அந்த நாட்டு மக்களின் மனத்தைக் கவர்ந்து வந்திருக்கிறார். மாஸ்கோவிலும், இதர நகரங்களிலும் அவர் நிகழ்த்திய வீணைக் கச்சேரிகளை உணர்ச்சிப் பெருக்குடன் கேட்டு ரசித்தார்கள் என்று விமரிசகர்கள் புகழ்ந்திருக்கிறார்கள். கச்சேரிகளுக்கு முன் ரசிகர்களைத் தயார்ப்படுத்தத் தாமே அழகான முன்னுரைகளை அளவுடன் பேசும் திறமை அவருடைய இசை நிகழ்ச்சிகளுக்கு விசேஷ மதிப்பு அளிப்பதாகும். மேல் நாடுகளில் இந்த உத்தி வெற்றியைத் தந்துள்ளது. இதை நாம் அறியும் போது நமது உள்ளங்களும் பூரிக்கின்றன.

''இசை என்பது சொல்லளவில் விளக்க முடியாத ஒன்று. இதை உணர்ந்து அனுபவிக்கவே முடியும். பூகோள, இன, மதப் பாகுபாடுகள் எதுவும் இசைத் துறையில் இல்லை. உண்மையான கலைஞன் அவனுடைய கலையின் மூலம் மக்களின் உள்ளத்தில் நிரந்தரமாகவே வீற்றிருப்பான்'' என்பது பாலசந்தரின் அனுபவபூர்வமான அபிப்பிராயம்.

கலாசாரத் தூதுவராகச் சென்று வெற்றியுடன் திரும்பிய பாலசந்தருக்கும் அவருடன் சென்றிருந்த மிருதங்க வித்வான் குருவாயூர் துரைக்கும், தென்னகத்தில் உள்ள பல சங்கீத சபையினர் பாராட்டுகள் வழங்கிக் கௌரவித்திருக்கிறார்கள். சென்ற வாரம் கச்சாலீசவரர் கான சபையினர் அவரைப் பாராட்டிக் கௌரவித்தனர். அன்று அந்தப் பாராட்டு விழாவில் ஸ்ரீ டி. எல். வெங்கடராமய்யரும், நீதிபதி கே. எஸ். வெங்கடராமனும் ஸ்ரீ பாலசந்தரின் வித்வத் திறமையைப் பாராட்டிப் பேசி அவருக்குப் பொன்னாடையும் போர்த்திக் கௌரவித்தனர். பாலசந்தரின் புகழ் மேலும் மேலும் பரவிப் பெருகுவதாக.



அத்தியாயம் 29

ஆபத்து யாருக்கு?

கோயமுத்தூருக்குக் காரை ஓட்டிப் போகுமாறு டிரைவரிடம் கூறி அனுப்பிவிட்டுத் தினதயாளு கொச்சின் எக்ஸ்பிரஸில் ஏர்-கண்டிஷண்டு வகுப்பில் ஏறிப் படுத்து இரவு முழுதும் நிம்மதியாகத் தூங்கியபடி வந்து சேர்ந்தார். தந்த நிறத்தில் அச்கனும் கால்களை இறுகப்பற்றும் வெண்மையான சுருவாலும் உள்ளங் கால்களுக்கு இதமாக இருக்குமாறு குஷன் வைத்துத் தைத்த பஞ்சாப் ஸாண்டல்களும் அணிந்து ரயிலிலிருந்து இறங்கினார். கனமான மூக்குக் கண்ணாடி ஃப்ரேமும் கம்பீரமான பார்வையும் வழுக்கைத் தலையும் வணங்காத உடலுமாகக் காட்சி அளித்தார். பத்து முழ வேஷ்டியை மூலக் கச்சமாக அணிவதையும் ஜிப்பா, அங்கவஸ்திரம் தரிப்பதையும் அவர் கைவிட்டுக் கொஞ்ச நாட்களாகி யிருந்தன. முன்பு ஒரு நாள் உதகையில் உஷா விளையாட்டாகவோ, வினையாகவோ அவர் அணிந்திருந்த காந்திக் குல்லாயைக் கழற்றிவிட்டு 'இப்போதான் உங்க பர்ஸனாலிடி இம்ப்ரூவ் ஆகிறது' என்று கூறியதிலிருந்து அவர் அதனைப் பயன் படுத்துவதையும் படிப்படியாகக் குறைத்துக் கொண்டிருந்தார். அதோடு டில்லிக்குப் போகப் போகிறோம் என்கிற உறுதியும் அவர் உடை மாறுதலிலே காணக் கூடியதாயிருந்தது.

கோவை ஜங்ஷனிலே காத்துக் கிடந்த கான்ஸ்டபிள் முதல் கலெக்டர் வரையில் அவர் கண்ணில் படுவதற்காகப் பிரயத்தனப் பட்டார்கள். ஆனால் அவர் பார்வையோ எல்லாரையும் தாண்டித் தொலைவில் நின்ற உஷாவிடம் சென்றது. ''என்னம்மா! நீயே ஸ்டேஷனுக்கு வந்தியா, பாவம்! உடம்புக்கு ஒண்ணுமில்லாமல் நல்லாயிருக்கிறாயா ?'' என்று கேட்டுக் கொண்டே அவளுடன் நடந்தார். சத்தியபுரிக்கு வரும்போது பெட்டி படுக்கை எதுவும் கொண்டு வரும் வழக்கமோ, அவசியமோ அவருக்கு இல்லையாதலால் சாமான்கள் பற்றிய கவலையின்றிச் சென்று ஹெரால்ட் காரில் ஏறிக் கொண்டார்.



காரைச் சூழ்ந்து நின்று நமஸ்கரித்தவர்கள் சலாம் வைத்தவர்களை எல்லாருக்கும் பொதுவாக, ''அப்புறம் பார்ப்போமே? மத்தியானத்துக்குமேல் வீட்டுப்பக்கம் வாருங்கள்'' என்றார்.

தங்க நிறத்தில் மாங்காய் டிசைன்களுடன் கூடிய செருப்பு ஸ்லிப்பர்கள் தரித்திருந்த உஷா, கிளச்சை அழுத்தியிருந்த தனது வெண்மையும் மென்மையும் பொருந்திய இடதுகாலை மெல்லத் தளர்த்தியதும் கார் நகர்ந்தது.

''வெண்ணெய் மாதிரி ஓடுகிறதே !'' என்றார் தினதயாளு.

''அப்படி ஓட்டுகிறேன் என்று சொல்லுங்கள். உங்களைக் குலுக்கிப்போடுகிற மாதிரி 'கிளச்சை ரிலீஸ்' பண்ணத் தெரியாதாக்கும் எனக்கு!''

''என்ன உஷா, எடுத்த எடுப்பிலேயே சண்டை பலமாயிருக்கு? அந்த டிரைவர் மடையன் எங்கே? ஏன் அவன் பெரிய காரை ஸ்டேஷனுக்குக் கொண்டு வரவில்லே? உன்னைப் போகச் சொல்லி விட்டு அவன் படுத்துத் தூங்கி விட்டானா? மெட்ராஸிலே யிருந்து அவனைக் காரிலே அனுப்பிச்சு வைச்சது இதுக்காகவா?''

''ஏன், உங்களுக்கு நான் கார் ஓட்டி வரப் பிரயாணம் செய்யறதுன்னு அவமானமா இருக்குதா?''

''உஷா! உனக்கு 'மூட்' சரியில்லே! உன் மனசை 'அப்ஸெட்' பண்ணின விஷயம் என்ன? முதல்லே அதைச் சொல்லு; பாக்கி யெல்லாம் பிறபாடு பேசிக்கிடலாம்!''

''அப்பா! நான் சொல்றேன்னு நீங்க கோவிச்சுக்கிட்டுப் புண்ணியமில்லே. எத்தனையோ தொழிற்சாலைகளுக்குத் திறப்பு விழா நடத்தி வைச்சிருக்கீங்க; அதை யெல்லாம் டைரியிலே குறிச்சிக்கிட்டுக் கரெக்டா ஒண்ணேமுக்கால் வருஷத்துக்கப்புறம் அதே இடத்துக்குப் போனால் மூடுவிழாவையும் உங்க கையாலேயே நடத்தி வைச்சுட்டு வந்துடலாம் எல்லாத்துக்கும்!''

தினதயாளு இதனை விரும்பி ரசித்தார்; பெரிதாகச் சிரித்தார். ''தாமரைத் தொழிலகத்தைப் பற்றிச் சொல்றியா? நானும் கேள்விப்பட்டேன்! இந்த மூக்காலனு பாக்டரியை நிர்வகிக்கத் தெரியாதவன்தான் தமிழகத்தையே கட்டிப் பிடிக்க நிர்வகிக்கப் போறவன் போலே மார் தட்டிக்கிட்டுக் கிளம்பியிருக்கிறானாமே? தேர்தல் பிரசாரத்திலே தீவிரமா இறங்கியிருக்கிறானாமே?''


''எல்லாம் நீங்க கொடுத்த இடம்தானே? ஆரம்பத்திலேயிருந்தே நான் சொல்லிக்கிட்டிருக்கேன். அவனுக்கு ரொம்பவும் சலுகை காட்டாதீங்க; கழுத்துக்கு மேலே ஏறி உட்கார்ந்துக்கிடுவான்னு; நீங்க கேட்கலே. இப்ப பாருங்க, உங்களையே எதிர்க்கிறான்!''

''என்னை எங்கேம்மா எதிர்க்கிறான்? நான்தான் பார்லிமெண்ட் தொகுதிக்கு மாறிட்டேனே? தமிழகத்திலே எனக்குச் செல்வாக்கு அதிகமாகிக்கிட்டே வர்றது சில பேருக்குக் கண்ணை உறுத்துதுன்னு சூசகமாத் தெரிய வந்துச்சு. அல்பத்தனமான சில்லறைச் சச்சரவுகளெல்லாம் நமக்கு வேணாம்னுதான் உதறிட்டேன். இனிமேல் நான் நடத்த வேண்டிய சண்டை சச்சரவோ, வகிக்க வேண்டிய பதவி அதிகாரமோ எதுவானாலும் பெரிய அளவிலே தான்! அந்த மட்டும் ஒரு திருப்தி!''

'' 'என்னை எங்கே எதிர்க்கிறா'ன்னு கேட்கிறீங்களே? நேரடியா உங்களைப் பகைச்சுக்கிட்டாத்தானா? இத்தனை நாட்களா உங்க தொகுதியாக இருந்ததாச்சேன்னு கொஞ்சமாவது யோசனை இருந்துச்சா அவனுக்கு? அதே ஸ்தானத்துக்குத்தானே இப்போ அவன் எதிர்த் தரப்பிலே போட்டியிடறான்? பிரசாரத்தின்போது உங்களைத் தாக்காமல் விடுவானா?''

''கிடக்கிறான் தள்ளு. தேர்தலுக்கு நின்னுட்டாப் போதுமா? ஒண்ணுமில்லாத பரதேசிப் பயலுககூட என்னென்னவோ நோக்கத்திலே கடன் வாங்கியாவது தேர்தலுக்கு நிற்கிறானுங்க!''

''தங்கப்பனை எப்பவுமே நீங்க ரொம்பவும் குறைச்சலா மதிப்புப் போட்டு வருகிறீங்க, அப்பா! அது ரொம்பவும் ஆபத்து!''



''ஆபத்து, ஆபத்துன்னுதான் நீ ஆரம்பத்திலேயிருந்து சொல்லிக்கிட்டு வரே! அந்த ஆபத்து நீ நினைக்கிறாப் போல என்னைத் தேடி வராதாத் தெரியலே; அவன் தொழிலகத்துக்குத்தான் வந்து சேர்ந்திருக்குது ஆபத்து.''

''அது தானாக வந்து சேரலே அப்பா! நான் வரப் பண்ணினேன்!''

''என்ன?'' என்றார் தினதயாளு திகைப்புடன். ''உஷா! இப்போ என்ன சிக்கல்லே என்னை மாட்டி விட்டிருக்கே நீ!''

அவள் சிரித்துக் கொண்டே சுருக்கமாகத் தங்கப்பன் பிராபல்யம் அடைவதைத் தடுக்கவும் அவனுக்கு இருந்த நல்ல பெயரைக் கெடுக்கவும் தான் மேற்கொண்ட முயற்சிகளை விவரித்தாள்.

எல்லாவற்றையும் கேட்ட தினதயாளு, ''ஐயய்யோ! இந்த விஷயம் வெளியே தெரிந்தால் என் கதி என்ன ஆகிறது?'' என்றார்.

''அது எப்படியப்பா, தெரியப் போகுது? நம்மிருவர் பேரும் இதில் எந்தக் கட்டத்திலேயும் இழுக்கப்படலையே! மேலும் நான் எந்தத் தொழிலகத்தை மறைவிலிருந்தபடியே மூடி வைத்தேனோ, அதே தொழிலகத்தை நீங்கள் மறுபடியும் திறந்து வைக்க ஊர் அறியக் காரணமாயிருந்து, தொழிலாளர் பெருமக்களின் பாராட்டுக்குள்ளாகப் போறீங்களே!'' என்றாள் உஷா.

அந்தச் சமயம் கார் சத்தியபுரியை அடைந்து அவரது இல்லத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. காம்பவுண்டுக்கு வெளியே ஒரு பெருங் கூட்டத்தைக் கண்டார் தினதயாளு. அவர்களில் பலர், 'தொழிலாளருக்கு நிதி வேண்டும்', 'தொழிலகம் திறக்க வேண்டும்', 'ஏழைகளுக்கு வாழ்வளியுங்கள்' என்பது போன்ற வாசகங்களுடன் கூடிய பெரிய துணிக் கொடிகளைப் பிடித்துக் கொண்டு நின்றனர்.

தமது மகளின் சாமர்த்தியத்தைக் குறித்துத் தினதயாளுவால் ரொம்பவும் வியக்காமல் இருக்க முடியவில்லை.

அத்தியாயம் 30

பயமுறுத்தல்கள்

தினதயாளுவின் தலையீட்டால் காரியங்கள் மிகத் துரிதமாக நடந்தேறின. ''தம்பி, உனக்குச் சமதையான அறிவுள்ளவர்களுடன், படித்தவர்களுடன் நீ நேர்மை நியாயம் என்றெல்லாம் வாதாடினால் அர்த்தமுண்டு. படிப்பறிவு இல்லாத பாமர மக்களிடம் உன் தர்க்க ரீதியான சொற்கள் எடுபடாது. ஆகவே இங்கே தேவைப்படுவது 'காமன் ஸென்ஸ்'தான்'' என்று தினதயாளு தங்கப்பனுக்கு எடுத்துரைத்தார். ''பகுத்தறிவை நீ பயன்படுத்தினால் தொழிலகம் பூட்டிக் கிடப்பதால் யாருக்கும் ஒரு பயனுமில்லை என்பதை உணர்வாய். ஏராளமான பணத்தை அதில் முடக்கியிருக்கிறாய். இயந்திரங்கள் வேலை செய்யாமல் தூங்கும் ஒவ்வொரு நிமிஷமும் உனக்கு நஷ்டம் என்பது மட்டுமில்லை; வாங்கிய கடனுக்குக் கொடுக்கும் வட்டி வேறு உன் நஷ்டத்தை இரட்டிப்பாக்கிக் கொண்டிருக்கிறது. நான் தொடங்கி வைத்த ஃபாக்டரி பூட்டிக் கிடப்பதால் எனக்கு வேறு வேண்டாத அவப் பெயர்....... நீ என்ன சொல்கிறாய்?''

''சொல்ல என்ன இருக்கிறது?'' என்றான் தங்கப்பன் நகைத்துக் கொண்டே. இவர்களே மறைவில் நின்று ஒரு சிக்கலைத் தோற்றுவிப்பதும் பிறகு இவர்களே முன் வந்து சிக்கலை விடுவிப்பதும் சிரிப்புக்கு இடமளிப்பதாகத்தான் தோன்றியது அவனுக்கு. ஆனாலும் இந்த மோசடியை அம்பலப்படுத்த இயலாத நிலையில் இப்போது தினதயாளுவின் யோசனைகளுக்கு இணங்குவதைத் தவிர அவனால் வேறு என்ன செய்ய முடியும்? தொழிலகம் மீண்டும் இயங்கட்டும்; இனியேனும் தகராறுகள் ஏதுமின்றி எப்போதும்போல் லாபகரமாகச் செயல் புரியட்டும்; அதற்கு ஆண்டவன் அருளட்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டு சம்மதம் தெரிவித்தான்.

''அதிருக்கட்டும், தம்பி! நீ என்ன, அரசியலில் இறங்கத் தீர்மானித்திருக்கிறாயாமே? உனக்கு எதற்கு இந்தத் தொல்லைகள்? தொழிலகத்தைக் கவனிப்பதே உனக்கு முழு நேர வேலையாச்சே. கவனம் வேறு திசையில் திரும்பினால் தொழிற்சாலை குட்டிச்சுவராகி விடும்! நான் பெரியவன். உனக்கு நல்லதைச் சொல்கிறேன். கேட்பார் பேச்சைக் கேட்டுக் கொண்டு கெட்டுப் போகாதே!''

''உங்களுக்கு ஏற்கெனவே தெரியாத காரண காரியங்கள் எதையும் புதுசா உங்களுக்கு நான் விளக்கி விடப் போறதில்லே, ஸார்! இந்தத் தேர்தலுக்கு நிற்க வேண்டியதை நான் என் கடமையென்று நினைக்கிறேன். அவ்வளவுதான்; கடமையைச் செய்யக் காலம், நேரம் இருக்குமான்னு யோசிக்கலாமா? நேரத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்!''

''அப்படி அவ்வளவு தீவிரமா நீ ஆசைப்படுகிற பட்சத்தில் முன்னாலேயே என் காதில் ஒரு வார்த்தை போட்டு வைச்சிருந்தால் உனக்கு ஒரு டிக்கெட் கிடைக்க நானே ஏற்பாடு பண்ணியிருப்பேனே, இலகுவா. போகட்டும். இப்போ தாமதமா அதைப் பத்தி யோசிக்கப் புண்ணியமில்லே!''

இதை அவர், தமது பரந்த மனப்பான்மையைக் காட்டுவதாகவா அல்லது தயான சிந்தனையை உணர்த்துவதாகவா எந்த நோக்கத்தில் கூறினார், தான் அதை எப்படி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார் என்பதொன்றும் தங்கப்பனுக்குப் புரியவில்லை. மெல்லச் சிரித்துக் கொண்டு, ''கொடுத்தாலும் டிக்கெட்டை ஏற்றுக் கொள்வதற்கில்லை ஸார்; நமக்குள் கருத்து வேற்றுமைகள் ரொம்ப இருக்கின்றன'' என்று மட்டும் கூறி

எழுந்தான். வணக்கம் செலுத்தி விடை பெற்றான். தினதயாளு தலையை ஆட்டி அவனை அனுப்பி வைத்தார்.

அன்று மாலையே தினதயாளு தொழிலாளர் பிரதிநிதி, ஜில்லா கலெக்டர், தங்கப்பன், மாருதி ஆகியோருடன் கூட்டாகவும் தனித் தனியாகவும் சுமார் மூன்று மணி நேரம் வரை ஆலோசனைகள் நடத்தினார். விஷயங்களை இன்னவையென்று தெளிந்தார். வேலையிலிருந்து நீக்கப்பட்ட ஃபிட்டர் பக்கிரிசாமி மன்னிப்புக் கோரிக் கடிதம் எழுதித் தர வேண்டுமென்றும், தங்கப்பன் அவனை வேலையிலிருந்து நீக்கிய உத்தரவை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், பக்கிரிசாமி மட்டுமே தொழிலகம் பூட்டிக் கிடந்த பதினைந்து நாட்கள் சம்பளத்தையும் முழுமையாக இழக்க வேண்டுமென்றும், மற்ற அனைவரும் அத்தினங்களுக்கான பாதிக் கூலி பெற வேண்டுமென்றும் ஏதோ ஒரு மாதிரியாகச் சமரசம் செய்து கொண்டார்கள்.

''இந்த மன்னிப்பை அவன் அன்றைக்கே கேட்டுக் கொண்டிருந்தால் இந்த அளவுக்கு விஷயம் முற்றியிருக்காது'' என்று மாருதியிடம் பின்னால் தங்கப்பன் கூறி வருத்தப்பட்டுக் கொண்டான்.

''அப்படி அவன் மன்னிப்புக் கேட்பவனாயிருந்தால் முதலில் உன்னை விட்டெறிவது போல் அந்த வார்த்தைகளையே பேசியிருக்க மாட்டானே! இதற்கெல்லாம் வித்திட்டவங்க என்ன விளைய வேண்டும் என்று ஆவலோடு எதிர்பார்த்தாங்களோ அதை நிறைய அறுவடை செய்து கொண்டாங்க. பக்கிரிசாமியைச் சொல்லப் போவானேன்? அவன் மன்னிப்புக் கேட்கிறதுக்குப் பதில் நீயே முந்திக்கொண்டு அவனை மன்னிச்சுவிட்டிருந்தாலும் நிலைமை இத்தனை விபரீதமாகியிருக்காது. ஆனக்கூடி இப்போ நீ என்னத்தைச் சாதிச்சே? மன்னிப்புக் கேட்டுப் பக்கிரிசாமி எழுதிக் கொடுத்த கடிதாசை வேணுமானால் அழகா கண்ணாடி ஃப்ரேம் போட்டுச் சுவரிலே மாட்டிக்கிடலாம்!''

தங்கப்பன் வேதனையுடன் தலை குனிந்து உட்கார்ந்திருந்தான்.

''நான் உண்மையா விசனப்பட்டுப் பேசறேன் தம்பி! நினர்களின் துயர் துடைத்த தினதயாளு அப்படின்னு அவர் நல்ல பேரு கட்டிக்கிட்டுப் போறாரு. ஏழு நாள் கூலி இவங்களுக்கு நஷ்டம்னு அதைப் போலவே ஏழெட்டு மடங்கு உனக்கெதிராகத் தேர்தல் சமயத்திலே பிரசாரம் செய்து சம்பாதிச்சுடுவாங்க. உனக்கு விரோதமா உனக்குக் கீழே வேலை செய்கிறவங்களே வீட்டுக்கு வீடுபோய்ப் பேசினால் அதிலே எத்தனை அழுத்தமும் வேகமும் இருக்கும்!''

''போதும் ஸார்! போதும்! இதுக்கு மேலே என்னால் தாங்க முடியாது!''

''தம்பி! துன்பத்தை எதிர் நோக்கத் தைரியம் வேணும்! ஆழம் தெரியாமே காலை விடறதைவிட எத்தனை சிரமம் காத்திருக்குதுன்னு உணர்ந்துக்கிட்டுக் காரியத்தில் இறங்குகிறது நல்லது. இப்போ ஊரில் உனக்கு ரொம்பவும் கெட்ட பேரு. ஃபாக்டரி பதினைந்து நாளா மூடிக் கிடந்ததன் விளைவா நேற்று வரை குழாயடிப் பேச்சுக்கிடையே உன்னை 'மவராசன்'னு வாழ்த்தின பெண் பிள்ளைங்ககூட இப்போ, 'உம், இவரு என்ன பெரிசா பாக்டரி கட்டிப்பிட்டாரு? கள்ளுக் கடை நடத்தி இவன் அப்பன் சேர்த்து வைச்ச சொத்துத்தானே'' என்கிறாங்க. கள்ளுச் சாமியின் கடைக்கு வந்தவங்களையெல்லாம் தேடிக் கண்டுபிடிக்க உன் சொத்தைப் பிரிச்சுக் கொடுத்து விட்டால் தலைக்குப் பத்துப் பதினைஞ்சு கூடத் தேறாது; ஃபாக்டரியும் இராது என்பது அந்த அப்பாவிங்களுக்கு எப்படிப் புரியும்?''

'' என் தொழிலாளர்களுக் கெல்லாம் லாபத்தில் பங்கு கிடைப்பது போல் அவர்களுக்கு 'ஷேர்'கள் ஒதுக்க வேண்டும் என்று கூடத் திட்டம் போட்டிருந்தேன் ஸார்! ஆனால் அவர்கள் என் அநுதாபத்தை இழந்து விட்டாங்க; அடியோடு இழந்து விட்டாங்க'' என்றான் தங்கப்பன் நாத்தழுதழுக்க.

''என்னமோ தம்பி! மொத்தத்தில் நீ தேர்தலுக்கு நிற்கிற இந்தச் சூழ்நிலை நல்லா இல்லை. அதுக்கு மாறாகத் தினதயாளுவின் யோசனைப்படி ஒதுங்கிக்கிட்டால் அநுசரணையாக நடந்து அவர்கிட்டே நல்ல பேர் சம்பாதிச்சால் பலவிதங்களிலே உனக்கும் தாமரைத் தொழிலகத்துக்கும் நன்மை. அரசினர் ஆதரவு இல்லாமல் இந்த நாளிலே எதைச் சாதிக்க முடியுது? நல்லா யோசிச்சுச் செய்! உன்னுடைய சொத்தையெல்லாம் இதிலே முடக்கியிருக்கே, புதுசா கஷ்டங்கள் வராமலிருக்கணும் பார்!''

இந்தச் சமயத்தில் மேஜை மீதிருந்த டெலிபோன் மணி அடித்தது. ''தாமரைத் தொழிலகம்' தங்கப்பன் பேசுகிறேன்!''

மறுபுறத்தில் உஷா, ''நேற்றைக்குக் காலையிலே அப்பா ரொம்ப நேரம் உனக்குப் புத்தி சொல்லிக் கொண்டிருந்தாரே, அதைப் பற்றிச் சிந்தனை பண்ணினாயா?'' என்றாள்.

''அப்படி யார் கேட்கிறார்கள்?'' என்றான் தங்கப்பன்.

''ஏன்? நான்தான்!''

''உன்னிடம் அது பற்றி நான் பேச வேண்டிய அவசியமில்லை!''

''அப்பா கேட்கச் சொன்னார் என்றால்?''

''நன்றாகச் சிந்தனை பண்ணி விட்டேன்!''

''முடிவு?''

'' 'நிச்சயம் தேர்தலுக்கு நிற்கப் போகிறேன்! உங்களைப் போன்ற போலிகளின் தோல்விக்காக முழுமூச்சுடன் போராடப் போகிறேன்' என்று அவரிடம் சொல்லு!''

'ணங்' என்று அறைகிற மாதிரி அவன் டெலிபோனைக் கீழே வைத்தான்.

மாருதி தமது ஆனந்தக் கண்ணீரைத் துடைத்து விட்டபடியே, ''தம்பி! இத்தனை பயமுறுத்தல்களுக்கும் அசையாத உன் மன உறுதியையும் நேர்மையில் நீ வைத்துள்ள நம்பிக்கையையும் கண்டு எனக்கு அழுகையே வந்து விட்டது'' என்று கூறி விம்மினார்!

''மாருதி ஸார்! எங்கே உங்கள் கிழட்டுத் தொண்டையின் வாலிபக் குரலிலே 'அச்சமில்லை' பாட்டைப் பாடுங்க, பார்க்கலாம்'' என்றான் தங்கப்பன். (தொடரும்)



எப்பொழுதும் புத்துணர்ச்சியுடன் இருங்கள்
நாள்முழுவதும் சுறுசுறுப்பாக
இயங்குவதற்கான புத்துணர்ச்சிக்கு
புதிய கால்கேட் லோர்னே டால்க்
புதிய கால்கேட் லோர்னே டால்க்கின் புதுப்பிக்கும் நறுமணம் உங்களைக் குளுமையுடனும், புத்துணர்ச்சியுடனும் வைத்திருக்கிறது.... நாள் முழுவதும் அந்தத் துடியான சுறுசுறுப்பைத் தருகிறது. இளமைத் துடிப்பும், சுறுசுறுப்பும், விளையாட்டுகளில் பிரியமுள்ளவர்கள் குறிப்பாக கால்கேட் லோர்னே டால்க் வியர்வையைத் துரிதமாக கிரகித்துக்கொண்டு தாங்கள், நாள் முழுவதும் உற்சாகமாக இருக்க உதவுவதை நன்கு அறிவார்கள்!
இது சிக்கனமானதும்கூட! உங்கள் குடும்பத்தினருக்கு கால்கேட் லோர்னே டால்க்கை வாங்குங்கள்.—அது சுறுசுறுப்பான நாகரீக மக்களுக்கேற்ற புதியதொரு பரவசமூட்டும் நறுமணம் கொண்டது!
Lournay
புதிய
சிக்கனமான
டால்க் நவீன
டின்னில்

சேவைக்கு ஒரு சகோதரி



மோனிகா ஃபெல்டன்
— அருந்தமா

3

''என் கல்யாணம்'' என்று ஸிஸ்டர் சுப்புலக்ஷ்மி ஒரு நாள் ஆரம்பிக்கும் போது, குரலில் விசேஷ அமைதி தொனித்தது. ''— அதனை ஒரு கனவு என்றுகூடச் சொல்ல முடியாது.''

அந்தச் சமயத்தில் ஒருவிதத்திலும் அது அவளைப் பாதிக்கவில்லை. அந்தச் சம்பவம்—அதன் ஒரே ஒரு அம்சத்தைத் தவிர — கல்யாணம் என்று ஒன்று நடக்கவே இல்லையோ என்று எண்ணும்படி முற்றிலும் மறந்து விட்டது.

அப்பொழுது அவளுக்குப் பதினொன்று முடிந்து பன்னிரண்டாவது வயது ஆரம்பம். அவள் புக்ககத்தினர் முன்பின் தெரியாத மனிதர்கள். அவர்கள் எவ்வாறு தன் பெற்றோர்களுக்கு அறிமுகமானார்கள் என்பது சுப்புலக்ஷ்மிக்குத் தெரியவில்லை. ஒன்று மட்டும் கண்டிப்பாகத் தெரியும்—அந்தத் துக்கச் சம்பவத்துக்குப் பிறகு அந்த இரு குடும்பங்களும் மீண்டும் சந்திக்கவேயில்லை!

வழக்கம்போல் சுப்பிரமணிய ஐயர் தம் மூத்த பெண்ணின் கல்யாணத்துக்கு எவ்வளவு செலவழிக்கலாம், எவ்வளவு வரதட்சிணை கொடுக்கலாம் என்பதைப் பற்றிப் பேச்சு நடத்தியிருக்க வேண்டும். சுப்பிரமணிய ஐயர் அப்போது நூறு ரூபாய் சம்பளத்தை எட்டவில்லை. அவருக்கு என்றுமே கடன் படுவதில் விருப்பம் இருந்ததில்லை. அதற்கு மாறாக ஒவ்வொரு வருடமும் வருவாயிலிருந்து ஒரு பகுதியைச் சேமித்து வைத்திருந்தார். எனினும் ஒரு பெரிய குடும்பத்தை நடத்திக் கொண்டிருக்கையில் — மேலும் ஒரு குழந்தை பிறக்க இருக்கையில் — கல்யாணச் செலவையெல்லாம் சமாளிப்பது அவருக்கு எளிதாக இருக்கவில்லை.

ஜாதகங்கள் கைமாறின. விவகாரம் முடிவடைந்தது. ஜோசியர் இந்தக் கல்யாணப் பெண் விசேஷ சந்தோஷத்துடனும் அதிர்ஷ்டத்துடனும் வாழ்வாள் என்று கூறியதாக லக்ஷ்மி பின்னால் கேள்விப்பட்டாள். கல்யாணத்தை அடுத்து நடந்த விஷயங்களைப் பார்த்த போது இந்த ஜோசியம் ரொம்பவும் தவறானது என்று அப்போது தோன்றினாலும் இன்று ஸிஸ்டர் தமது அறுபத்து நாலு வருஷ வாழ்க்கையைப் பின்நோக்குங்கால், அந்த ஜோசியம் உண்மையாகவே பலித்து விட்டது என்பதைக் காண்கிறார்.

கல்யாண நிகழ்ச்சிகள், நீண்ட சடங்குகள் எதிலும் சுப்புலக்ஷ்மிக்கு அதிகமான சிரத்தை இருக்கவில்லை. கல்யாண ஏற்பாடுகள் சம்பந்தமாய் அலைச்சலும், அசதியும் அவளுக்கு மிகுதியாக இருந்தது ஒருவேளை இதற்குக் காரணமாய் இருந்திருக்கலாம். அருகில் அமர்ந்திருந்த பையனைப் போல் அவளும் புரோகிதர்கள் சொன்ன அந்த ரம்மியமான சம்ஸ்கிருத மந்திரங்களை அக்கறையுடன் சொல்லிக் கொண்டிருந்தாள். தொன்று தொட்டுத் தம்பதிகள் தங்கள் பரஸ்பர விசுவாசத்துக்குத் தந்து வரும் வாக்குறுதிகள் அவை. அவள் குனிந்து, அடக்கமாக, கல்யாணப் பிள்ளையுடன் கைகோத்து ஏழு முறை ஹோமத்தை வலம் வந்தாள். கல்யாண மாலைகளமாக இருந்து கழுத்தில் நமைச்சல் எடுத்திருக்கலாம். ஆனால் அதெல்லாம் இப்போது ஸிஸ்டருக்கு ஞாபகமில்லை; அதே போல் தம் கணவர் எப்படி இருந்தார், உயரமா, குள்ளமா, கறுப்பா, சிவப்பா என்பதும் முற்றிலும் மறந்து விட்டது. ஒன்று மட்டும் நன்றாக ஞாபகம் இருக்கிறது. அது கல்யாணப் புடவையின் அழகு. நெருக்கமான ஜரிகை வேலைப்பாடு செய்த உயர்ந்த ரக காசிப் பட்டுப் புடவை. விறைப்பாகவும், அதே சமயம் மிருதுவாகவும், கவர்ச்சியாகவும் இருந்தது.

இதற்கு முன் இதைவிட அழகான வஸ்து ஏதும் தான் கண்டதில்லைபோல் சுப்புலக்ஷ்மிக்குத் தோன்றியது. நடக்கும்போதெல்லாம் ஒரு கையால் அதை வருடிக் கொண்டிருந்தாள். அது தனக்கே சொந்தமானது. இனி பண்டிகை நாட்களிலும் தன் தாய் தன்னைக் கல்யாணங்களுக்கோ, உபநயனங்களுக்கோ அழைத்துச் செல்லும்போது உடுக்கக் கிடைக்கக் கூடியது! அவளால் இதை நம்பவே முடியவில்லை! புதிதாகக் கிடைத்த புடவைக்குப் பாத்தியதை கொண்டாடிப் புளகித்தாள். தான் நிரம்பப் பாக்கியசாலி என்று உணர்ந்தாள் அவள்.

மயிலாப்பூரில் சுப்புலக்ஷ்மி பிறந்த இடத்துக்கு அருகேயே ஒரு வீட்டைக் கல்யாணத்துக்கு எடுத்துக் கொண்டிருந்தார்கள். விசேஷம் முடிந்தவுடனே குடும்பம் மீண்டும் சைதாப்பேட்டை திரும்பியது. அங்கே போய்ச் சில வாரங்களுக்கெல்லாம் விசாலாட்சிக்கு இன்னொரு குழந்தை பிறந்தது.

பிரசவ அறையிலிருந்து வெளியே வந்த பாட்டி, ''இந்தக் குழந்தையும் ஒரு பெண்தான்'' என்றாள். அவள் குரல் ஏமாற்றத்தினால் வறண்டு கடுமையாக இருந்தது.

சித்தி உடனே அவளை எதிர்த்தாள். ''குழந்தை ஆண்டவன் அளித்த பொக்கிஷம். நாம் ஏன் வருத்தப்படவேண்டும்? தாயும் குழந்தையும் சௌக்கியமாக இருக்கிறார்களே என்று நாம் சந்தோஷம்தான் படவேண்டும்.''

உள்ளூர்க் கோவில் அன்புக்கும் அருளுக்கும் உறைவிடம் என்று கருதி எல்லோராலும் தொழப்பட்ட தேவதையின் பெயரையே குழந்தைக்கு வைக்க ஏற்பாடாயிற்று. சொர்ணம்பாள் மிகவும் அழகான குழந்தை. அதோடு நல்ல இனிமையான சுபாவம் படைத்தவள். ஆகையால் யாராலும் அவளிடம் அன்பு கொள்ளாமல் இருக்க முடியவில்லை. சுப்புலக்ஷ்மியைப் பொறுத்த வரையில் சொர்ணத்துக்கு ஈடு இணையே இருக்க முடியாதுதான். விசாலாட்சி ஓர் ஆண் மகவைப் பெற்றுக் கொடுக்கவில்லையே என்ற குறையைப் பாட்டி கூடச் சில தினங்களில் மறந்துவிட்டாள்.

அந்தக் குழந்தை பிறந்து சில வாரங்களே ஆகியிருக்கும். அப்பொழுதுதான் அந்தத் துக்க சம்பவம் நடந்தது.

சுப்புலக்ஷ்மியிடம் அதைப் பற்றிச் சொல்லித் தீரவேண்டியிருந்தது. கணவன் என்ற சொல்லின் அர்த்தத்தைக் கூட உணர முடியாத பிராயம். ஆகவே அவளுக்கு முதலில் அந்தக் கணவன் இறப்பும் ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. எவ்விதத்திலும் இந்த நிகழ்ச்சி அவளைப் பாதிக்கவில்லை. ஏனென்றால் இது விஷயத்தில் எந்தவிதமான உணர்ச்சிக்கும் இடமேயில்லை. கணவனுடைய பெற்றோர்களிடம் அவளுக்கு அனுதாபம் உண்டாயிற்று. அதுவும் ஒரே ஒரு முறை பார்த்து, சரியாகக் கூட நினைவில்லாத மனிதர்களிடம் எவ்வளவு அனுதாபம் தோன்றுமோ அந்த அளவுக்கு. அவள் தாயார் என்ன நடந்து விட்டது என்று அவளுக்கு எடுத்துரைத்தபோதும் தன் நிலை குறித்துப் பரிதாபப்பட ஒரு காரணமும் அவளுக்குத் தோன்றவில்லை.

சுப்பிரமணிய ஐயர், விசாலாட்சி, சித்தி மூவரும் தங்களுக்குள் பேசிச் சுப்புலக்ஷ்மியிடமிருந்து அவள் கணவனின் மரணத்தைப் பற்றி மறைக்க இயலாது என்ற முடிவுக்கு வந்தார்கள். ஆனால் அச்சிறுமி இன்னும் கொஞ்சம் பெரியவளாக ஆகும் வரையிலாவது விதவை நிலையின் கடுமையை அவள் அறியாமல் காக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். தங்கள் துக்கத்தை மறைத்துக்கொண்டார்கள். குடும்பம் எப்பொழுதும்போல் நடந்தது. தாங்கள் சரியாகக் கூட அறியாத, அந்த இறந்து போன பையனைப் பற்றி யாரும்




பேச்சே எடுக்கவில்லை. பாட்டிகூட மௌனமாக இருந்தாள்.

காண வருபவர்களை வராமல் தடுக்க முடியவில்லை. அண்டை அசலில் உள்ளவர்களும், நண்பர்களும் துக்கம் விசாரிக்கவும், அந்த இளம் விதவையைக் கண்டு அனுதாபப்படவும், இனி அவளுடைய வாழ்நாள் எப்படி நடக்கும் என்று அவள் பெற்றோர்களுடன் சேர்ந்து பரிதவிக்கவும் குழுமிய வண்ணம் இருந்தனர். அவர்களால் இதை நம்பவே முடியவில்லை. நல்ல குணத்தையும், பெரியவர்களிடம் மரியாதையாகவும் பக்தியாகவும், அழகாகவும், ரஞ்சகமாகவும் நடந்துகொள்கிற சுபாவம் படைத்தவள், தான் வாழ்நாள் முழுதும் இத்தகைய கொடுமையான தண்டனையை அனுபவிக்கும்படி போன ஜன்மத்தில் தான் என்ன பாவம் செய்திருக்க முடியும்? பெண்ணாய்ப் பிறந்த தன் நற்பலன்களை மனையாட்சி, தாய்மைப் பேறு போன்றவற்றை அவள் அனுபவிக்கவே முடியாது. இன்றிலிருந்து வாழ்க்கையின் சின்னஞ் சிறு இன்பங்கள் கூட அவளுக்குக் கிட்டாது. கல்யாணங்களுக்கோ, வேறு எந்தவிதக் கேளிக்கைக்கோ போக அவள் அனுமதிக்கப்படமாட்டாள். ஏறக்குறைய இன்னும் ஒரு வருஷத்துக்கு அவள் இப்பொழுதைப் போலவே ஆடை அணிய அனுமதிப்பார்கள். பிறகு — வயது வந்தவுடனேயே — அவள் உரு மாற்றப்பட்டு விடும். தலை மொட்டை அடிக்கப்படும். ரவிக்கைகள் போட்டுக் கொள்ளக் கூடாது. தன் உடலை மறைத்துக் கொள்ள அவளுக்கு வெள்ளை நூல் புடவைதான் கிடைக்கும். நாளைக்கு ஒரு முறைதான், அதுவும் எளிமையான உணவுதான் சாப்பிட முடியும். ஊறுகாய்கள், வெற்றிலை பாக்கு போன்ற சின்னஞ் சிறு இன்பங்களைக் கூடத் தவிர்க்க வேண்டும். எப்பொழுதோ ஒரு முறை கோவிலுக்குச் செல்லவோ, மற்ற யாரும் செய்ய விரும்பாத ஒரு வேலையைச் செய்யவோ அன்றி, அவள் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாது. ஒரு விதவை பிறர் கண்களில் படுவது நல்லதல்ல, அபசகுனமாதலால் இனி யார் எதிரேயும் வராமல் இருக்க வேண்டியது அவள் கடமை.

பெற்றோர்கள் உயிருடன் இருக்கும் வரை அவளுக்கு ஒரு வீடு இருக்கும். அவள் தாய் சுமங்கலியாகவே இறந்துவிட்டால் போயிற்று. இல்லையானால் அவளுடைய தகப்பனுக்குப் பின் அவள், அவளுடைய தாயார், சித்தி, இம்மூவருடைய விதியும் அவள் தங்கைகள் திருமணமாகிச் செல்லும் புக்ககக் குடும்பத்தினரின் மனோபாவத்தைப் பொறுத்திருக்கிறது. பாலமும், சாவித்திரியும், குழந்தை சொர்ணமும், அதிருஷ்டவசமாக நல்ல கணவர்களைப் பெற்றால், சுப்புலக்ஷ்மிக்கும், அவள் தாயாருக்கும், சித்திக்கும் செல்வதற்கென்று வீடு கிடைக்கும். அங்கு பெரும் பங்கு வீட்டு வேலைகளைச் செய்தால் அதன் பொருட்டு அன்பாக நடத்தப்படலாம். சித்தி இதுவரையில் மிக்க அதிருஷ்டசாலியாக இருந்து விட்டாள். அநேகம் இளம் விதவைகள் வெறும் வீட்டு வேலை செய்யும் அடிமைகளாகக் காலை முதல் இரவுவரை உழைத்து, ஏறக்குறைய எப்போதுமே பட்டினி கிடந்து, யாரிடமிருந்தும் ஓர் அன்பான சொல் கூட இல்லாமல் வாடிக் கொண்டிருந்தனரே அவர்கள் பிரார்த்தித்துக் கொள்ளக் கூடியது மறு பிறவியிலேனும் நல்ல கதி வரவேண்டுமே என்பதுதான்.

சுப்பிரமணிய ஐயரும், விசாலாட்சியும், சித்தியும் அவர்கள் எதிர்பார்த்ததைவிட மிக வெற்றிகரமாகவே அச்சிறுமியின் செவிகளில் இவ்விதமான பேச்சுக்கள் விழாமல் காத்துவிட்டனர். அம்மூவரும் எப்படியாவது சுப்புலக்ஷ்மியை அம்மாதிரி விதியினின்று காப்பாற்றி விடுவது என்று தீர்மானித்துக் கொண்டனர். துக்கம் விசாரிக்க வரும் மனிதர்களுடைய குடையும் கண்களினின்றும், போலி அநுதாபத்திலிருந்தும் அவளைக் காப்பாற்றினார்கள். தங்கள் வீட்டைத் தேடி யாரேனும், நண்பர்கள், தெரிந்தவர்கள் வருவதைக் கண்டால் அவளே ஓடிச் சென்று வீட்டின் பின்புறம் உள்ள அறைகளில் ஒளிந்து விடுவாள்.

சில சமயம் அவளால் ஓடி ஒளிய முடியாமல் போவதுண்டு. ஒருநாள் தனக்கு மிகவும் பிடித்த ஓர் உறவினர் திடீரென்று தோன்றி அவள் உட்கார்ந்திருந்த அறைக்குள்ளேயே வந்துவிட்டார். இவராவது எப்போதும் போல் சந்தோஷமாக, சகஜமாக இருப்பார் என்று எண்ணிய சிறுமி மகிழ்ச்சியோடு எழுந்து அவரை எதிர்கொண்டாள். அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக அவர் அவளை இறுகத் தழுவிக் கொண்டு தாங்க மாட்டாது விசும்பி, விசும்பி அழலானார். அவர் கண்ணீர் தன் முகத்தில் விழுவது அவளுக்குத் தெரிந்தது. திடீரென்று அவர் தனக்கு எதிரியாகிவிட்டது போல் அவர் கையினின்று அவள் திமிறினாள். கடைசியில் தன்னை விடுவித்துக் கொண்டு அவள் அறையிலிருந்து வெளியே ஓடினாள். அந்தச் சில நிமிஷ நேரப் பயங்கரத்தின் விளைவாகத் தனிமையை அடைந்தவுடன் அவள் வேதனை மிக அழுது தீர்த்தாள்.


உலகெங்கும்
ஏற்கப்படுகின்றன!
ஓரியண்ட்
விசிறிகள்
ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிட்.
கல்கத்தா - 54

எப்படியோ காலம் கழிந்து மீண்டும் கோடை வந்தது. ஒவ்வொரு வருடமும் கல்லூரிகள் அடைத்ததும் சுப்பிரமணிய ஐயர் தம் மனைவியையும் குழந்தைகளையும் விடுமுறைக்கு எங்காவது அழைத்துச் செல்வார். இந்த வருடம் ஒரு நண்பர் திருச்சிராப்பள்ளிக்கு அருகே காவிரிக் கரையில் ஓர் அழகான கிராமத்திலிருந்த தம் வீட்டை அவருக்கு ஒழித்து விட்டார். இதைவிட ஆனந்தமானது வேறு ஒன்றும் இருக்க முடியாது போலிருந்தது. அங்கு பாலமும், சாவித்திரியும் எப்போதும்போல் கூடி விளையாடினார்கள். கொஞ்ச நாட்களுக்குச் சுப்பலக்ஷ்மி மீன்களைப் பார்த்துக்கொண்டு ஆற்றங் கரையிலேயே காலம் கழித்தாள்.

தண்ணீர் சுத்தமாகத் தெளிந்து இருந்தபடியால் அவள் அமர்ந்திருந்த இடத்திலிருந்து ஆற்றின் மணற்படுகை தெள்ளெனத் தெரிந்தது. அங்கு இருந்த எத்தனையோவித வண்ண மீன்களின் கவர்ச்சி அவள் மனத்தில் வேறு எண்ணத்துக்கே இடம் கொடுக்கவில்லை. சில பெரிய மீன்கள் தனியாக நீந்திச் செல்லும்போது அவைகளின் சிறகுகள் நிழலில் கருத்தும், வெளிச்சத்தில் ஸ்படிகம் போலவும் மாறி மாறித் தோற்றமளித்தன. சில குட்டிக் குட்டி மீன்கள் இருந்தன. கூட்டம் கூட்டமாய்ச் செல்லும்போது நீரில் கோலமிடுவது போல் தோன்றியது. சுப்புலக்ஷ்மி அவைகளை உன்னி உன்னிப் பார்த்தவாறிருந்தாள். அவை என்ன உண்கின்றன, எவ்வாறு மூச்சு விடுகின்றன, உறங்கும்போது கண்களை மூடிக் கொள்கின்றனவா என்றெல்லாம் அறிய விரும்பினாள். தனக்குத் தெரிந்தவர்களில் தண்ணீரில் இருக்கும் ஜந்துக்களின் பெயர்களையெல்லாம் சொல்லக் கூடிய யாரேனும் இருக்கிறார்களா என்று யோசித்துக் கொண்டிருந்தாள். அவள் தகப்பனார் ஒரு கல்யாணத்தை முன்னிட்டுச் சென்னைக்குச் சென்றிருந்தார். அவள் கேள்விகளுக்குப் பதில் சொல்லக் கூடியவர் வேறு யார்?

உள்ளூரில் வாழ்ந்தவர்களிடம் பேசாமல் இருப்பதே உசிதமாகப் பட்டது. அந்தக் கிராமத்தவர்கள் சைதாப்பேட்டையில் உள்ளவர்களை விட வம்பர்களாக இருந்தனர். அந்தச் சிறுமி ஆற்றங்கரையிலிருந்து வீடு திரும்பும் போதெல்லாம் யாராவது ஓர் அந்நியர் குறுக்கே பாய்ந்து வந்து கேள்விகள் கேட்பார்.

''உண்மையாகவா உன் கணவனை இழந்து விட்டாய்?'' என்று அண்டை வீட்டு வேலைக்காரன் கேட்பான். ''ஐயோ பாவம்! உனக்கு இப்பொழுது கஷ்டமாக இருக்கிறதல்லவா?''



''சேலத்தில் இரும்புத் தாது கிடைத்தும், தொழிற்சாலைக்கான தோது இருந்தும், சஞ்சீவியார் லேது என்பதின் மர்மம் என்ன?''

இப்படியெல்லாம் மனிதர்கள் அவளிடம் பேசும்போது அவளுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. பண்புள்ள சிறுமியானதால் அவள் அவர்களுக்குச் சுருங்கப் பதில் அளித்துவிட்டு வேகமாக வீட்டினுள்ளே ஓடி விடுவாள். தன் மகளின் கலவரத்தைக் கண்ட விசாலாட்சி இருவரும் ஒன்றாக வெளியில் கிளம்பி, தோட்டத்தை ஒருமுறை சுற்றி வரவோ, அல்லது இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ள கோவிலுக்குப் போய் வரவோ செய்யலாம் என்று யோசனை கூறுவாள்.

ஒரு நாள் அக் கோவிலிலிருந்து திரும்பி வரும்போது ஓர் எதிர்பாராத புயலில் அவர்கள் மாட்டிக் கொண்டு விட்டனர். வீட்டிலிருந்து கிளம்பிய போது வானம் நிர்மலமாக இருந்தது. திரும்பி வர ஆரம்பித்தபோதும் ஒரு மேகங்கூட இல்லை. ஆனால் கொஞ்ச தூரம் நடப்பதற்குள்ளாகவே மேற்கு வானம் இருண்டது. கருமுகில்கள் காட்டுக் குதிரைகள் போல இவர்களை நோக்கிப் பாய்ந்து வரலாயின. விசாலாக்ஷியும் மகளும் வேகமாக நடந்தார்கள். ஆயினும் மழை பெய்ய ஆரம்பிக்கும்போது அவர்கள் வீட்டை அடைய இன்னும் ஒரு மைலுக்கு மேல் இருந்தது. காற்று மழையை முகத்தில் வீசியது. முதலில் மெதுவாகவும், பிறகு குரூரமாகவும் நெல்லிக்கனி அளவினதான பெரிய மழைத்துளிகள் முகத்தில் அறைவதுபோல் விழுந்தன.

காற்று சிறிதே மாறியது. அவர்கள் செல்லும் மார்க்கத்தில் ஒரு பர்லாங் தூரத்தில் ஒரு சிறிய வீடு தெரிந்தது. விசாலாட்சி தன் பெண்ணின் கையைப் பற்றினள். ''வா, நாம் ஓடிப்போய் மழையும் காற்றும் ஓயும்வரை அந்தத் திண்ணையில் தங்குவோம்'' என்றாள்.

இதுவரை எப்போதும் தன் போக்கிலேயே எதுவும் செய்திராத சுப்புலக்ஷ்மி ''வேண்டாம் அம்மா, வேண்டாம்'' என்று தன் கையை இழுத்து விடுவித்துக் கொண்டாள்.

இப்பொழுது மழைத் திவலைகள் நேராக விழ ஆரம்பித்தன. சுப்புலக்ஷ்மியின் உடலிலும், புடவையிலும் வாரி அடிக்கப்பட்டவை போல் நீர்த் துளிகள் விழுந்தன. அந்தக் குளிரும் புதுமையும் இன்பக் கிளர்ச்சி ஊட்டுவனவாக இருந்தன. ஓட வேண்டும், ஆட வேண்டும், பாட வேண்டும் என்றெல்லாம் அவளுக்கு ஆவல் மிகுந்தது: தானே மழை தேவதையாகிவிட்டது போல!

''வா'' என்று வற்புறுத்தினள் தாயார். அந்த வீட்டை நெருங்கினர். காற்றும் மழையும் வந்த வேகத்தில் பயங்கரமாக இருந்தாலும் இனி வெகு நேரம் நீடிக்காது என்று தெரிந்தது.

''வேண்டாம், வேண்டாம். நேரே போவோம்'' என்றாள் சுப்புலக்ஷ்மி. தெப்பமாக நனைந்து விட்டிருந்த அவள் ஏதோ அபரிமிதமான ஆனந்தத்துடன் காணப்பட்டாள். தன் வாழ்நாளிலேயே இவ்வளவு புளகாங்கிதமளிக்கும் சம்பவம் ஏதும் நடந்ததில்லை என்று அவளுக்குத் தோன்றியது. தனக்கு அதீதமான, நம்ப முடியாத ஒரு சந்தோஷம் இவ்விதம் தோன்றியிருப்பதைத் தன் தாயாருக்குக் காட்டக் கூடாது என்றும் அவள் மனத்தில் ஏதோ ஒன்று சொல்லியது போலிருந்தது.

''நாம் கட்டாயம் ஒதுங்கித்தான் ஆக வேண்டும். இப்பொழுதே சொட்டச் சொட்ட நனைந்தாகி விட்டது. அப்படியே நாம் போனால் பொல்லாத ஜலதோஷம் பிடித்து விடும்'' என்று தாயார் வற்புறுத்தினள்.

''இல்லை, அம்மா. சளி பிடிக்காது.'' இந்த மழை அவளுக்குச் சங்கீதம் போல் இருந்தது. அந்தச் சங்கீதப் பின்னணியினூடே சுப்புலக்ஷ்மியின் குரலும் ஒலித்தது: ''இப்பொழுது நாம் இங்கே ஒதுங்கிக் கொண்டாலும் எப்படியும் வீடுவரையில் இந்த ஈரத் துணியுடனும், ஈரத் தலையுடனும்தான் நடந்தாக வேண்டும். இப்படியே வேகமாக நடந்து போனோமானால் சீக்கிரம் வீட்டுக்குப் போய் வெந்நீரில் குளித்து விட்டு உலர்ந்த துணிமணிகளை அணிந்து கொண்டு விடலாம். ஜலதோஷம் வராது'' என்று அவள் தாய்க்குச் சரியான மறுமொழி தந்தாள்.

தாயை இணங்க வைத்தாயிற்று: அநேக முறைகளில் தன் மூத்த பெண்ணின் சாமர்த்தியம் விசாலாட்சியை வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. இப்போதும் அவள் மகளின் நியாயமான பேச்சுக்குக் கட்டுப்பட்டாள்.

இத்தனை சாதுர்யம் இருந்தாலும் சுப்புலக்ஷ்மி எல்லாவற்றையுமே புரிந்து கொண்டுவிடவில்லை. மீண்டும் அவர்கள் குடும்பம் சைதாப்பேட்டைக்குப் போன பிறகு தன்னிடம் உயிராக இருக்கும் தன் தாயார் எதற்காகத் தனது கல்யாணப் புடவையைக் கிழித்துப் பாலத்துக்கும், சாவித்திரிக்கும் பாவாடை தைத்துவிட்டாள் என்பது சுப்புலக்ஷ்மிக்குப் புரியவேயில்லை!

ஸிஸ்டர் இப்பொழுது சொன்னர்: ''அதை மீண்டும் உடுத்த வேண்டுமென்று எனக்கு எவ்வளவு ஆசையாக இருந்தது தெரியுமா? அந்தத் துக்க தினத்துக்குப் பிறகு அதை உடுத்துக் கொள்ளட்டுமா என்று என் அம்மாவை நான் கேட்பதுண்டு. அம்மா அதற்குச் செவி சாய்ப்பதேயில்லை. எனக்கு இப்பொழுதுதான் புரிகிறது. எனக்கு நேர்ந்ததை நினைவுபடுத்த ஒரு கவடும் இருக்கக் கூடாது என்றுதான் என் தாயார் அதைக் கிழித்து விட்டாள். என் தங்கைகள் அந்தப் பாவாடையை உடுத்தும்போது எனக்கு ஆத்திரமாக இருக்கும். எப்படித்தான் என் அம்மா எனக்கே சொந்தமான அந்தப் பட்டாடையை இப்படியெல்லாம் செய்யத் துணிந்தாளோ என்று வியப்பேன்.'' இப்படிக் கூறிவிட்டு என்னை நேருக்கு நேராகப் பார்த்து அருமையாகப் புன்னகை பூத்தார் ஸிஸ்டர். ''இதையெல்லாம் இதற்கு முன் நான் யாரிடமும் கூறினதேயில்லை. ஆனால் நீங்கள் சின்னச் சின்ன அம்சங்களைக்கூட அறிவதில் ஆவலாயிருக்கிறீர்கள் என்பதனால் அப்பொழுது எனக்கு எப்படி இருந்தது என்பதைப் பற்றி உங்களிடம் ஏன் சொல்லக் கூடாது என்று நேற்றிரவு யோசித்துக் கொண்டிருந்தேன். அந்தப் புடவையை மீண்டும் ஒரு முறை கட்டிக் கொள்ள வேண்டுமென்று நான் மிகவும் ஆவலோடு இருந்தேன். ஆனால் என் ஆசையை என் தாயாரிடம் வெளிப்படுத்த வேண்டும் என்று கனவிலும் நான் நினைத்திருக்க மாட்டேன். இருந்தாலும் இந்த ஏமாற்றத்தின் கைப்பு வெகு நாட்கள் என் மனத்தில் இருந்து கொண்டேயிருந்தது: வெகு நாட்கள்!''

(தொடரும்)

சாதல் இல்லையேல் காதல்



'சோ'

[கல்லூரியில் நிகழ்ந்த கவிதைப் போட்டி நாக ராஜனையும் மாலதியையும் காதலர்களாக்கியது தெரியும். அவர்கள் தமிழ்ப் படம் ஒன்றுக்கு வரு கின்றனர். அங்கே தங்கள் காதலைப் படத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கத் தோன்றியது அவ்விருவருக்கும். அவர்கள் வாழ்க்கை எப்படி அமையுமோ, பார்க்கலாம்!]

(திரையில் கதாநாயகன் கனவு காணும் காட்சி. நாயகனும் நாயகியும் ஷாஜஹான் மும்தாஜ் வேடத்தில் மகாபலிபுரத்தில் சிற்பங்களுக்கு இடையே ஆடிப் பாடி மகிழ்கின்றனர்.)

மாலு: இது என்ன வழக்கமோ? இந்த ஹீரோக்களே இப்படித்தான். தான் காதலிக் கிறவளை, மும்தாஜ், அனார்கலி, ஜூலியட்னு ஏதாவது வேஷத்திலே கனவிலே நினைச்சுப் பார்த்தாத்தான் திருப்தி. ஏன், கனவிலேயே சுயரூபத்திலே அவளைப் பார்க்கக் கூடாதா?

நாக: பாவம்! நேரே பார்க்கிறது சகிக் கலேன்னுதானே, ஏதோ வேஷம் போட்டுப் பார்க்கிறான். அதுகூடத் தப்பா?

மாலு: நீங்க இந்த மாதிரி பேசறச்சே, என்னைப் பத்தித்தான் பேசறீங்களோன்னு எனக்குச் சந்தேகமாப் போயிடறது....

நாக: சே! சே! படத்தைப் பாரு....

மாலு: இதை என்ன பார்வை வேண்டி யிருக்கு...... சுத்தப் பேத்தல். மும்தாஜும், ஷாஜஹானும், மகாபலிபுரத்துக்கு எங்கே வந்தாங்க......?

நாக: வேறே எங்கே போவாங்க? சினிமாக் காதலர்களுக்கு இருக்கிறதே நாலேந்து இடம்தான். தாஜ்மஹால், மஹாபலிபுரம், சாத்தனூர் அணை, ஊட்டி—அவர்கள் பட்டி யல் முடிஞ்சு போச்சு!

மாலு: ஏன்? மெரீனா பீச்சும் மஹாத்மா காந்தி சிலையும் இருக்கே...

நாக: மெரீனா பீச்சிலே மகாத்மா காந்தி சிலை இருக்கா...... ஓ! அய்யய்யோ.......... மகாத்மா காந்தி சிலையா அது! நான் ஏதோ நம்ம தேசத்திலே இருக்கிற அரிசிப் பஞ்சத் தைச் சித்திரிக்கிற சிலைன்னு நினைச்சேன்!

மாலு: சும்மா கலாட்டா பண்ணாதீங்க... அது மகாத்மா காந்தி சிலைன்னு தெரியலே, தெரியாதா உங்களுக்கு?

நாக: நிஜமாத்தான் கேக்கறேன் — அது கொஞ்சமாவது காந்திஜி மாதிரி இருக்கா?

மாலு: பின்னே எப்படி இருக்காம்?

நாக: பரிதாபமா இருக்கு!

மாலு: ரொம்ப நன்னாயிருக்கு. உங்களுக்கு என்ன தெரியும்? இதெல்லாம் மாடர்ன் ஆர்ட்... !

நாக: ஆமா ஒன்னு ஒத்துக்கறேன். அந்தக் காந்திஜி சிலையைக் கடற்கரை ஓரத் திலே வெச்சது பிரமாதமான ஐடியா!

மாலு: என்ன ஐடியா?

நாக: இன்னிக்கு அவர் உயிரோட இருந்தா 'ஐயோ நாம் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த பாரத நாடு இப்படி ஆயிடுத் தே'ன்னு நெனைச்சு அவர் பெருக்குகிற கண்ணீர் கடல் அளவுக்குத்தான் இருக்கும்!

மாலு: பேசாமப் படத்தைப் பாருங்க.

ஷாஜ: மும்தாஜ்! அம்பிகாபதி, அமராவதி காதல் போல், நம் காதல் புனிதத்த மானது.

மாலு: கடவுளே! அம்பிகாபதி, அமராவதி யைப் பத்தி ஷாஜஹானுக்கு என்ன தெரியும்?

நாக: ஏன் தெரியாது? ஷாஜஹானே தான் அம்பிகாபதி......

மாலு: ஷாஜஹான் அம்பிகாபதியா?

நாக: இதிலே ஷாஜஹானா நடிக்கிறவன் தான் அம்பிகாபதி படத்திலே அம்பிகாபதியா வந்தான்...... அது அவனுக்கு ஞாபகம் இருக்கு.

மாலு: சரி..... சரி.... படம் முடியப் போறது.........

நாக: அதுதான் அரை மணி நேரமாவே முடிஞ்சுக்கிண்டே யிருக்கே. இன்னும் பத்து நிமிஷமாவது முடியறதுக்குப் பிரயத்தனப் படும்...!

மாலு: கதையைப் பார்த்தா எப்போ முடியப் போறதுன்னு எப்படித் தெரியும்? மணியைப் பார்த்துத்தான் சொல்றேன்.....

நாக: ஓ!

மாலு: நாகராஜன்..... நாளைக்குக் கண் டிப்பா எங்க வீட்டுக்கு வாங்க.... சித்தப்பா கிட்டே சொல்லி எப்படியாவது அவர் சம்ம தத்தை வாங்கிடணும்....

நாக: எனக்கு மட்டும் அந்தக் கவலை இல்லையா மாலதி?

மாலு: அதுக்குச் சொல்லலே.... இந்தப் படம் பார்த்ததுலேயிருந்து எனக்குப் பயமா இருக்கு.......

நாக: ஏன்?

மாலு: பெரியவங்களுக்குத் தெரியாமெ, கல்யாணம் பண்ணிக்கிட்டு இந்த ஹீரோவும்,

ஹீரோயின்னும் எவ்வளவு தூரம் கஷ்டப் பட்டாங்க, பாவம்.

நாக: என்ன கஷ்டமோ! அந்தக் கஷ் டத்திலேயும் 'டூயட்' பாடறதை விடலே.

மால: எனக்கென்னவோ பயமா இருக்கு நாகராஜன்...... சித்தப்பாகிட்டே ஒரு நாள் நான் ஜாடையாக் கேட்டேன். அவர் கலிஞர் களைப் பத்திக் கண்டபடி திட்டறார்.

நாக: அதனுலே என்ன?

மால: இப்படிக் கேட்டா என்ன செய்ய றது ? நீங்க கவிஞர் இல்லையா ?

நாக: ஓ! ஆமாமாம்! நல்ல வேளையா ஞாபகப்படுத்தினியே! நீ ஒண்ணும் பயப் படாதே.....

மால: என்னமோ போங்க! படமே முடிஞ்சாச்சு.......

நாக: சீக்கிரம், சீக்கிரம். புறப்படு.... அப்புறம் தேசியக் கொடியைப் போட்டு, 'ஜனகண மன' ஆரம்பிச்சுடும்..... சீக்கிரம்.. சீக்கிரம்........

(இதற்குள் படம் ஒரு வழியாக முடிவடைந்து ஜனகணமன தேசிய கீதம் ஆரம்பிக்கிறது. இத்தனை நேரம், அமைதியாக இருந்த கூட்டம், கசமுசவெனப் பேசிக் கொண்டும் விஸிலடித்துக் கொண்டும் கலைய ஆரம்பிக் கிறது. தேசிய கீதத்தின் கடைசி அடிகளைக் கேட்பதற்கும், தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறப்பதைப் பார்ப்பதற்கும், கொட்டகை யில் நாற்காலிகள் மட்டுமே இருக்கின்றன.



மரத்தால் செய்யப்பட்ட அந்த நாற்காலிகள் மரியாதையுடன் அசைவற்று இருக்க, மனிதர் கூட்டம் மந்தை மந்தையாகக் கொட்டகையை விட்டு வெளியேறுகிறது.)

(காட்சி முடிவு)

காட்சி 8

கனகசபை வீடு

(கனகசபையின் கையில் ஒரு கடிதம் இருக்கிறது. அதை மிகக் கோபமாகக் கசக்கி எறிகிறார்...... இரண்டு மூன்று அங்குமிங்கும் அறைக்குள்ளே உலாவுகிறார். மீண்டும் கடிதத்தைக் கையில் எடுத்துப் படிக்கிறார்.)

"அன்புள்ள சித்தப்பா! உங்களிடம் எப்படிச் சொல்வதென்றே தெரியவில்லை. நேரில் சொல்ல வெட்கமாக இருப்பதால் தான் கடிதத்தில் எழுதுகிறேன்.

இத்தனை நாட்கள் என்னை வளர்த்த சிரமம் போதாதென்று, எனக்கு மாப்பிள்ளை தேடும் சிரமமும் தங்களுக்கு வேண்டாமென்று தீர்மானித்து, நான் உங்களுக்கு உதவ முடிவு செய்து விட்டேன். மாப்பிள்ளை தேடியாகி விட்டது. கல்யாணம் நடத்த வேண்டியது உங்கள் பொறுப்பு...

என்னை ஏமாற்றி விடாதீர்கள். உங்களையே நம்பியிருக்கிறேன்.

இப்படிக்கு,
மாலதி

பின்குறிப்பு: அவர் பெயர் மிஸ்டர் நாகராஜன். இன்று இங்கே வருவார்.

க: உம்! ரொம்ப நல்லாயிருக்கு..... உம்! மாலதி...... மாலதி.......!

மால (மாடிப் படியில் நின்று கொண்டு): கூப்பிட்டீங்களா சித்தப்பா?

கன: கீழே இறங்கி வா.....

மால (கொஞ்சலாக): எனக்கு வெட்கமாயிருக்கு, சித்தப்பா.... (இறங்கி வருகிறாள்)

கன: இன்விடேஷன் எங்கே?

மால: என்ன இன்விடேஷன்?

கன: உன் கல்யாண இன்விடேஷன்தான். இவ்வளவு செஞ்சவ, அதையும் அச்சடிச் சுடறதுதானே ?

மால: உங்களுக்குக் கோபமா சித்தப்பா?

கன: ஏன் — பார்த்தா தெரியலையா? கோவம்தான். உன்னைச் சொல்லிக் குற்றமில்லே. உனக்கு அநாவசியமா செல்லம் கொடுத்து நான்தான் கெடுத்துப்பிட்டேன். இப்ப எனக்குக் கோபம் வந்தாக்கூட நான் சொல்லித்தான் அதைத் தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு.

மால: போங்க சித்தப்பா, உங்களுக்கு ஒண்ணும் கோவம் இல்லே.....

கன (கோபமாக): கோவம்தான்.

மால (சிரிக்கிறாள்): கோபம் வந்தா யாராவது 'கோவம்' கோவம்னு சொல்லிப் பாங்களாக்கும்.

கன: இதென்ன வம்பாப் போச்சே எளவு ? நானே சொல்லாட்டியும் கோவம்னு தெரியலே — சொன்னாலும், யாராவது சொல்லிப்பாங்களான்னு கேக்கறே....எளவு! மாலதி..... கோவம் வந்தா என்ன செய்வாங்க. சொல்லு, அதைச் செய்யறேன்.

(மாலதி மீண்டும் சிரிக்கிறாள்.)

கன: மாலதி! சும்மா சிரிக்காதே..... எனக்கு உண்மையிலேயே ரொம்பக் கோபம்... இதெல்லாம் என்ன நீயா முடிவு செய்யற விஷயமா ?

மால: அவர் ரொம்ப நல்லவர் சித்தப்பா!

கன: நீ தீர்மானமே பண்ணிப்பிட்டியா ? இவ்வளவுதானா நீ எனக்கு வெச்சிருக்கிற மதிப்பு ?

மால: நீங்க சொல்றதை நான் எப்பவாவது கேக்காம இருந்திருக்கேனா?

கன: நீ கேக்காம இருக்கிறமாதிரி நான் ஒண்ணும் சொன்னதில்லே.

மால: சித்தப்பா....! அவரை நான் கல்யாணம் செய்துக்கலேன்னா — அவ்வளவுதான்.

கன: அப்புறம், அவனை வேறு யாருமே கட்டிக்க மாட்டாங்களா? உன்னை மாதிரி யாரு ஏமாறுவாங்க? இதோ பாரும்மா, மாலதி.......கல்யாணம்கிறது பசங்களாத் தீர்மானிக்கக்கிற விஷயமில்லே. பெரியவங்க பார்த்து முடிவு பண்ண வேண்டிய விஷயம்.

மால: சித்தப்பா, கல்யாணம் செய்துக்கப் போறது பொண்ணும், புருஷனும்தானே..... இதுலே பெரியவங்க......

கன: தலையிடறதுக்கு என்ன உரிமைன்னு கேக்கிறியா? பிள்ளையினுடைய தகப்பனுக்கு அந்த உரிமை இருக்குதோ இல்லையோ..... பொண்ணைப் பெத்தவன் கடமை, பொண்ணுக்கு மாப்பிள்ளை தேடறது...... தன் பொண்ணு தன் இஷ்டப்படி மாப்பிள்ளையைத் தேடிக்கட்டும்னு விடறவன், பெண்ணுக்குப் பெரிய பாவத்தைத் தேடித் தரான்.

மால: எப்படிச் சித்தப்பா ?

கன: இதோ பாரம்மா..... ஒரு பையன் தலையிலே ஒரு பெண்ணைக் கட்டறது மகா பாவம். ஒரு பெண்ணே அதைச் செய்துக்கிட்டா அந்தப் பாவம் அவளைத்தானே புடிச்சிக்கும்? அதனாலேதான் பெத்தவங்க அந்தக் காரியத்தைச் செஞ்சு, தங்க தலைமேலே பாவத்தைச் சுமந்துக்கிட்டுப் பெண்ணைக் காப்பாத்தறாங்க....

மால: நீங்க அந்தப் பாவத்தைச் சுமக்க வேணும். நானே அந்தப் பாவத்தை ஏத்துக்கறேன் சித்தப்பா...

கன (மீண்டும் கோபமாக): என்ன சொன்னாலும் கேக்க மாட்டேங்கிறியே ?— குலம், கிலம் விசாரிக்காம கல்யாணத்தைத் தீர்மானம் பண்ணிக்கிறதா.... யாரு அந்தத் தரித்திரம் பிடிச்ச பய?

நாக (வந்து கொண்டு): ஸார்....

கன (திரும்பி): யாருப்பா நீ?

மால: இவர்தான் சித்தப்பா அவர்...

கன: ஓ! வாய்யா.....!

நாக: குட்மார்னிங் ஸார்..... என் பேர் நாகராஜன்....

கன: எங்கே வந்தே ?

மால: சித்தப்பா...

கன: நீ பேசாம இரு. (நாகராஜனிடம்) எங்கேய்யா வந்தே ?

நாக: உங்க வீட்டுக்குத்தான் வந்தேன்.

கன: ஜோக் அடிக்கிறியா?.... இந்தத் தமாஷெல்லாம் எனக்குப் பிடிக்காது.... நான் ரொம்பக் கோபக்காரன்...

நாக: இப்ப கோபமா இருக்கீங்களா?



கன: எனவு! உனக்கும் அது தெரியலேயா?
மால: நாகராஜன்..... காப்பி சாப்பிட றீங்களா?.....
நாக: ஓ!... எஸ்...!
கன: இரும்மா..... விஷயத்தை உன் எதிரவே விளக்கமாக் கேட்டுப்புடறேன். இந்தாய்யா... இந்த லெட்டரைப் படி....
(தனக்கு மாலதி எழுதிய லெட்டரை அவனிடம் தூக்கி எறிகிறார்... அவன் படிக்கிறான்.....)
நாக (படித்து முடித்து): மாலதி....!
கன: அங்கே என்னய்யா பார்வை? என்னைப் பாருய்யா! உங்கப்பன் பேரு என்ன?
நாக: தணிகாசலம்.
கன: இப்ப என்ன செய்துக்கிட்டிருக்கார்?
நாக: இப்பவா?... சரியாத் தெரியலே...
கன: தெரியலேயா?
நாக: அவர் இறந்து போய் ரொம்ப வருஷம் ஆயிடுத்து ஸார்.
கன: கொடுத்து வைச்சவன்... பூட்டான். உம்.... பின்னே... உன் படிப்பு, செலவு இதுக்கெல்லாம் எப்படிய்யா மேனேஜ் பண்றே..... சொத்து இருக்குதா?
நாக: ஓ! எஸ்..... இல்லாட்டா முடியுமா ஸார்?
கன: எவ்வளவு இருக்கும் சொத்து?
நாக: நிலபுலனு, ரொக்கமா?
கன: எல்லாந்தான்..... சொல்லு.....
நாக: என்ன ஸார் சொல்றது.... லட்சக் கணக்கா இருக்குது..... இதெல்லாம் கணக்குப் பார்த்துக்கிட்டிருந்தா முடியுமா?
கன (திக்பிரமை பிடித்தவர் போல்): நிஜமாவா சொல்றே......
நாக: சத்யமா சார்..... லட்சக்கணக்கிலே சொத்து இருக்குது.....
கன: அவ்வளவும் உன்னுதா.....
நாக: அய்யய்யோ! எங்க மாமாவுது ஸார்!.....
கன: யாருது? மாமாவுதா?
நாக: எங்க அம்மாவினுடைய....
கன: தம்பிதா?
நாக: இல்லே சார். எங்க அம்மாவினுடைய தம்பியினுடைய, மனைவி—
கன: அவங்களுதா?
நாக: இல்லே சார்.... எங்கம்மா தம்பி மனைவிக்கு ஒரு மாமா...
கன: அவர்தா?
நாக: இருங்க சார். எங்கம்மா தம்பி, மனைவி மாமாவுக்கு ஒரு சித்தப்பா.....
கன: அவருக்கு ஒரு மச்சானு?
நாக: கரெக்ட் ஸார்.....! அவருதுதான் சொத்து.... அவர்தான் என்னைப் படிக்க வெச்சிக்கிட்டு வரார்....
கன: ஏன்? நீதான் அவருக்கு ரொம்ப நெருங்கின உறவா?
நாக: இல்லே, ஸார்.....! அவருக்கு என் மேலே ரொம்பப் பிரியம்...... அதனாலே தான் இப்படி.. அவர் முதன் முதல்லே என்னைப் பார்க்கச்சியே அவருக்கு என் மேலே ஒரு பரிதாபம்..... ஓர் அன்பு..... ஏன்னு பாருங்க, அவர் முதல்லே என்னை எங்கே தெரியுமா பார்த்தாரு...... எங்கப்பா கல்யாணத்திலே.
கன: என்னது...... உங்கப்பன் கல்யாணத்துலே உன்னைப் பார்த்தாரா?



"இன்னிக்கு வேற எங்கேயோ போறதாச் சொன்னீங்க. இமர்னு இங்கே வந்து நிக்கறீங்களே?"
"போறதாத்தான் இருந்தேன். ஆனா காத்து இமர்னு உங்க வீட்டுப் பக்கமா அடிக்க ஆரம்பிச்சிடுத்து. அதனால்தான்!"

நாக: ஆமாம், ஸார்.... எங்கம்மா, தம்பி, மனைவி, மாமா, சித்தப்பா மச்சான் என்னை அங்கேதான் பார்த்தாரு..... மறந்துட்டேனே..... எங்கம்மான்னு சொன்னேன் பாருங்க.... அது வந்து எங்க சித்தி. எங்கப்பா ரெண்டாங் கல்யாணம் பண்ணிக்கிட்டாரு. அப்போதான் எங்க அம்மா, அதாவது சித்தி, தம்பி மனைவி மாமா....
கன: போறும், போறும்!.... உன்னை நம்பி எப்படிய்யா நான் பொண்ணைக் கொடுக்கிறது?
நாக: ஏன் ஸார், இவ்வளவு சொத்து இருக்கே ஸார்?
கன: யாருக்கு?
நாக: மாமாவுக்கு?
கன: மண்ணாங்கட்டி..... மாமா! அந்தப் பணத்துலே ஒரு பைசா உனக்கு வருமா?
நாக: ஏன் அப்படிக் கேட்டுட்டீங்க. நான் பணம் வேணும்னு அவருக்கு எழுத வேண்டியதுகூட இல்லே..... அவரா அனுப்புவார் தெரியுமா?
கன: அது சரிதான்யா! அவர் கண்ணை மூடினா சொத்துலே உனக்கு ஏதுய்யா பங்கு?
நாக: அவருக்குப் பசங்களே கிடையாது. எல்லாத்தையும் என் பேர்லேதான் உயில் எழுதி வைக்கப் போறார். எங்கிட்டேயே சொல்லியிருக்கிறாரே.
கன: உண்மையாவா.....?
நாக: ஸார்...... உங்களுக்கு அவரைப் பத்தித் தெரியாது. எனக்காக என்னவேண்ணாலும் செய்வார்...... நீங்களே அவரை வந்து பாருங்க.... இல்லே, அவரே இங்கே வரணுமின்னாலும் வரச் சொல்றேன்.....
மால: என்ன சித்தப்பா சொல்றீங்க?
நாக: இவர் உனக்குச் சொந்த சித்தப்பாவா?

கன: இல்லே..... இவனுடைய அம்மா— அதாவது சித்தி, தம்பி மனைவி மாமா, மச்சான் சித்தப்பன் ! எல்லாரும் என்னய்யா உன்னே மாதிரிதான் உறவு சொல்லிப்பாங்களா?..... இவனைப் பெத்தவனுக்குத் தம்பி தான்.......

மால: சித்தப்பா..... நீங்க போய் இவர் மாமாவைப் பார்க்கிறீங்களா?

கன: அவரு பேரு என்னய்யா?

நாக: சங்கரலிங்கம்...... நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம்..... சங்கரபுரம் ஜமீன்....

கன: அந்தச் சங்கரலிங்கமா?

நாக: ஆமாம், ஸார்.....

கன (அயர்ந்து போய் நிற்கிறார்):

நாக: உங்களே வந்து பார்க்கச் சொல்லட்டுமா ?

கன: அய்யய்யோ! வேண்டாய்யா. நான் வந்து அவரைப் பார்க்கிறேன். அதான் மரியாதை.

நாக: ஸார்.... இன்னிக்கு நான் அங்கே தான் ஸார் போறேன். அவருக்கு உடம்பு சரியில்லையாம்....நானும் பார்த்து நாளாச்சு.

கன: போய்ட்டு வாய்யா.... நானும் விசாரிச்சேன்னு சொல்லு.....

மால: உங்களுக்கு அவரைத் தெரியுமா சித்தப்பா ?

கன: தெரியாட்டி என்னம்மா? தெரிஞ்சுக் கறது....... நம்ம மாப்பிள்ளே இன்ட்ரொட்யூஸ் பண்ணுரு! என்ன மாப்பிள்ளே?

நாக: ஸார்!.... ரொம்ப தாங்க்ஸ் ஸார்.. என்னே மாப்பிளேன்னு முடிவு பண்ணிட்டீங்களா ? ரொம்ப தாங்க்ஸ் ஸார்....

கன: பின்னே! நான் அப்பப்போ 'பட்' 'பட்'னு முடிவு பண்ணிப்பிடுவேன். நீ ஊருக்குப் போய் உங்க மாமாகிட்ட விஷயத்தை விளக்கிப்பிடு.....

மால: அவர் மாட்டேன்னு சொல்லிட்டா என்ன பண்றது சித்தப்பா.....

கன: அய்யோ! அவரு மாட்டேன்னு சொல்லிடுவாரா?

நாக: கண்டிப்பா சொல்ல மாட்டார். என் இஷ்டம்தான் அவர் இஷ்டம்!

கன: வெரி குட்! அப்ப நீங்க கிளம்பிப் போயிட்டு வாங்க..... நீங்க வந்தப்புறம், ஒரு நல்ல நாள் பார்த்து நான் போய்ப் பார்த்துட்டு வரேன்..... சரி..... நீங்க, மாலதிகிட்ட சொல்லிக்கிட்டுப் போவணும்னு இருப்பீங்க..... நீங்க பேசிக்கிட்டு இருங்க.... நான் இதோ வரேன். (உள்ளே போகிறார்)

மால: நீங்க இவ்வளவு பெரிய பணக்காரர்னு எங்கிட்டேகூடச் சொல்லவே இல்லேயே... ?

நாக: நீ அதைப் பத்தி எங்கிட்டே கேட்டால்தானே, நான் சொல்றதுக்கு?...மாலதி, நான் இன்னும் ரெண்டு நாள்ளே திரும்பி வந்துடறேன்.

மால: நேரே, இங்கேதான் வரணும்.

நாக: கண்டிப்பா.....

கன (திரும்பி வந்து): மறந்தே போயிட்டேன். நீங்க இங்கேயே சாப்பிட்டுட்டு நம்ம வீட்டுக் காரிலேயே ஸ்டேஷனுக்குப் போயிடலாம்..... என்ன?

நாக: எதுக்கு ஸார், அதெல்லாம்? நான் ஹோஸ்டல்லேயே சாப்பிட்டுக்கறேன். பரவாயில்லே!

கன: சே! சே!..... உடம்புக்கு ஒத்துக் காது. இன்னும் எத்தனே நாள் ஹோஸ்டல் சோறு? இன்னிக்கு இங்கேதான் சாப்பாடு.

நாக: சரி, உங்க இஷ்டம்....

கன: எனக்கு இன்னியிலேயிருந்து தலைக்கு மேலே வேலே கிடக்குது..... மேளக்காரர், பந்தக்காரர், சமையற்காரர்..... எல்லாருக்கும் சொல்லணும்..... உம் சும்மாவா சொன்னுங்க, கல்யாணம் பண்ணிப்பார்,— வீட்டைக் கட்டிப் பார்னு!

(உள்ளே போகிறார்)

மால: வீடு கட்டறதுக்கும், கல்யாணம் பண்ணிக்கிறதுக்கும் என்ன சம்பந்தம் நாகராஜன் ?

நாக: இத்தனே நாள் இருந்ததோ என்னமோ? இப்போ இரண்டுக்கும் ரொம்பச் சம்பந்தம் இருக்குது...

மால: என்ன?

நாக: வீடு கட்டினு டௌன் பிளானிங்லே மாட்டிக்கணும்; கல்யாணம் பண்ணிக்கிட்டா பாமிலி பிளானிங். வீடு கட்டினு ரெண்ட் கன்ட்ரோல். கல்யாணம் பண்ணிக்கிட்டா பர்த் கன்ட்ரோல் ! (தொடரும்)

45. மாண்டவர் மீண்டனர்!

போருக்கு ஆற்றாது இரணியன் கடலில் மறைந்த செய்தியை ஒற்றர்கள் சூரபன்மனிடம் சென்று தெரிவித்தனர். அதைக் கேட்ட சூரபன்மன் மனம் குன்றி நாணமடைந்தான். எவருடனும் பேசவே அந்த மாவீரனுக்கு வாய் எழவில்லை. அத்தருணம் அவன் மைந்தனாகிய அக்கினிமுகன் அவனிடம் வந்தான்.

அக்கினிமுகன் திக்குப் பாலர்களையும், சூரியன் தேரையும், திக்கஜங்களையும் வாட்டியவன். தாய் வயிற்றில் இருக்கும்போதே நெருப்பைக் கக்கிய



திருமுருக கிருபானந்த வாரியார்

வன். சந்திரனைச் சிறை செய்தவன். அரியும் அயனும் ஊரும் கருடனையும் அன்னத்தையும் பிடித்து வந்து விளையாடியவன்.

''அப்பா! தூதாக வந்த வீரவாகு அவ்வளவு வலிமையுள்ளவனா? இதோ அவனையும் அவனுடன் வந்துள்ள சேனைகளையும் வென்று வருகிறேன். விடை தாருங்கள்'' என்று சூரனை உத்தரவு கேட்டான் அக்கினிமுகன். சூரபன்மன் அவனுக்கு விடை தந்து அனுப்பினான்.

பாட்டியாகிய மாயை கொடுத்த வில்லையும் தெய்வாஸ்திரங்களையும் எடுத்துக் கொண்டு தேரில் ஏறிப் புறப்பட்டான் அக்கினிமுகன்.

யுத்த களத்தில் பூதசேனைகளும் அவுணர்களும் கடும் போர் செய்தார்கள்.

நவவீரர்களில் ஒருவராகிய வீரபுரந்தரர் ஊழித்தீயைப் போல் உருத்து, வில்லை வளைத்து அவுணர்களின் தேர்களை அழித்தார்; அவுண சேனாதிபதியான சோமகண்டனின் தலையை அறுத்தார்; அக்கினிமுகனுக்கு உயிர்த்

துணைவனாக நின்ற மேகனையும் கொன்றார். அக்கினிமுகன் தானே நேரில் அவரை எதிர்த்துக் கணை மழை பொழிந்தான். அவருடைய தேரையும் வில்லையும் உடைத்து நூறு பாணங்களால் மார்பைத் துளைத்தான். அவுணர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்.

வீர புரந்தரரின் வலிமை அழிந்ததைக் கண்ட அவரது துணைவர்களான நவ வீரருள் வீரவாகு தவிர ஏனைய எழுவரும் அக்கினிமுகனை வளைத்துப் பாண மழை பொழிந்தனர். அதனால் அசுரனின் வில்லும் தேரும் அழிந்தன. வீரர்கள் அவன் மார்பில்



ஆயிரம் கணைகளைச் செலுத்தினார்கள். அக்கினிமுகன் வேறொரு தேரில் பாய்ந்தான். நவவீரருள் எழுவரையும் சினத்துடன் நோக்கி, ''இத்துடன் அழியுங்கள்'' என்று சிவப் படைக்கலத்தை எடுத்து ஏவிவிட்டு விட்டான். அப் படைக்கலம் விரைந்து சென்றது. அதனை ஏழு வீரர்களும் கண்டு அக்கினிப் படை என்று எண்ணி, வருணப் படைக் கலங்களை விடுத்தார்கள். சிவப் படைக் கலம் அவற்றை விழுங்கி உலகம் அதிரச் சென்று எழுவருடைய உயிரை



''வக்கீல் சார்! வர வர என் பெண்டாட்டி தொண தொணப்புத் தாங்க முடியலே! இப்பவே விவாகரத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க!''

யும் நொடியில் கவர்ந்து மீண்டது. நவ வீரரில் எழுவர் இவ்வாறு இறந்தமை கண்ட பூதரும் அமரரும் வெருவி இருந்தனர். வீரவாகுதேவர், பூதவீரர்களுக்கு அபயம் தந்து, அக்கினிமுகனை எதிர்த்தார். இருவரும் பலப் பல கணைகளை விடுத்துக் கடுமையாக அமர் புரிந்தனர். முடிவில் வீரவாகுதேவர் நஞ்சு பாய்ச்சிய கூர்மையான நூறு பாணங்களை விடுத்தார். அவை அக்கினி முகனுடைய மார்பைத் துளைத்தன. அக்கினிமுகன் அலறித் தேர்மீது சாய்ந்தான். அவன் மார்பிலிருந்து உதிரம் வெள்ளம்போல் பெருகியது. அவனது உயிர் போவதும் வருவதுமாக இருந்தது. ஒருவாறு தெளிந்த அக்கினிமுகன், இளமையில் தான் வழிபட்ட காளியை நினைந்தான். 'பகைவர்களுடைய போரில் நான் தோற்றால் அந்தத் தருணத்தில் உதவி செய்ய வேண்டும்' என்று அக்கினிமுகன் அந்த நாளில் காளியிடம் வரம் கேட்டுப் பெற்றிருந்தான்.

அக்கினிமுகன் காளியை நினைந்ததும், அவள் சூலத்தையும் வாளையும் ஏந்திச் சிங்க வாகனத்தின் மீது வந்தாள். அக்கினிமுகனை அடைந்து, ''அஞ்ச வேண்டாம். உன் பகைவர்களாகிய பூதசேனைகளைக் கொல்வேன்' என்று அருளி, பூதர் அனைவரையும் அழிக்குமாறு முத்தலைச் சூலத்தை விடுத்தாள். அது தீயையும் புகையையும் சிந்திப் பல காளிகளையும் உண்டாக்கி விரைந்து சென்றது. வீரவாகுதேவர் காளியின் சூலத்தை நோக்கிப் பதினான்கு கணைகளைச் செலுத்தி, அதைப் பொடியாக்கினார். காளி மிகவும் சினந்தாள். மற்றொரு சூலத்தை விடுத்தாள். அது ஆலகாலம் போல் கொதித்துச் சென்றது. வீரவாகுதேவர் ஆயிரம் கணைகளால் அதனைத் துணித்தார். காளி உள்ளம் கனன்று சிங்க வாகனத்தினின்றும் இறங்கிக் கூரிய வாளை எடுத்து வீரவாகு தேவரை வெட்ட வந்தாள். வீரவாகுதேவர் அவளுடைய எட்டுக் கரங்களையும் இடக் கரத்தால் பிடித்து, வலக்கரத்தால் மார்பில் ஓர் அறை அறைந்தார். காளியின் மார்பு ஒழிந்தது; வாயும் மூக்கும் உதிரம் சொரிய மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள். ஆணவமும் வீரமும் அழிந்த அவள் நாணத்துடன் வீரவாகுதேவரின் ஆற்றலை வியந்தாள். கந்தப்பெருமானின் ஏவலால் வந்துள்ள வீரவாகுதேவரை எதிர்த்து யார்தான் வெற்றி காண முடியும்? வீரவாகுவிடம், ''வெற்றி உமக்கே'' என்று வாழ்த்திவிட்டுச் சிங்கத்தின் மீதேறித் தன் படைகள் சூழ்ந்து வரத் தனது இடத்துக்குச் சென்றாள் காளி.

அசுர காளி வீரவாகுதேவரை வாழ்த்தி அவரிடம் விடைபெற்றுச் செல்வதைக் கண்ட அக்கினிமுகாசுரன் மிகுந்த சினங்கொண்டு காளியை இகழ்ந்தான். ''வீரவாகுதேவரை நானே கொல்வேன்'' என்று சேனைகள் சூழத் தேரில் புறப்பட்டான். இருவரும் கோரமாகப் பொருதார்கள்.

இறுதியில் வீரவாகுவின் வீரபத்திராஸ்திரமானது அக்கினிமுகன் விடுத்த பிரமாஸ்திரத்தை விழுங்கி, அவனது தலைகளை வெட்டிக் கீழே தள்ளி உயிரையும் குடித்துவிட்டு வீரவாகுதேவரிடம் மீண்டது. அக்கினிமுகாசுரன் இறந்ததைக் கண்ட அமரர்கள் ஆனந்தக்கூத்தாடி ஆர்த்தார்கள்; வீரவாகு தேவரை வாழ்த்தினார்கள்.

அவுண வீரர்களை யெல்லாம் கொன்று போர்க்களத்தின் நடுவே நின்ற வீரவாகுதேவரை பூதர்களும், இலக்கம் வீரர்களும் வந்து சூழ்ந்தார்கள். மூர்ச்சித்துக் கிடந்த வீரபுரந்தரரும் அங்கு வந்து சேர்ந்தார். ஆனால் வீரவாகுதேவரின் தம்பியர்களான எழுவர் மட்டும் அங்கு காணப்படவில்லை. அவர்களைக் காணாது வருந்திய வீரவாகு, ''மற்ற எழுவரும் எங்குற்றனர்?'' என்று வினவினார்.

பூதவீரனான உக்கிரன், ''நூறு யோசனைக்கு அப்பால் ஆலமர நிழலில்

அவர்கள் மாண்டு கிடக்கிறார்கள்'' என்றார். இதனைக் கேட்ட வீரவாகு தேவர் திடுக்கிட்டார். மனத்தைத் தேற்றிக் கொண்டு அருகில் இருந்தோர் அனைவரும் உடன் வர ஆலமரத்தடிக்குச் சென்றார். அங்கே பிணக் குவியல்களின் மீது தம்பியர் எழுவரும் இறந்து கிடந்ததைக் கண்டார்; தம்பியர் எழுவரையும் எடுத்தணைத்துப் புலம்பினார். 'அவர் கண்கள் குருதிநீரைச் சொரிந்தன.

> தம்பிமீர் தம்பிமீரென் றுரைத்திடும்
> தழுவிக் கொள்ளும்
> எம்பிமீ ரென்னும்; ஐயோ!
> எங்ஙனஞ் சென்றீர் என்னும்;
> வெம்பினேனென்னும் என்னை
> விட்டகன்றீரோ வென்னும்
> நம்பினேன் உம்மை யென்னும்
> நானுமக்கயலோ வென்னும்

''நன்றாக இருக்கிறது உன் வீரம்! முருகவேளுக்கு இனி நான் என்ன சொல்வேன்?'' என்று பற்பலவாறு கூறிக் கண்ணீர் விட்டுக் கவலையில் ஆழ்ந்தார் வீரவாகு. சிறிது போதில் மீண்டும் அவரை வீரம் பற்றிக் கொண்டது.

வடவைத் தீயைப் போல் வெகுண்டு, ''என் தம்பியர் உயிரைக் கொண்டு சென்ற இயமனை இக்கணமே கொல்வேன். மார்க்கண்டேயர் உயிரைக் கவர வந்தபோது பட்ட உதையை மறலி மறந்தனன் போலும்? திருநீறும் கண்டிகையும் பூண்டு சிவநாமத்தை உச்சரிக்கும் உண்மையான சிவபக்தர்களிடம் செல்லக் கூடாது என்ற சிவாக்ஞையை அந்தக் கூற்றுவன் மறந்தான் போலும்! ஆறுமுகப் பெருமானின் அடியவர்களாகிய என் தம்பியரின் உயிர்களை இயமன் எப்படித்தான் கவர்ந்து சென்றானோ?'' என்று இயமனைச் சினந்தார்.

> ''நீறு முகத்தார் கண்டிகை
> பூண்டார் நிமலன்பேர்
> கூறு முகத்தார் தம்புடை
> செல்லக் குலைகூற்றன்
> ஆறு முகத்தான் அடியவர்
> ஆவி யலைத்தானே
> சேறு முகத்தாழ் கரியை
> அடாதோ சிறுபுள்ளும்?''



வீரவாகுதேவர் வில்லை யெடுத்து நாணை மீட்டினார். ஒரு பாணத்தை எடுத்து அதில் நகத்தினால், ''கூற்றுவனே! என்னுடைய தம்பியர் உயிரைக் கொண்டு வா'' என்று எழுதி விடுத்தார்.

பாணம் இயம லோகத்தில் போய் விழுந்தது. இயமன் எடுத்துப் பார்த்தான். வீரவாகுதேவர் விடுத்த பாணம் என்பதை அறிந்ததும், நடுநடுங்கினான்; ''தூதர்களே! நவவீரர்களில் யாரையாவது கொண்டு வந்திருக்கிறீர்களா?'' என்று தூதர்களிடம் வினவினான். இயமலோகம் முழுவதும் தேடினார்கள் தூதர்கள். அங்கு காணவில்லை. எழு வீரர்களும் கைலாய மலையில் சூக்கும சரீரத்துடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எழுவர் உயிரையும் இயமன் போர்க்களத்துக்குக் கொண்டு வந்து உடலில் சேர்ப்பித்தான்.

தூங்கி எழுந்தாற்போல் வீரர் எழுவரும் உயிர்த்தெழுந்தார்கள். வீரவாகுதேவர் பூதவீரர்களின் உள்ளம் எல்லையில்லா உவகை பூத்தது.

இயமன் வீரவாகுதேவரைத் தொழுது, ''உங்கள் தம்பியர் உயிரை அடியேன் கவர்ந்து செல்வேனா? கைலை சென்றிருந்த அவர்களை இங்கு அழைத்து வந்தேன்'' என்று வேண்டி அருள் பெற்றுச் சென்றான். (தொடரும்)

அந்த ஒரு நாள்

ஆர். சூடாமணி

தூங்கி எழுந்து உட்கார்ந்தாள். நிலைபுரியாத ஒரு கணம் உடலெங்கும் அழுத்தியது. உள்ளத்தையும் உதறித் தெளிவித்துக் கொள்ள வேண்டும் போல் ஏதோ குழப்பத்தின் இருட் திரள் வரி வரியாய் வட்டமிட்டது.

''அம்மா!''

நிச்சயமின்றி அவள் உதடுகளில் புன்னகைச் சாயல் நெளிந்தது. இன்னமும் மன இடுக்குகளில் தேங்கி நிற்கும் பனிப் புகையிடையே வெளிறிய சிற்றொளியாக அமுதாவின் கவலை படர்ந்த முகம் தனியாய் மிதந்து தெரிந்தது.

''எழுந்து பல்லைத் தேய்க்கிறியா அம்மா? இல்லை யானால் பேஸினையும் பேஸ்ட் பிரஷையும் இங்கேயே கொண்டு வரட்டுமா ?''

ஏன் இந்தக் கேள்வி? ராத்திரி படுத்துத் தூங்கப் போனது நன்றாக நினைவு இருந்தது. உடல் நிலையில் கோளாறு ஏதும் இருக்கவில்லையே. காலையில் கண் விழிக்கும்போது மட்டும் தனக்கு என்ன நேர்ந்து விட்டிருக்குமென்று நினைத்து மகள் இப்படிக் கேட்கிறாள்?

''எழுந்து வரேன், அமுதா! படுக்கையில் எதுக்குப் பல் தேய்க்கணும்? புதுசாயிருக்கே!''

''அதுக்கில்லையம்மா! ஒரு வேளை உனக்கு அசதியாயிருக்குமோன்னுதான்.....''

''அழகாயிருக்கு போ.''

துளசி எழுந்து நின்றாள். பூமி நிலைமாறிச் சுழன்றது. ஒரு நிமிஷம் வானவெளியில் தலை கீழாய் மோதி அதிர்ந்து போனாள். தாவித் தடவிய கைப் பிடியில் சூனியம்.

''அம்மா, அம்மா!''



அலண்டு போன அமுதாவின் குரல். தான் அவள் பிடியினுள் அடங்கித் தலையைப் பற்றிக் கொண்டிருப்பது துளசிக்கு உணர்வாகியது. யுகமாய் நீண்டுவிட்ட கணப் பொழுதில் ஒரு மயக்கமா? அவளுக்கு உடம்பு சரியாய்த்தான் இல்லையோ ஒருவேளை? அது அவளுக்கு முன்பாக அமுதாவுக்கு எப்படித்தான் தெரிந்ததோ?

''உட்காரும்மா. நான் தண்ணீர் கொண்டு வந்து தரேன்.''

''வேணாம். நானே நடக்கிறேன். கொஞ்சம் பிடிச்சுக்கோ போதும். என்னமோ கிர்'ராய்த்தானிருக்கு. ஏன்னு எனக்குத் தெரியலே.''

இன்னும் அதிகப் பரிவுடன் அமுதாவின் கரங்கள் அவளை அரவணைத்தன.

பல் கழுவிக் காப்பி அருந்தினாள். நாற்காலியில் அவளை அமர்த்திய வாறே, ''கொஞ்சம் ஓய்வெடுத்துக்கோ அம்மா!'' என்றாள் அமுதா. மென்மையில் அழுந்திய குரல். கண்ணோரங்களில் சோகம் வெம்பினாலும் வெடித்து விடாமல் பூசப் போடும் உதட்டு முறுவல். சோகத்தையும் மீறிய ஆழ்ந்த கவலையின் மூட்டம் பதிந்த முக பாவம்.

துளசி மகளை ஏறிட்டு நோக்கினாள். அமுதா எவ்வளவு அழகு! சட்டென்று யோசனை தாவியது: பையனும் அழகுதான்! ஜோடிப் பொருத்தம் வெகு அருமை. அமுதாவின் திருமணம் நிச்சயமாகி விட்டது

என்ற நினைவில் கைவருடலைப் போன்ற தன்னென்ற ஓர் இதம். கூடவே, மகளின் கவலையற்ற குழந்தைப் பருவத்துப் பாதுகாவல் தன்னை விட்டு நீங்கிப் போவதில் பெற்ற மனத்தின் பாச ஆற்றாமை. மெள்ள அந்த இளங் கையைத் தடவிக் கொடுத்தாள்.

''எங்க அமுதாவுக்கு அடுத்த மாசம் கல்யாணம்!''

அமுதா அவளை நெகிழ்ந்து நோக்கிவிட்டு மெள்ளக் கையை விடுவித்துக் கொண்டாள்.

''இதோ கொஞ்சம் வேலை இருக்கம்மா. போய்ட்டு வந்துடறேன். நீ இப்படியே ஓய்வாயிரு கொஞ்ச நேரம். வேறு ஏதாவது வேணுமா ?''

''எனக்கு என்ன வேண்டியிருக்கப் போறது ?''

''இன்றைய நியூஸ் பேப்பர் இதோ மேஜை மேல் இருக்கு. வேணும்னு பாரு. இதோ வைக்கிறேன்.''

வெறும் நினைவுப் பிண்டம். தாளமுமற்ற, பொய்யுமற்ற ஒரு நிலை. நேற்றுச் சனிக்கிழமை. இன்று ஞாயிறல்லவா ? ஞாயிற்றுக்கிழமை கொஞ்ச நேரம் பேசிப் பொழுது போக்குவதற்கு வருவதாக அமுதாவின் வருங்கால மாமியாரும் மாமனாரும் சொல்லியிருந்தார்களே! இன்று பிற்பகல் வருவார்கள். நல்லதாக டிபனுக்கு ஏதாவது செய்யும்படி சமையற்காரரிடம் சொல்ல வேண்டும்.

திரும்பினாள். மீண்டும் சலனப்படமாக இருட் திரைகள் நெஞ்சுள் இறங்கின. பாவ முடியாத கால்கள் துவள்வது போல், இதயத்துள் நினைவு மடிந்து, மடிந்து விழுந்தது. கண் முன் அடர்ந்து, உற்றுப் பார்த்தால் தத்தி ஓடுகிற, நிழற் சலனங்களால் எண்ணங்கள் அவ்வாரம் ஒடிந்து கலந்தன.

கையை நீட்டிச் செய்தித் தாளை எடுத்தாள். இன்று ஞாயிறு மலராக இருக்குமே?



அமுதா சென்று விட்டாள். மோட்டு வளையை அண்ணாந்து பார்த்தபடி துளசி சிறிது நேரம் உட்கார்ந்திருந்தாள். எங்கெங்கிருந்தோ மனமூலைகளைக் கரையுடைத்துக் கொண்டு உணர்வு பெருகி வந்தது. இரு கைகளையும் நீட்டிக் குவித்து வைத்தாற் போன்ற உணர்ச்சித் திரட்டு. அதில் விவரம் தெளிய முடியவில்லை. மனமெங்கும் ஏதோ கனம் அடைத்துக் கிடந்தது. பெரியதொரு மலையுச்சியின் மேல் ஏறி மீண்டதுபோல் களைப்பு. இரவு படுத்தது. இப்போது விழித்தது — இந்த இரண்டு உண்மைகளின் கரைகளைத் தொட்டுக் கொண்டு ஓடுகிற ஆழம் புரியாத ஏதோ பிரளயம் மனத்தினுள். உறக்கத்தில் தான் கனவு கண்டதாக அவளுக்கு இலேசாய் நினைவு வந்தது. உருவில்லாத

சுவையான கதைகள், கட்டுரைகள், — துணுக்குகள் அச்சாகியிருக்கும். சிறிது நேரம் மனமாற்றமாகப் படிக்கலாம்.

பத்திரிகையைப் பிரித்தாள். மெல்லியதாக இருக்கிறதே? வழக்கமான இலக்கிய, கலைப் பகுதிகள் வரவில்லையோ? வெறும் செய்திப் பத்திகள் மட்டும்தானா? கண்கள் அச்சின் மீது ஓடின. சட்டென்று ஓர் இடறல். மேலே அச்சாகியிருந்த தேதி, கிழமைகளின் மேல் பார்வை மோதிய பிரமிப்புக் கலைவதற்குச் சிறிது நேரமாயிற்று. பக்கங்களைத் திருப்பி முதல் பக்கத்தை வெறித்தாள். என்ன விசித்திரம் ! பேப்பரில்கூடத் தவறாக அச்சிடுவார்களா என்ன? திங்கட்கிழமை என்றல்லவா போட்டிருக்கிறது. நேற்றுச் சனிக்கிழமை. பின்னே

இன்று திங்கள் எப்படி? ஞாயிற்றுக்கிழமை அல்லவா இருக்க வேண்டும்?

சகாதேவன் உள்ளே நுழைந்தார்.

"என்ன வேடிக்கை பாருங்க!" துளசி கணவரிடம் புன்சிரிப்போடு கூறினாள். "ஞாயிற்றுக்கிழமையைத் திங்கள்னு அச்சிட்டிருக்காங்க! பேப்பரிலே எல்லாம் இந்த மாதிரி தப்புச் செய்யலாமா?"

அவர் எதுவும் சொல்லவில்லை. அவளைப் பரிந்து நோக்கிய பார்வையில் அன்பின் கழிவிரக்கம் நின்றது. துளசி விவரமற்ற குழப்பத்துடன் அவரைப் பார்த்தாள்.

"என்ன அப்படிப் பார்க்கிறீங்க? இன்று ஞாயிறுதானே? நேத்து சனிக்கிழமைன்னு இன்று ஞாயிறுதான். மலரில் ஏதானும் நல்ல கதை, படம் இப்படி இருக்கும்னு பார்த்தேன். திங்கட்கிழமைன்னு போட்டிருக்கானே! அதிசயமா இல்லே ?"

"அது போகட்டும் துளசி! நீ கீழே போய்க் குளிக்கிறதானால் குளி, இல்லையானால் ஆளை மாடியிலேயே உனக்கு வெந்நீர் கொண்டு வரச் செய்து விடலாம்."

அவர் பேச்சு தொலைவான விளிம்புகளையெல்லாம் தொட்டுப் புதிர் போடுவதுபோல் இருந்தது. அவள் புருவங்களை நெருக்கிக் கொண்டு ஏதோ அர்த்தத்தை அவற்றிடையே தேடுவதுபோல் அண்ணாந்து பார்த்தாள்.

"நேற்று ராத்திரி நான் படுத்துக்கொள்ளப் போன போது உடம்பு நன்றாயிருந்தது. தூங்கி எழுந்திருக்கிறதுக்குள் ஜுரம் கிரம் வந்ததா? எனக்கு என்னவோ அசதியாயிருக்கே?"

"ஒன்றுமில்லே துளசி!" அவர் வாய் ஆசுவாசப்படுத்தியது.

"நம்ம அமுதாவுக்கு நிச்சயம் செய்திருக்கிற வீட்டிலேயிருந்து பையனின் அப்பாவும் அம்மாவும் இன்று மத்தியானம் வருவாங்க; இல்லையா?"

சகாதேவன் பேசவில்லை. அவளை மிருதுவாய் நோக்கினார்.

"அவங்க வர்ற போது நல்ல தின்பண்டம் செய்யச் சொல்ல வேணும்."

"சரி."

அவர் பதில் சொன்னது அவளுக்குச் சற்றுத் தெம்பாயிருந்தது.

"இன்னும் நாம் கல்யாணத்துக்கு ஜவுளி எடுக்கப் போகலியே! யாராருக்கெல்லாம் சேலையும் ரவிக்கையும் எடுக்கிறது, அமுதாவுக்கு எந்த மாதிரி எடுக்கலாம்? இதையெல்லாம் தீர்மானம் செய்துக்க வேணுமா?"

அவர் பேசவில்லை.

"இன்னும் ஒரே மாசம்தானே இருக்கு, கல்யாணத்துக்கு! திரும்பிப் பார்க்கறதுக்குள்ளே வந்துடும்."

அவர் இன்னும் மௌனமாயிருந்தார்.

"என்ன சும்மா இருக்கீங்களே! சொல்லுங்களேன். கல்யாணத்தைத் தடபுடலாய் நடத்த வேணுமா? நமக்கு வேற குழந்தையா, குட்டியா? எல்லாம் அமுதா ஒருத்திதான். அவளுக்குச் சிறப்பாய்ச் செய்ய வேணுமா ?"

"செய்வோம் துளசி, செய்வோம். நீ ஒன்றும் அலட்டிக்காதே. அதுதான் முக்கியம்." அருகில் வந்து அவள் முதுகில் ஆதரவாய்த் தட்டிக் கொடுத்துவிட்டு அவர் சென்றார்.

துளசி அசையாமல் உட்கார்ந்து விட்டாள். தலையில் மங்கலாக நோவு. நிலைபுரியாமல் எழுந்து நின்றாள். நாற்காலி கிறீச்சிட்டது. எதிரிலிருந்த வட்டமேஜை கண்ணாடிக் கிண்ணத்தில் பிளாஸ்டிக் கதம்ப மலர்கள் விறைத்து நின்றன. அவைகளின் மேல் தூவலாய்ப் படிந்த தூசி. மேஜையின் நான்கு கால்களில் ஒன்று சிறிது ஆட்டம் கண்டிருந்ததால் அதை மற்ற மூன்றோடு சமானமாக்கும் பொருட்டு அதனடியில் ஒரு காகிதச் சுருள் பொருத்தப்பட்டிருந்தது.

மேஜைக் காலைப் பார்த்தவளின் கண்கள் சரிந்து, தரையில் விழுந்திருந்த செய்தித்தாள் மீது நிலைத்தன. திங்கட்கிழமை. நிஜமாகவா? நேற்று சனிக்கிழமையாயிற்றே. பின்னே இது எப்படி? மீண்டும் தலைக்குள் வேகமிடும் இருள் சாட்டைகள்.

அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டு அப்பால் நடந்தாள். இன்று விருந்தாளிகளுக்கு என்ன சிற்றுண்டி அளிக்கலாம்? பூரி செய்யச் சொல்லலாமா? வீட்டில் கோதுமை இல்லையோ? சரி, பஜ்ஜி போடச் சொன்னால் ஆயிற்று......

கீழே சென்றாள். குளியல், சாப்பாடு முடிந்தன. சகாதேவனும் அமுதாவும் காட்டிய நுட்பமான கனிவு இதமாயிருந்தது; கூடவே, அச்சுறுத்தி அழ வைக்கிற மாதிரியுமிருந்தது.

டிபனைப் பற்றிய உத்தரவுகள் கொடுத்து விட்டு மாடிக்கு வந்தாள். இயல்பான நடவடிக்கைகளிடையே முள்ளாகச் சிறு உணர்வு: சமையற்காரரும் வேலையாளும் அவளை ஏன் உறுத்துப் பார்க்கிறார்கள்?

படுத்துக் கொண்டாள். மீண்டும் எழுந்து உட்கார்ந்தாள். ஓய்வெடுக்க முடியவில்லை. மனத் திரைக்குப் பின் உணர்வு ஏதோ படியில் தடுக்குவது போலவே இன்னமும் இருந்தது. இதயத் துடிப்பு இன்னும் ஏதோ ஒரு புதிரின் தலைவாசலில் ஸ்தம்பித்துக் கொண்டிருந்தது.

கீழே மோட்டார் சத்தம் கேட்டது. அவள் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். எதிர்காலச் சம்பந்தியம்மாள் இறங்கி வந்து கொண்டிருந்தாள்.

துளசியின் முகம் மலர்ந்தது. இதோ வருகிறாளே அந்த அம்மாள், தான் சொல்லியிருந்தது போல! அவளுடைய கணவர் வரவில்லை போலிருக்கிறது. எப்படியும் இன்று ஞாயிறுதான் என்பது நிச்சயமாகி விட்டது. அவள் நினைத்ததுதான் சரி.

கதவை நோக்கித் திரும்பி நடந்தாள். கீழே போய்ச் சம்பந்தியம்மாளை வரவேற்க வேண்டாமா? மேஜையின் மேல் செய்தித்தாள் குறுக்கே மடிப்பு ஓடிக் கசங்கிய நிலையில் கிடந்தது. உயரே எழுத்துக்கள். திங்கட்கிழமை.

அவள் அதை அலட்சியப்படுத்தி விட்டு மேலே நடந்தாள். காற்றில் அலைந்த சேலை முந்தானை சுவரின் அலமாரிக் கைப்பிடியில் சுற்றி இழுத்தது. திறந்த அலமாரியினின்று ஏதோ திரளாக அவள் பாதத்தின் மேல் "சத்"தென்று விழுந்தது.

பார்த்தாள். கண்கள் விழித்தன. கனமான தினப் பத்திரிகை. அதிகப் பக்கங்களுள்ள ஞாயிற்றுப் பதிப்பின் பிரதி. அவள்

குனிந்து எடுத்தாள். பதித்த பார்வையை விலக்க இயலவில்லை. ஞாயிறு மலர். தேதி? அவள் படுத்துத் தூங்கிய தினத்துக்கு அடுத்த நாளின் தேதி ?

அந்தத் தேதி இன்று அல்லவா? அவள் இந்த இதழைப் பார்த்ததில்லை. இது நேற்றையப் பத்திரிகையா? நேற்று ஞாயிறு ? அப்படியானால் இன்று திங்கள்தானா? ஞாயிறு இல்லையா? இதன் அர்த்தம் என்ன? அவள் தூங்கப் போனதற்கும் விழித்துக்கொண்டதற்கும் இடையில் ஒரு நாள் இருந்ததா? அது என்ன ஆயிற்று? அவளது காலத்தில் ஒரு நாளின் பொழுது கணக்கில் வராமலே போய் விட்டதா? படுத்ததற்கு அடுத்த நாள் முழுதும் உறங்கியிருந்து மூன்றாம் நாள் காலையில்தானா அவள் கண் விழித்திருக்கிறாள்? சேச்சே, பைத்தியக்காரத்தனம்.

என்ன ஆயிற்று அந்த ஒரு நாள்? அப்போது அவள் எங்கிருந்தாள்? என்ன செய்து கொண்டிருந்தாள்? பத்திரிகை தவறேதும் செய்ய வில்லை. அவள்தான் எங்கோ குழறுபடி செய்து விட்டாள். என்ன விபரீதம் இது! உடல் கன்னென்று வியர்த்தது.

இயந்திர நடையாகப் படிகளை இறங்கி அவள் கீழே சென்றாள். ஹாலில் அந்த அம்மாள் இருந்தாள். எதிரே அமுதாவும் சகாதேவனும். அவளை அவர்கள் யாரும் பார்க்கவில்லை.

அமுதா தலை குனிந்து நின்றிருந்தாள். சகாதேவனின் குரல் விசனத்துடன் ஒலித்தது.

"நேற்று நடந்ததிலேயிருந்து எனக்குத் தெரியுமம்மா, நீங்க இனி எங்கள் பெண்ணை உங்கள் பையனுக்கு மணம் முடிக்கிறது சந்தேகம்தான்னு."

துளசி சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்து நின்றாள். அவள் மகளை மறுக்கிறாளா இந்த அம்மாள்? கல்யாண ஏற்பாடுகள் முடிந்து நாளும் நிச்சயித்த பிறகு இப்போது அமுதாவை வேண்டாம் என்கிறாளா? என்ன அக்கிரமம்! எத்தகைய அநீதி! எப்படி இவ்வாறு வாக்கை மீறலாம் அவள்? நியாயத்துக்கு வழக்காடியே தீர வேண்டும். அவள் மகளை நிச்சயித்து விட்டு இப்போது நிராகரிப்பதா! கொடுமை. அவள் சும்மா யிருக்க மாட்டாள்..... ஏன் வேண்டாமாம்? எங்கள் அமுதா ஏன் வேண்டாமாம் இவனுக்கு?

"நேற்று மத்தியானம் நாங்கள் வந்திருந்தபோது உங்கள் மனைவி இருந்த நிலைக்கப்புறம் உங்க மகளை நாங்க மறுக்கிறதைப் பற்றி ஆச்சரியப்படலே நீங்க. இல்லையா? இந்தக் கோளாறு பரம்பரையிலிருந்து வருவது. தாய்க்கு மூளைக் கலக்கம்னு நாளைக்கு மகள் எப்படி இருப்பாளோன்னு நாங்க பயப்படறது நியாயந்தானே?"

துளசி அசையாமல் நின்று விட்டாள். ஒரு நிமிஷம் அர்த்தம் பிடிபடவில்லை. பிறகு பிடிபட்டபோது அக்கணத்தின் அசுரத் தன்மையில் உடல் முழுதும் அனல் பாய்ந்தது. என்ன! என்ன! தாய்க்கு மூளைக் கலக்கம்... அந்த ஒரு நாள். சனிக்கிழமை இரவு படுத்தாள். இன்று காலை — திங்கட்கிழமை — கண் விழித்ததுதான் நினைவிருந்தது. இரண்டுக்கும் இடையில் ஒரு நாள். அவள் அறியாத, அவள் மாறி உலவிய, ஒரு ஞாயிறு.



"ஏங்க! மூணு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்ளக் கூடாதுன்னு பிரசாரம் செய்துகிட்டு இருக்காங்களே அது என்ன கணக்குங்க ?"

"அதுவா சர்க்கரைக் டிப்போவுக்கு ஒண்ணு, அரிசிக் டிப்போவுக்கு ஒண்ணு, பால் டிப்போவுக்கு ஒண்ணு. அதுக்குத்தான் அந்தக் கணக்கைச் சொல்லி யிருக்காங்க!"

"திடீர்னு நேற்று அவளுக்கு அந்த மாதிரி வந்துடுத்து. இன்று சரியாய் இருக்காள்" என்றார் சகாதேவன் மெதுவாக.

அவளா! அந்த நிலையிலா! அவளுக்கா அத்தகைய ஒரு நிலை ஏற்பட்டது? என்ன அவமானம்! எத்தகைய பேரிடி! துளசி உணர்ச்சி குமுற நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டாள். உடல் முறுக்கேறியது. ஐயோ, என்ன நிலை அவளுக்கு! கடைசியில்..... கடைசியில்...... அந்நிலை காரணமாகவே, அவள் காரணமாகவே, அவள் அருமை மகளின் திருமணம் தடைப்படுகிறது! அவள் இதயம் தலை தெறிக்கப் பாயலாயிற்று.

"எப்படி என்னைப் பார்த்து விழிச்சாள்! ஐயோடி, இப்போ நினைச்சாலும் பயமாயிருக்கு. என்னைப் பார்த்து, 'பாவி, உன்னை ஒரே மூச்சிலே கொன்னுப் போட்டுடுத்தான் மறு வேலை' அப்படீன்னு சீறிப் பல்லைக் கடிச்சிக்கிட்டு என் மென்னியைப் பிடிக்க வந்தாளே!........"

பேசிக் கொண்டிருந்த அம்மாள் திடீரென்று நிறுத்தி விட்டுக் கிலியுடன் பின்னே சரிந்தாள். எதிரே துளசியின் வடிவம் பயங்கரமாய் முன்னேறி வந்து கொண்டிருந்தது. அமுதாவும் சகாதேவனும் அவளைத் திகைப்போடு பார்த்தனர். துளசியின் முகம் பொங்கிச் சிவந்திருந்தது. கண்கள் வெறி கொண்டு விழித்தன. மூச்சு புயலாகச் சீறியது. பொங்கியெழுந்த வியர்வையின் பின்னே நரம்புகள் புடைத்து இறுகி, மடித்த வாய் கோணவிட்டு, உடல் பதற்றமாய் ஆடிக் கொண்டிருந்தது. ஒவ்வோர் அடியாக முன்னே வைத்து அவள் தனக்குச் சம்பந்தியம்மாளாய் வரவிருந்து பிறகு மறுத்து இப்போது பயத்தில் கயிறாய்த் தொய்ந்து நடுங்கி நின்றவளை வெறி கொண்ட பார்வையுடன் நெருங்கிக் கொண்டிருந்தாள். அதிர்ச்சியின் காரணமாய் மீண்டும் அறிவு பேதலித்துவிட்ட நிலையிலே,— கைகள் ஆவேசமாய் முன்னே நீண்டிருக்க, இறுகி நெரிந்த பற்கள் சொற்களை உமிழ்ந்தன: "பாவி! உன்னை ஒரே மூச்சிலே கொன்னுப் போட்டுடுத்தான் மறு வேலை!".



அவள் எங்கே?
கதை: கௌசிகன்
சித்திரம் ரமணி:
23
இன்ஸ்பெக்டர் சார் விசேஷமில் லாமே இந்த வேளையில் வருகை தந்து விசாரணை புரிய மாட்டார் என்று நினைக்கிறேன்.
உன் வக்கீல் வாதத் திறமையை என்னிடமும காட்டுகிறயோ சேகர்?
ம்... உடலில் தலை பொருந்தவில்லை என்று நினைக்கிறேன். அப்படித்தானே?
பொருந்துகிறது. ஆனால் கழுத்துத்தான் கொஞ்சம் அகலமாக இருக்கு!
பலே, பலே! ரொம்ப சுவாரசியமான விஷயத்தைச் சொல்லியேயும்... மேலே சொல்லு
இரண்டு கொலைகள் நடந்திருக்கு. அந்த உடலுக்குரிய தலையையும் இந்தத் தலைக்குரிய உடலையும் கண்டு பிடித்தாக வேண்டும்...
இதென்ன விளையாட்டு சண்முகம்? காலங்காத்தாலே சுருட்டுப் புகையை முகத்திலே ஊதிக்கிட்டு...


அதிலே விசித்திரமும் இல்லே, அதைகள் கதைகளுமல்ல. உனக்கு உண்மை தெரிய வேண்டுமானால் குமார் நிரபராதி.
அது கிடக்கட்டும். நான் எங்க தலைமை அதிகாரி கிட்டே இது விஷயமாப் பக்குவமாப் பேசியிருக்கேன். அவர் இந்தக் கேசை என்னை மீண்டும் செய்யச் சொல்லியிருக்காரு. ஆதலினாலே உன் பிரண்டுக்கு இதிலே சாக்ஷி கிடைக்காதுன்னா காது அவர் ஒத்து செய்யுறதாலே எந்த ஜெயில் அவருக்குக் கிடைக்கும்னு சொல்றே?
அதெப்படி சண்முகம்? சந்துரு, நீரென்று பெருமை என் நண்பர்கள். அதனால் அவனுடைய உழைப்பை உன்னுடையதாக்குவ தென்றால்...?
சேகர்! கவலைப்படாதே. சும்மா தமாஷ் பண்ணினேன். நான் இதிலே நேரடியாக வேலை செய்யமுடியாது. எனக்கு பிறருடைய புகழில் குளிர் காய வேண்டாம். சந்துருவுக்கு உடனே போன் செய்.
சேகரின் அழைப்புக் கிடைத்து அரை மணியில் சந்துரு வந்து, தன் அது மாறுதல்களை இன்ஸ்பெக்டரிடம் விளக்கினான்.
சாட்சிப் பொருளாக வந்த துப்பாக்கியைச் சாமர்த்தியமாகப் பெற்று அதனாலேயே மாலதியை இரண்டாவது தடவை சுட்டுக் கொன்றிருக்கிறான்.
மாலதி, ரேணுகாவின் வீட்டில் இருந்தான் என்பதற்குச் சாட்சியங்கள்?
ரேணுகா, டாக்டர் சுரேஷ், அவர் மகன் குமார், ரேணுகாவின் வீட்டு வேலைக்காரி, இவர்களோடு முக்கியமான நபர் பெரியசாமி. இது தவிர, உன்னால் கண்டு பிடிக்க முடியுமானால் - மாலதி ஏறிச் சென்ற ஏதோ ஒரு டாக்ஸியின் டிரைவர்.
பெரியசாமி மாதிரி உண்மை பேசுவாரா?
சொல்வதாக வாக்களித்திருக்கிறான்.
டாக்டரும் அவர் மகனும் கூறும் சாட்சியங்கள் நமக்குப் பயன்படாது. ரேணுகா வேலைக்காரி - இவர்களை விசாரிக்கலாம். பெரியசாமியும் டாக்ஸி டிரைவரும் முக்கியமான சாட்சிகள்.
சரி முதலில் ரேணுகாவிடம் போகலாம், கிளம்பு.
ரேணுகா வீட்டில் இல்லை. நான் இங்கு வருவதற்கு ஒரு மணி முன்புதான் ஏதோ அவசரமாக வெளியே சென்றதாக அவள் வீட்டு வேலைக்காரி கூறினாள்.
என்ன? ...வெளியிலா...?

தொடரும்..



உங்கள் கூந்தலின் உண்மையான
அழகை வெளிப்படுத்த
கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
COLGATE
HAIR OIL
பளபளப்புடனும், அடர்த்தியுடன் இளமைத் துடிப்போடும் விளங்கும் நீண்ட கூந்தலின் ரகசியம் தினந்தோறும் குளிக்குமுன் மயிர்க் கால்களிலும், கேசத்திலும் கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயில் தேய்த்துக்கொள்வதே என்பதை லக்ஷக்கணக்கான குடும்பத்தினர் அறிந்திருக்கின்றனர். அதன் உன்னதமான நறுமணத்தினால் நீங்கள் பரவசமடைவீர்கள்... கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயில் உங்கள் கேச வளர்ச்சிக்கு உதவுவதைக் கண்டு நீங்களே ஆனந்தமடைவீர்கள்!
அதன் பரவசமூட்டும் நறுமணத்தை உங்கள் குடும்பத்தினர் விரும்புவர்
எகானமி சைஸ் வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
இப்பொழுது
கால்கேட் பெர்பியூம்டு கோகோனட் ஹேர் ஆயில்



கலங்கரை விளக்கம்

அவள் மாமல்லபுரத்தில் கலைப் பைத்தியம். சிவகாமியையும், நரசிம்ம பல்லவரையும், ஆயனச் சிற்பியையும் நினைவூட்டி, வக்கீல் ரவியையும் காதல் பைத்தியமாக்குகிறாள். இந்தப் பைத்தியங்களை வைத்து விளையாட வில்லன் நாகராஜன் வருகிறான். அதன் விளைவு கலைப் பைத்தியம் கலங்கரை விளக்கத்திலிருந்து விழுந்து உயிர் துறக்கிறாள் - மர்மத்தைத் தோற்றுவிக்க! ஹிட்ச்காக் சஸ்பென்ஸ் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. என்ன மர்மம் என்பதெல்லாம் தெளிவாகத் தெரியும்படியாகவே கதையைக் கொண்டு செல்லக் கலைப் பைத்தியத்தின் ஊடை கொண்ட வில்லன் நாகராஜன் காதலியின் தங்கை நடிக்கிறாள். அவளை வக்கீல் ரவி மணந்து கொண்டு, வில்லன் நாகராஜனின் சதித் திட்டத்தைக் கடைசியில் வெளிப்படுத்துகிறான்.

வக்கீல் ரவியாக எம். ஜி. ஆர். வந்து ஆடிப் பாடிக் குதித்து, அடித்து உதைத்துச் சண்டை போட்டுத் துப்பறியும் நிபுணனைப் போல மர்மத்தைத் துலக்குகிறார். 'வக்கீலா இப்படி அடி, உதை, குத்தில் இறங்குகிறார்?' என்று ஆச்சரியப்பட்டார் ஒருவர்; எந்தக் கதாபாத்திரமாயிருந்தால் என்ன? எம். ஜி. ஆர். வருகிறார் என்றால் அதோடு அடி, உதை, சண்டை வராவிட்டால் கைப்படுமா?

கதாநாயகன், கதாநாயகி இரட்டை வேடம் தாங்கிப் படம் வெற்றி நடை போடுகிறதென்றால் தொடர்ந்து எல்லாப் படங்களுமே இந்த இரட்டை வேடத்துக்கு மவுசு கொடுக்கத் தொடங்கிவிடுகின்றன. அது அலுத்துவிடும் என்பதைப் படமுதலாளிகள் மறந்து விடுகின்றனரே, என்ன செய்வது? அபிநய சரஸ்வதி சரோஜாதேவி இரட்டை வேடத்தில் வந்து வக்கீல் ரவியோடு 'பரி'யாகவே ஆடிப் பாடிக் களித்து மகிழ்கிறாள். சிரஞ்சீவி காதல் ஜோடியாயிற்றே !

மாமல்லபுர 'கைடா'க நாகேஷ் வந்து அளப்பரிய பொய்களை அள்ளித் தெளிக்கிறார். அவரது பொய் வர்ணனைகளை ஓர் ஆங்கில மாதே மறுத்துச் சரியான விளக்கம் கொடுப்பது இயற்கையா யமைந்திருக்கிறது.

தம்புவின் ஒளிப்பதிவுச் சிறப்பை மைசூர்க் காட்சிகளும் மாமல்லபுரக் காட்சிகளும் கலங்கரை விளக்க மாக நின்று காட்டுகின்றன.

✻ இதய கமலம் ✻

பெயர் அழகாயிருப்பது போலவே படப்பிடிப்பும் அழகாயிருக்கிறது. ஒளிப் பதிவு டைரக்டர் தம் கைவண்ணத்தை இவ்வண்ணப் படத்தில் அதியற்புத மாகச் சாதித்திருக்கிறார். திரைக்கதை யின் மூலப் பொருள், இரட்டையாகப் பிறந்த இரண்டு பெண்களின் அதிசயிக் கத்தக்க உருவ ஒற்றுமைதான்.

கமலாவும் விமலாவும் இரட்டைப் பிறவிகள். கமலா பாரிஸ்டர் பாஸ்கரை மணந்தாள். விமலா ஒரு கொள்ளைக் கூட்டத்தினிடம் சிக்கி அவர்கள் தலை வனையே மணந்தாள். விதியின் விளை யாட்டு, ஒருநாள் இரவு விமலா போலீ ஸார் துரத்தி வரக் கமலாவின் வீட்டில் தஞ்சம் புகுந்தாள். அப்போது பாரிஸ் டர் பாஸ்கர் இங்கிலாந்து போயிருந்த நேரம். தஞ்சமடைந்தவளைக் காக்க எண்ணிய கமலா, அவள் யாரென்றறிந் ததும், அவளைப் பற்றி மாமியாரிடம் சொல்லத் தயங்கி, தனது ஸ்தானத்தில் அவளை வைத்து விடுகிறாள். டாக்டரை அழைத்து வரச் சென்ற கமலாவை விமலா என எண்ணிக் கொள்ளைக் கூட்டத்தினர் கடத்திச் செல்கின்றனர். விமலா இறந்து விடுகிறாள். தகவல் அறிந்து மேல்நாட்டிலிருந்து விரைந்து வந்த பாஸ்கர் நிர்மலாவைக் கமலா வாகவே நினைத்து அவளுக்கு இறுதிக் கடன்களைச் செய்து முடிக்கிறான்.

இறந்தவளின் இறுதிக்கடன்கள்தான் முடிகின்றன. கதை முடியவில்லை. இப் பொழுதுதான் சிக்கலே ஆரம்பமாகிறது. கமலா நீதிமன்றத்தில், தான் பாரிஸ் டர் பாஸ்கரின் மனைவி என்று வாதாடு கிறாள். நீதி விசாரணைக் காட்சி பல முறை காட்டப்பட்டும் அலுப்பாயில்லாதது திரைக்கதை வசனத்தின் திறமையைக் காட்டுகிறது. சம்பவங்களை விறுவிறுப் பாக மாற்றி மாற்றிக் கோத்துச் சுவை யாகச் செய்திருக்கிறார்கள். ஆனால் இடை வேளைக்குப் பிறகு, கமலா தன் கணவனை வீட்டில் சந்தித்துப் பேசியபோது கூறும் கதை நம்பக்கூடியதாக யில்லை.

இரட்டை வேடம் தாங்கியிருக்கும் கே. ஆர். விஜயாவுக்கு இரட்டை வெற்றி. மகிழ்ச்சியிலும், மனத் துயரத்திலும் அவர் மிகத் திறமையாக நடித்துள்ளார்.

பாரிஸ்டர் பாஸ்கராக வரும் ரவிச் சந்திரன் நடிப்பில் நமக்குத் திருப்தி அளிக்கவில்லை. இளைஞர் ஸ்ரீகாந்தின் டைரக்ஷனைப் பாராட்ட வேண்டியது தான். கடைசிவரையில் சஸ்பென்ஸோடு சுவை குன்றாமல் செய்திருக்கிறாரே!



அத்தியாயம் முப்பத்தியேழு

தலைவரும் தொண்டரும்

டாக்ஸி ஓடிக் கொண்டிருந்தது. ரோஸி தன் தாயாரைப் பற்றிக் கேட்டதும், ''ஃபோரோ-ஒ-க்ளாக் ஆயிப் போச்சு இல்லையா; இந்நேரம் அது லேடீஸ் க்ளப்பிலே டென்னிஸ் ஆடப் போயிட்டிருக்கும்!'' என்று புன்னகையுடன் சொன்ன நச்சி, ''இன்னுப்பா, டிரைவர்! இங்கேதான் இப்படி ஓரமா நிறுத்திக்க'' என்றான்.

நுங்கம்பாக்கம் சுதந்திரப் பார்க்குக்குச் சற்று முன்னால் போய் நின்றது டாக்ஸி. ஸ்டைலாகக் கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்கினான் நச்சி.

பிரிவுத் துயருடன் அவனை ஏறிட்டுப் பார்த்த ரோஸி, ''மிஸ்டர் நாச்! உன்னுடை பங்களா எது? ஷோ மீ?'' என்று ஆவலாகக் கேட்டாள்.

கொஞ்சங்கூடத் தயங்காமல் திரும்பிய நச்சி, லேக் — அவென்யூவிலிருந்த ஓர் அழகிய பெரிய பங்களாவைச் சுட்டிக் காட்டி, ''அதோ, அதுதான்!'' என்றவன் உல்லாச முறுவலுடன், ''சரி, நான் வரட்டுமா டியர்? டுமாரோ ஈவ்னிங் உன்னை வந்து பார்க்கிறேன் — டாட்டா!'' என்றவாறு சாலையை விட்டுப் பள்ளத்தில் இறங்கி நடக்கலானான்.

வியப்பும் திகைப்புமாக அந்தப் பங்களாவையும் நச்சியையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டு டாக்ஸிக்குள் உட்கார்ந்திருந்த ரோஸி, ''கிளம்பலாமா, மேடம்!'' என்ற டிரைவரின் குரல் கேட்டு, ''வெயிட் ஏ மினிட், ப்ளீஸ்!'' என்று கூறிவிட்டு மீண்டும் அந்தப் பக்கமாகவே தன் பார்வையைச் செலுத்தினாள்.

நச்சி அந்தப் பங்களா வாசலண்டை போய் நின்று மெல்லப் பின்னால் திரும்பிப் பார்த்தான். டாக்ஸி இன்னமும் புறப்பட்டுச் செல்லாமல் அங்கேயே நின்றிருப்பது தெரிந்தது. சரேலென்று 'கேட்'டைத் திறந்து உள்ளேயே நுழைந்துவிட்ட அவன், அடுத்த சில நிமிடங்களில் அந்தப் பங்களாவின் மாடிப் போர்ட்டிகோவில் வந்து நின்று, தொலைவிலிருந்த டாக்ஸியை நோக்கிக் கை ஆட்டினான்.

ரோஸியும் பதிலுக்குக் கையசைப்பது தெரிந்தது. உடனே அந்த டாக்ஸி கிளம்பிச் சென்று மறைந்தது.

''வாடா, நச்சி! என்ன, ரொம்ப நாளுக்கு ரொம்ப நாளு?'' என்று அமர்த்தலாகக் கேட்டுக் கொண்டே அந்தப் பங்களாவின் மாடியறையிலிருந்து அப்போதுதான் போர்ட்டிகோவுக்கு வந்த ஸ்ரீமான் மருதமுத்துவைப் பார்த்து ஒரு கூழைக் கும்பிடு போட்டான் நச்சி.

மாடி முகப்புத் தளத்தில் போடப்பட்டிருந்த பிரம்பு நாற்காலியில் வந்து அமர்ந்த மருதமுத்து சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, ''ஏண்டா, நிற்கிறே? அப்படி உட்கார்!'' என்றவாறு உயர்தர சிகரெட் பாக்கெட்டில் போட்டு வைத்திருந்த மட்டரக சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தார்.

அவர் இந்த மாலை நேரத்தில் வீட்டில் இருந்ததே ஓர் அதிசயம்; அதிலும் தனியே இருப்பது அதைவிட அபூர்வம். கூட்டம் நடத்தப் பேச்சாளர்களைப் பிடித்துக் கொடுக்கச் சொல்லிக் கேட்க வருகிறவர்கள், கூட்டத்தில் பேசுவதற்காக அழைக்க வருகிறவர்கள், மேலிடங்களுக்குச் சிபாரிசு கோரி வருகிறவர்கள், காரிய சாதனையில் பங்கு பெறவோ, பங்கு விகிதத்தை நிர்ணயிக்கவோ வருகிறவர்கள், ஒரு குறிப்பிட்ட விஷயானுகூலத்துக்குச் சட்ட சம்மதமற்ற குறுக்குவழிகள் என்னென்ன உண்டு என்பதுபற்றித் தெரிந்து கொள்ளவும், தமக்குப் பிடிக்காத சர்க்கார் அல்லது நகர மன்ற அதிகாரிகளையோ சிப்பந்திகளையோ பழி வாங்க எத்தகைய சில்லுண்டித்தனம் செய்யலாம் என்பதற்கு ஆலோசனை கேட்கவும், டெண்டர்களைக் காண்ட்ராக்ட் எடுப்பதில் ஏற்படும் சிக்கல்களையும் போட்டிகளையும் தவிர்க்க யார்




யாருக்கு எதைவெதைக் காட்டி என்னென்ன கொடுத்து எப்படி யெப்படிப் பிழைக்கலாம் என்பதற்கு யோசனையும் உதவியும் வேண்டி வருகிறவர்கள், ஒரு கட்சியின் ஏதேனும் ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வல நிகழ்ச்சியை இன்னொரு கட்சி எதிர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தி முறியடிப்பதற்காகக் கைக்கூலிகளையும் அடியாட்களையும் 'கமிஷன் பேசிஸி'ல் சப்ளை செய்யுமாறு கோர வருகிறவர்கள், போலீஸ் கேஸ்களில் சிக்கிக் கொண்டவர்களுக்கு ஜாமீன் கொடுக்க அழைத்துப் போக வருகிறவர்கள், சீட்டாட வருகிறவர்கள், குதிரைப் பந்தய 'டிப்ஸ்' தெரிந்து கொள்ள வருகிறவர்கள், சும்மா அரட்டையடிக்க வருகிறவர்கள் — இப்படி இந்த ரகங்களில் யாராவது நாலு பேர்கள் எந்நேரமும் அவரைச் சுற்றி இருந்துகொண்டே யிருப்பார்கள். எப்போதாவது சில சமயம் இத்தகையவர்கள் எவரும் வரவில்லையென்றாலும், வெகு காலமாகவே அவருடன் அவருடைய நிழல்போல் இருந்து, அவர் உண்ணும்போது உண்டு, உறங்கும்போது உறங்கி, எழுந்திருக்கும்போது எழுந்து, நடக்கும்போது நடந்து, அவரால் செய்யப்படும் எல்லாக் காரியங்களிலும் பங்கு பற்றித் துணை புரிந்து அவருடைய பணத்தைக் கொண்டே வாழ்ந்துவருபவர்களான அவரின் அந்தரங்க நண்பர்கள் இருவர் — செங்கோடன், கருப்பண்ணசாமி எனத் திருநாமம் பூண்டவர்கள் — அவரை விட்டு ஒருகணமும் பிரியவே மாட்டார்கள்.

இப்படிப்பட்ட சகலகலா தொண்டர், மக்களுக்காக மக்களுக்கிடையே கிடந்து வாழும் மக்கள் தலைவர், இன்று தம் பங்களா மாடியறையில் — அதுதான் அவருடைய பிரத்தியேக அலுவல் அறை — வரம் கோரும் பக்தர்களோ, துதிபாடும் மெய்யடியார்களோ யாருமின்றித் தன்னந்தனியாக, ஒரு சாதாரண சராசரி குடிமகன் போல் — இன்னும் பச்சையாகச் சொல்ல வேண்டுமானால் ஓர் அநாதைப் பிணம் மாதிரி — இருந்ததைக் கண்டு வியப்பில் ஆழ்ந்துபோனான் நச்சி. அவரைப் போலவே சுற்றுமுற்றும் பார்த்தவாறு, "பரவாயில்லே, சார்! நான் இப்படியே நின்னுக்கிறேன்" என்று குழைச் சிரிப்புடன் கூறிக் கொண்டே, அழகிய சிமிண்டு 'ஜாலி' வைத்துக் கட்டிய கைப்பிடிச் சுவரில் போய் இலேசாகச் சாய்ந்து நின்றான்.

"என்னடா, இன்னிக்கு ஆளே ஒரு தினுசா இருக்கிறே? என்ன சமாசாரம்?" என்று அமர்த்தலான புன்முறுவலுடன் கேட்டார் மருதமுத்து.

"அதெல்லாம் ஒண்ணுமில்லே. மச்.....ம் சார்! சும்மா உங்களைப் பார்த்துட்டுப் போவலாம்னு வந்தேன்" என்று தன் கழுத்துப் பிடரியைச் சொறிந்து கொண்டு சொன்ன நச்சி, "சாரு இன்னிக்குக் கூட்டம்



ஜெகசிற்பியன்

நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!




புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!

குளுமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!

சார்மிஸ்

உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்

CHTP.G.B



திட்டம் எதுக்கும் போகலியா ?'' என்று வெகு அக்கறையாக விசாரித்தான்.

''ரெண்டு கூட்டங்களுக்குப் போக வேண்டியிருந்தது..... ..''

''ஏன் சார், போகவில்லே?''

''வால் போஸ்டரில் என் பெயரைப் பெரிதாக அச்சிடவில்லை; அதனால் ஒரு கூட்டத்துக்கு மட்டம். இன்னொரு கூட்டத்துக்குப் போகாத காரணம், நான் சொன்ன சினிமா நடிகரைத் தலைவராகப் போடாமல் எவனோ ஒரு கல்லூரிப் பேராசிரியரைப் போட்டு விட்டார்கள் என்பது.''

''அடங்க இல்லி!'' என்று நகைத்த நச்சி, ''இன்னு மச்சா.....ம்.....சார்! இதுக்கெல்லாமா ஜுகா வாங்கறது?'' என்றான் குறும்பாக.

''டீ சாப்பிடறீயாடா?.... ஏ. பையா!'' என்று பேச்சை மாற்றிக் குரல் கொடுத்தார் மருதமுத்து.

உடனே ஒரு பையன் பிளாஸ்கோடு மேலே வந்தான்.

''அம்மாகிட்டே காசு வாங்கிக்கிட்டுப் போய் ரெண்டு கப் டீ கொண்டு வா!''

நச்சி அவசரமாகத் தன் ஜேபியிலிருந்து ஒரு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டி, ''இந்தாப்பா, இதிலே வாங்கிக்கிட்டு வா! மலாய் ஸிலாய்ப் போட்டுச் சும்மாசம் மூன்று இருக்கணும்'' என்றான்.

''அப்படியே சிகரெட்டும் வாங்கி வாடா!'' என்று தம் கையிலிருந்த சிகரெட் பாக்கெட்டை எடுத்துக் காட்டி உத்தரவிட்டார் மருதமுத்து.

தமட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்ட நச்சி, மருதமுத்துவிடம் ஏதோ சொல்ல வாயெடுத்தவன் பிறகு தயங்கிச் சுணங்கி அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். ஆனால் அவரோ, எதிரே தொலைதூரத்திலிருந்த ஒரு மைதானத்தை வெறித்து நோக்கியபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். நச்சியும் அந்த மைதானத்துப் பக்கம் தன் பார்வையைத் திருப்பினான்.

சென்னை நகரில் பிரசித்தமான நுங்கம்பாக்கம் ஏரிக்கரை மைதானம் அது. அளவில் சிறியதுதான்; அசுத்தமான இடமும்கூட. ஆயினும் அதற்கு ஒரு பிரபலம் ஏற்பட்டு விட்டிருந்தது. காரணம் ஒன்றல்ல, பல. வாரத்துக்கு இரண்டு மூன்று பொதுக் கூட்டங்களாவது அங்கு நடைபெறுவது வழக்கம். 'அண்ணன் எப்போது சாவான், திண்ணை என்றைக்குக் காலியாகும்' என்று காத்திருப்பதுபோல் ஒவ்வொரு கட்சிக்காரரும் அங்கே மாறி மாறிப் பொதுக்கூட்டமோ மாநாடுகளோ நடத்துவார்கள். ஸ்ரீமான் மருதமுத்து போன்ற பல 'அரசியல்வாதி'களை உருவாக்கிய பெருமை அந்த மைதானத்துக்கு உண்டு. அங்குள்ள ஒரு மரத்தையோ, செடியையோ, கல்லையோ தட்டினால்கூட உடனே அவை, ''தலைவர் அவர்களே, தோழர்களே, முதற்கண் என் வணக்கம்' என்று பேச ஆரம்பித்து விடும்! அந்த மைதானத்தில் பேச வராத பெரும் தலைவர்களே இல்லையென்று சொல்லி விடலாம். அவ்விடத்தில் பல பிரசித்தமான போராட்டத் தீர்மானங்கள், தடை உத்தரவை மீறும் நிகழ்ச்சிகள், அரசியல் சட்ட எரிப்பு நடவடிக்கைகள், உண்ணாவிரதங்கள், அடிதடிகள், கல் வீச்சுக்கள், கண்ணீர்ப் புகைப் பிரயோகங்கள், துப்பாக்கிச் சூடுகள் — இவ்வளவும் நடந்திருக்கின்றன. இப்படிப் பேச்சு மேடை போட அந்த மைதானத்தைப் பெரிதும் விரும்பித் தேர்ந்தெடுப்பதிலுள்ள இரகசியம் என்னவென்றால், மேல்தளம், கீழ்த்தளம், இடைத் தளம் ஆகிய முத்தள வர்க்கத்தைச் சேர்ந்த மக்களும் நிரம்பிய வட்டாரம் அது என்பது ஒன்று; அங்கு நடக்கும் கூட்டங்களுக்கு நாலா திசைகளிலிருந்தும் ஜனங்கள் வந்து போக பஸ் வசதியும் மின்சார ரயில் வசதியும் உண்டு என்பது மற்றொன்று; கூட்டங்களில் ஏதேனும் கலாட்டா, கல் வீச்சு, தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் முதலானவை நடந்தால் ஜனங்களும் தலைவர்களும் தட்டுத்தடங்கல் இல்லாமல் நாலாபுறமும் சிதறி ஓடி உயிர் தப்பிச் சௌகரியமான இடம் அது என்பது இன்னொன்று! இவை போதாதென்று, நூற்றெட்டு மணி நேரம் இடைவிடாது சைக்கிள் சவாரி செய்யும் பந்தய நிகழ்ச்சிகளும், குடைராட்டினம் போட்டுச் சிறுவர்களைக் குஷிப்படுத்தும் நிகழ்ச்சிகளும் அவ்வப்போது நடைபெற்று அதன் கீர்த்தியை ஓங்கச் செய்திருக்கின்றன...!

இவ்வாறெல்லாம் பேரும் புகழும் பெற்ற அந்த மைதானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த மருதமுத்து கவலை தோய்ந்த குரலில், ''ஹூம்!..... அதிர்ஷ்டம்!...... இந்த வெட்டவெளி மைதானம் மட்டும் இங்கு இல்லாமல் வடபழனிப் பக்கமோ, அமிஞ்சிக்கரைப் பக்கமோ இருந்திருந்தால் ஒரு 'சின்ன' விளையாட்டு விளையாடி ஏழை ஜனங்களுக்குப் 'பெரியதோர்' உதவி பண்ணியிருப்பேன்'' என்று மெல்ல முணுமுணுத்தார்.

நச்சிக்கு இப்போதுதான் அவருடைய பார்வைப் போக்கின் பொருள் புரிந்தது. அத்துடன் அவர் எதற்காக வருத்தப்படுகிறார் என்ற விஷயத்தையும் புரிந்து கொண்டான் அவன். கடந்த வருஷம் நடந்த ஒரு சம்பவத்தை நினைவுபடுத்திக் கொண்டான்.

மேற்கு சென்னைப் பக்கம் ஓரிடத்தில் சுமார் இருபது கிரௌண்டுகள் நிலம் காலியாகக் கிடந்தது. அது கோயில் ஒன்றுக்குச் சொந்தமான நிலம் என்றும் பேசிக் கொள்ளப்பட்டது. அதனைப் பார்த்துவிட்டு வந்த மருதமுத்து தமது அடியார்கள் சிலரை அழைத்து அந்தத் தகவலை இரகசியமாகக் கூறி, நிலத் தேவையுள்ள எழுபது பேரைப் பிடித்து வரச் சொன்னார். அப்படி வந்தவர்களிடம் கால் கிரௌண்டுக்கு ரூபாய் ஐந்து வீதம் பெற்றுக் கொண்டு அவ்விடத்தைக் காட்டி விட்டார். இரண்டாம் நாள் இரவு அந்தக் காலி மனையில் எண்பது குடிசைகளுக்கு மேல் முளைத்துவிட்டன. பொழுது விடிந்து பார்த்த கோயில் தர்மகர்த்தாக்கள் திகைப்படைந்தார்கள். பின்னர் அவர்களுக்கும் அந்தக் குடிசைவாசிகளுக்கும் தகராறு மூண்டு அடிதடி சண்டை வரையில் ஏற்படும் நிலைமைக்கு முற்றியது. உடனே மருதமுத்து ஒரு குயுக்தி செய்தார். தேசத் தலைவர் ஒருவரின் பெயரோடு 'புரம்' என்ற சொல்லையும் சேர்த்துப் பெரியதொரு போர்டை அங்கே நிறுத்தினார். அத்துடன் ஒரு 'பொதுநல மன்றத்தை'யும் ஆரம்பிக்கச் செய்தார். மறுநாள் பொதுக்கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்து தாமே தலைமை தாங்கி, 'இந்த ஏழைப் பாட்டாளி மக்களின் குடிசைகள் மீது யாராவது கை வைத்தால், உள்ளபடியே இங்கு ஓர் இரத்த ஆறு ஓடும்' என்று சிம்ம கர்ஜனை புரிந்தார். பிறகு அந்தக் குடிசைவாசிகள் சிலரை அழைத்துக் கொண்டு அவர்களது செலவிலேயே டாக்சி சவாரி செய்து, மந்திரிகள், அதிகாரிகள், சட்டசபை–நகரசபை அங்கத்தினர்கள், கட்சித் தலைவர்கள் ஆகியோரைப் பேட்டி கண்டு, கோயில் தர்மகர்த்தாக்களின் 'அநியாய அக்கிரமங்களை'த் தடுக்க வேண்டும் என்று விண்ணப்பித்து விட்டு வந்தார்.

'சேரிகளை ஒழிக்க வேண்டுமென நீலிக் கண்ணீர் வடிக்கும் அரசியல்வாதிகளான நாமே இப்படிச் சேரிகளை உற்பத்தி செய்வதோடு அல்லாமல் அவற்றைப் பாதுகாக்க விண்ணப்பிப்பது நியாயமா?' என்று அந்தப் பெரிய மனிதர்களில் யாரும் அவரைக் கேட்கவில்லை. குழப்பம் நிலைமை கொஞ்சம் அடங்கியது. திடீரென்று ஒரு நாள், 'அந்தக் கார்ப்பரேஷனின் நிலம் கோயில் உடைமை அல்ல, கார்ப்பொரேஷனுக்குச் சொந்தமானது' என்ற உண்மை அதிகாரிகளுக்கு எப்படியோ புலனாகி விட்டது. ஆகவே,



ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அந்த நிலத்தை இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் காலி செய்ய வேண்டுமென நகர மன்றம் நோட்டீஸ் விட்டது. இதற்கெல்லாம் பயப்பட வேண்டாம் என்று அங்கிருந்த குடிசைவாசிகளுக்குத் தைரியம் சொல்லிவிட்டு வந்தார் மருதமுத்து. ஆனால் இரண்டு மாதங்களுக்குப் பின் ஒரு நாள், ரிஸர்வ் போலீஸ் படையுடன் அதிகாரிகள் வந்து அங்கிருந்த அத்தனை குடிசைகளையும் பிரித்துப் பிடுங்கி லாரிகளில் போட்டுக் கொண்டு போய் விட்டார்கள். சட்டிபானை மூட்டை முடிச்சுக்களோடு நூறு குடும்பங்கள் நடுத் தெருவிலே நின்று கண்ணீர் விட்டுக் கதறின. உடனே உடனே பட்டு ஐம்பது, அறுபது ரூபாயில் மூங்கிலும் கீற்றோலைகளும் வாங்கிக் கட்டிய குடிசைகளை இழந்து பரிதவித்தனர் அந்த ஏழை மக்கள். 'இங்குள்ள குடிசைகள் மீது யாராவது கைவைத்தால், உள்ளபடியே ஓர் இரத்த ஆறு ஓடும்' என்று மேடையில் கர்ஜித்த மருதமுத்துவோ அன்று 'பாண்டிச்சேரி ஹைடே'யில் மிதந்து கொண்டிருந்தார்.......!

இவ்விவகாரத்தில் அவருக்குத் துணையாக இருந்து கொஞ்சம் பணமும் பார்த்திருந்த நச்சி இப்போது அதே போன்ற 'பிஸினஸை' இந்த ஏரிக்கரை மைதானத்திலும் நடத்தி ஓர் ஐந்தோ பத்தோ பெரிய நோட்டுக்களை எண்ண முடியாமற்போன துரதிர்ஷ்டத்தை நினைத்து வருந்திய அவரைக் குறும்பாக நோக்கி, "என்ன இருந்தாலும் சாருடைய மனசைப் போல் இன்னொண்ணைப் பார்க்க முடியாது! எப்போதும் அது ஏழை ஜனங்களுக்காகவே அடிக்கத் துடிச்சிகிட்டுக் கெடக்குது!" என்றவன் சட்டென்று ஓரடி முன்னால் வந்து, "சார்! ஒரு சந்தேகம்....." என்றான்.

சிந்தனையிலிருந்து விடுபட்ட மருதமுத்து, "என்னடா?" என்று தலைநிமிர்ந்தார்.

"சோசலிஸம், சோசலிஸம்னு சொல்றீங்களே, அதை யார் கண்டு பிடிச்சது?"

"உனக்கு ஏன்டா, அந்தப் பெரிய விஷயமெல்லாம்?" என்று சிரித்தார் மருதமுத்து.

"சும்மா சொல்லுங்க மச்.....ம்.....சார்! தெரிஞ்சுக்கணும்னுதான் கேட்கிறேன்."

"நீ என் சிஷ்யப்பிள்ளை அல்லவா? சரி; தெரிந்து கொள்!" என்று நகைத்த மருதமுத்து முகத்தை 'ஸீரியஸாக' வைத்துக் கொண்டு சொன்னார்: "ராபர்ட் ஓவன் என்கிற ஒரு மேனாட்டுக்காரன்தான் முதல் முதலாக அதை வெளியிட்டான்."

"நீங்க எப்படி சார், இதைத் தெரிஞ்சுக்கிட்டீங்க?" என்று மிகவும் பவ்யமாக விசாரித்தான் நச்சி.

மருதமுத்துவின் முகத்தில் இப்போது அசடு வழிந்தது. "நம்ப பலான தலைவர் ஒரு



ஒப்பனை

பாரதநாட்டில் மலர்ந்த கலை, மனித முயற்சியின் வரலாற்றிலே மகத்தான பொன்னேடாக மிளிருகிறது. கல்லிலும் பாறையிலும் தெரிகின்றது நம் பழம்பெரும் கலையின் நினைவுமுகம். காலக் கொடுமைகளையும் பருவமோதல்களையும் கடந்துமிஞ்சி, இன்று தேசப் பொருட்காட்சிசாலைகளிலே பாதுகாக்கப்பட்டுவரும் அப் பொக்கிஷங்கள், கற்பனைச் சிறகடித்த ஆக்கஎழுச்சிக்குக் கண்கூடான சான்றுகளாக நின்று, தம்மைப் பெற்ற மக்கள் சமூகத்திற்குப் பெருமைதருகின்றன.

ஒப்பனை என்றொரு சிற்பம்: (11-ம் நூற்றாண்டின்) காஜுராஹோ சிற்ப மண்டலத்திலே கொலுவிருக்கும் எழில்வடிவம்.

சிற்பக் களஞ்சியங்களுக்காக மட்டுமின்றி, கைவினைத் தொழில்களுக்காகவும் புகழ்பெற்றிருந்தது பழங்கால பாரதநாடு; நெசவுக் கலை நிபுணர்களும், சாயம் தோய்த்தோரும், வார்ப்படக் கம்மாளர்களும் அப் பழங்காலத்திலே எய்தியிருந்த கலைத்தேர்ச்சி என்றும் வியப்புக்குரியது.

தொழில் முன்னேற்ற யுகமாகிய இக்காள், அப் பழங்காலத் தொழில்வல்லுனர்களின் பண்பாட்டைத் தழுவும் ராய்ப்பூர், தற்கால எந்திர வசதிகளின் உதவியால், நேர்த்திமிக்க நெசவுகளையும் துணிவகைகளையும் உற்பத்தி செய்கின்றனர்.

கோடு போட்ட & கட்டம்போட்ட ஷர்ட்டிங்
வெண்ணிற & சாயம்தோய்த்த பாப்ளின்
ப்ரிண்டெட் லான் & வாயில்
புட்டா-லினோ
ஸூப்பர்ஃபைன் வேஷ்டி
கேபர்டின் – கோட்டிங்

SANFORIZED
REGISTERED TRADE MARK

ராய்ப்பூர் மில்ஸ் அஹமதாபாத்

TAM

கூட்டத்திலே சொன்னதைக் கேட்டு ஞாபகத்தில் வைச்சுக்கிட்டேன்'' என்றார் அவர்.

''ஆங்..... ஜுவா டுப்பு வாத்தியாரே, இது...!''

''என்னடா சொல்றே?''

''ஆமாம், சார்! இந்த வார்த்தையை வெறுமேன்னு அந்த வெள்ளைக்காரன் கண்டு பிடிச்சு இருப்பான்; ஆனா, அந்த சோஷலிசம் என்கிற தத்துவத்தை நீங்கதான் முதல்லே நடைமுறையில் செய்து காட்டினவர்னு சொல்றேன். இதை அந்தப் பவான தலைவர் மறுக்க முடியுமா?''

வியப்புடன் அவனை நிமிர்ந்து நோக்கினார் மருதமுத்து. நச்சி சிரிக்காமல் தொடர்ந்து கூறினான்: ''பின்னே இன்னு சார்? ஒரு ஏழெட்டு வருசங்களுக்கு முன்னால் நீங்க மூர்மார்க்கெட்டிலே செய்த வியாபாரத்தை நினைச்சுப் பாருங்க! சீப்பு, சோப்புப் பெட்டி, கண்ணாடி, பிளாஸ்டிக் விளையாட்டுச் சாமான்கள் இவ்வளவையும் தள்ளு வண்டியிலே பரப்பி வைச்சுக்கிட்டு, 'எதை எடுத்தாலும் ஒண்ணரையணா'ன்னு கூவிக் கூவி வித்தீங்களே, அது இன்னு இலேசுப்பட்ட விசயமா? மேலும் இல்லே, கீழும் இல்லே—எல்லாம் ஒரே நடுவுதான் என்கிற தத்துவத்தை அப்பவே நீங்க காரியத்தில் செய்து காட்டிப்பிட்டீங்களே!''

அவன் தன்னை 'அடிவெட்டு' வெட்டுகிறான் என்பதைப் புரிந்து கொண்ட மருதமுத்து உள்ளூற மனம் கொதித்தாலும், அதை வெளியே காட்டிக் கொண்டால் தமது பழைய புராணங்களைத் தாமே வாரிப் பூசிக் கொள்ள நேரிடும் என்று அஞ்சி, ''டேய், நீ பெரிய ஆளுடா!'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டார்.

பையன் டீ வாங்கிக் கொண்டு வந்தான். இருவரும் பருகினர். நச்சியின் காசில் கிடைத்த உயர் ரக சிகரெட்டைக் குஷியாகப் பற்ற வைத்தார் மருதமுத்து.

இந்தச் சமயத்துக்காகக் காத்திருந்தவன் போல் வெகு அடக்கவொடுக்கமாக அவரருகில் நெருங்கிய நச்சி தன் காதுப்புறத்தை வருடிக் கொண்டே, ''சார்.....!'' என்று மெல்ல இழுத்தான்.

''கியா, தோரே?''

''ஒரு சின்ன உதவி, சார்!''

உதவி என்ற சொல்லைக் கேட்டதுமே மருதமுத்துவின் முக பாவனை சட்டென்று ஒரு திறுசாக மாறியது. கால் மேல் கால் போட்டுக் கொண்டு கம்பீரமாக நிமிர்ந்து அவனை அலட்சியமாகப் பார்த்த அவர், ''என்ன விஷயம்?'' என்று கண்களை இடுக்கிக் கொண்டு கேட்டார்.

''வந்து...... என் தங்கச்சி ஒண்ணு இருக்குது, சார்! பேரு வேதம்மா......'' என்று நச்சி சொல்லிக் கொண்டிருக்கும் போதே மருதமுத்து விஷமச் சிரிப்புடன் குறுக்கிட்டு, ''அடேடே! உனக்குத் தங்கச்சிகூட இருக்கிறாளா?'' என்றார்.

''ஆமாம், சார்! எட்டாங் கிளாஸ் வரை படிச்சு, டீச்சர் வேலைக்கும் பாஸ் பண்ணியிருக்குது.''

''பலே, பலே! காதால் கேட்கவே இன்பமாயிருக்குது. அப்புறம்?''

''மூணு மாசத்துக்கு முன்னால் கார்ப்பொரேசன் பள்ளிக்கூடங்களிலே வேலை கேட்டு ஒரு மனு எழுதிப் போட்டுச்சாம்.''

மருதமுத்து 'ஙம்' கொட்டிக் கொண்டே நாற்காலியில் சரிந்து சாய்ந்து மெல்லக் கண்ணை மூடினார்.

''இன்னையவரை ஒண்ணும் பதிலே வரலே........''

அவர் தலையை மட்டும் ஆட்டினார்.

''அதனால் அது சம்பந்தமா நீங்க கொஞ்சம் மனசு வெச்சு......''

சாவதானமாக நிமிர்ந்து உட்கார்ந்த மருதமுத்து, ''அப்பனே! இது நீ நினைக்கிறாப்பலே அத்தனை சுலபமான காரியமில்லே. லட்சம் ரூபாய் டெண்டரைக்கூட சுலபமா காண்ட்ராக்ட் வாங்கிக் கொடுத்து விடுவேன்; ஆனால் இந்த டீச்சர் வேலை மட்டும் செய்து வைக்கிறது ரொம்பக் கஷ்டம். ஏனென்றால் அதற்குப் போட்டிகள் அதிகம். பெரிய இடங்களிலிருந்தெல்லாம் சிபாரிசுகள் வந்து நிறைநடித்துவிடும். அதனால் இதை மாத்திரம் விட்டு விட்டு வேறு எதை வேண்டுமானாலும் கேள், சாதித்துத் தருகிறேன்'' என்றார் கண்டிப்பான குரலில்.

இதெல்லாம் அவருடைய வழக்கமான 'பாவலா'ப் பேச்சு என்பது நச்சிக்குத் தெரியும். ஆகவே, உடம்பைக் கூனிக் குறுகிக் கொண்டு மிகவும் பாவபூர்வமான குழைவுடன், ''என்ன சார்! நீங்களே இப்படிச் சொல்லிப்பிட்டா அப்புறம் யாராலேதான் முடியும்? கொஞ்சம் பெரிய மனசு பண்ணி...'' என்று நெளிந்தான்.

மெல்லச் சிரித்துக் கொண்ட மருதமுத்து அலட்சியமாகச் சொன்னார். ''இங்கே பார், நச்சி! உன்னிடம் உண்மையைச் சொல்வதில் தவறில்லே. ஏனென்றால் உனக்கு எல்லாம் தெரியும். இந்த மாதிரிக் காரியங்களைச் சாதிக்கணுமின்னு இறங்கினால் அங்கங்கே சில 'வாய்'களை அடைக்க வேண்டி நேரிடும். அதற்கெல்லாம் பாவம், உன்னால் ஜேபியைத் திறந்து காட்டி, சடு கொடுத்துச் சமாளிக்க முடியுமா? எனவேதான்.....''

சட்டென்று தன் ஜேபியிலிருந்து இருபத்தைந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து மருதமுத்துவின் மடியில் வைத்துவிட்டு நிமிர்ந்த நச்சி, ''நீங்க சொல்றது வாஸ்தவந்தான், சார்! ஏதோ இப்பத்திக்கு இதை வைச்சுக்கிட்டுக் கோதாவிலே இறங்குங்க! அப்புறம்........'' என்று இழுத்தான்.


தம் மடியில் ரூபாய் நோட்டுக்கள் விழுந்ததையே அறியாதவர்போல் எங்கோ பார்த்துக் கொண்டு யோசிப்பது மாதிரி இருந்த மருதமுத்து, ''சரி; நீ நம்ம தோஸ்து! முடியாதென்று மறுக்க முடியுமா? என்றால் இயன்றவரை முயன்று பார்க்கிறேன்'' என்றார் இளநகையுடன். அதற்குள் நச்சிக்கும் தெரியாமல் அந்த ரூபாய் நோட்டுக்கள் எப்படியோ அவருடைய ஜேபிக்குள் போய் மாயமாய் மறைந்து விட்டன.

''அப்ப, நான் வரட்டுமா மச்..ம்...சார்?'' என்று ஒரு கும்பிடு போட்டுவிட்டு அங்கிருந்து கீழே இறங்கினான் நச்சி. (தொடரும்)

இருமலை நிறுத்த
வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்


சாப்பிடுங்கள் சிவப்பு லேபில்






விடாது தொடர்ந்து தொல்லை கொடுக்கும் இருமலைப் பற்றி அசிரத்தையாக இருக்கக் கூடாது. அது உடலைப் பலவீனப்படுத்தி, நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைத்து, நோய்கள் எளிதில் பீடிக்கும் நிலையை ஏற்படுத்துகிறது. வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் மூன்று விதங்களில் அளிக்கும் பலன் ஒப்பற்றது. அதிலுள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால் இருமலை குணப்படுத்துகிறது. இரும்பு சத்து, பலமளிக்கும் சத்துக்கள், மால்ட் மற்றும் ஸ்பவீன் சாரங்கள், பசியைத் தூண்டுகின்றன, இழந்த சக்தியை ஈடு செய்கின்றன, குணமான நோய் மீண்டும் வராமல் தடுக்கும் சக்தியையூட்டுகின்றன.

எல்லாக் கால நிலைகளிலும் நோய்களை எதிர்க்கும் சக்தி பெற சிவப்பு லேபிலுள்ள வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுங்கள்.





வாட்டர்பரீஸ் காம்பவுண்டில் கலந்துள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால், சுவாசக் குழாய்களில் கிருமிகளால் அபாயம் ஏற்படாமல் பாதுகாக்கின்றன. கபத்தை 'இளக்கி வெளியேற்றி சுவாசப்பைகளை சுத்தமாக வைக்கின்றன. இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கவும் மீண்டும் வராமல் தடுக்கவும் உதவுகின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு அளிக்கிறது

வார்னர் — ஹிந்துஸ்தான் லிமிடெட், பம்பாய்

JWT-WL. 2394

பாரத வீரர் மலிந்த நன்னாடு
— பாரதியார்

மங்கள தேஷ்பாண்டே

அன்புக்கு அடிமையாகலாம். ஆனால் பிறப்புரிமையை ஒடுக்கி, ஓர் இனத்தை அழிக்கக் கங்கணம் கட்டிப் பிரித்தாளும் சூழ்ச்சியால் அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் பிழைக்க வந்த ஒரு கூட்டத்துக்கு இந்த நாட்டில் பிறந்த உரிமையுள்ள மக்கள் அடிமையாவதா?—என்று வீர முழக்கம் செய்து தேச விடுதலைக்குத் தங்களை அர்ப்பணித்து இந்தத் தேசத்தில் வேரூன்றி யிருக்கும் ஆங்கில ஆட்சிக்கு எதிராக நானா சாகிப்பும், மௌல்வி அகமது ஷாவும், நக்வி கானும் கிளர்ந்தெழுந்தார்கள்.

இந்தியாவெங்கும் புரட்சி ஏற்படுத்தி, அதன் மூலம் ஆங்கில ஆட்சியைத் தகர்க்கப் பரந்த திட்டமிட்டு இதை வெகு ரகசியமாகச் செயல்படுத்தினார்கள் மூவரும். ஒவ்வோர் ஊருக்கும் மாறு வேடத்தில் சென்று மக்கள் மத்தியில் கனல் கக்கும் பிரசாரம் செய்து, அவர்களிடையே விடுதலை உணர்ச்சியும் தேசபக்தியும் பரவச் செய்தார்கள்.

இந்த ரகசிய இயக்கம் பிரமாதமாக உருவாகி வருகையில் மருந்துக் குவியலில் தீப்பொறி விழுந்தாற்போல் பசு, பன்றிக் கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்களை உபயோகிக்கும்படி வங்காளத்தில் சிப்பாய்களை வற்புறுத்தினர். முதன் முதலில் 19வது பிரிவுப் படையில் இந்தப் பரிசோதனையை நடத்திப் பார்க்கத் தீர்மானித்தார்கள். அச்சமயம் வங்காளத்தில் முகாமிட்டிருந்த படைகளுள் 34வது பிரிவுப் படை சுதந்திரப் புரட்சியை ஆரம்பிக்கத் துடித்துக் கொண்டிருந்தது. அப்படை பராக்பூரிலிருந்ததால் கல்கத்தாவுக்கு அருகில் தங்கியிருந்த அலி நக்வி கான், அதைச் சேர்ந்த சகல சிப்பாய்களிடையும் தேச விடுதலை உணர்ச்சியைத் தூண்டி அவர்கள் எல்லோரும் ஒற்றுமையுடன் புரட்சியில் இறங்கப் பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளும்படி செய்திருந்தார். அந்தப் பிரசாரம் பலமாகப் பரவியது. அதன் காரணமாக அப்படையினர் ஆங்கில அதிகாரிகளின் அக்கிரமமான கட்டளைக்குக் கீழ்ப்படிய, மத சம்பிரதாயத்துக்கு விரோதமாக அக்கொழுப்புக்களைத் தொடப் பகிரங்கமாக மறுத்ததுடன், அவசியமானால் இந்த அநீதியை எதிர்த்து நிற்க வாளை உருவவும் தாங்கள் தயங்கப் போவதில்லை என்பதை உணர்ந்துகொள்ளும்படி செய்தனர். சிப்பாய்கள் ஏகோபித்துக் கிளர்ந்தெழ ஒரு தினத்தைக் குறிப்பிடும்படி பராக்பூரிலிருந்து பல இடங்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன. ஆனால் வீரன் மங்கள பாண்டேயின் வாள் மாத்திரம் உறைக்குள் செல்ல மறுத்து விட்டது.

மங்கள பாண்டே பிராமண குலத்தில் பிறந்தவர் எனினும் க்ஷத்திரிய தர்மத்தை ஏற்றுத் திறமுள்ள வீரராகத் திகழ்ந்தார். மதத்தை உயிரினும் மேலாகப் போற்றினார். தம் கண் முன்னால் தம் சகோதரர்கள் [illegible] அவமதிக்கப்படுவதை அவரால் சகிக்க முடியவில்லை.

பாண்டேயின் ஆவேச நிலையைக் கண்ட சார்ஜண்ட் மேஜரான ஹியூஸன் என்பவன் அவரைக் கைது செய்யும்படி சிப்பாய்களுக்கு உத்தரவிட்டான். சிப்பாய்கள் அவனது உத்தரவைப் பொருட்படுத்தாது, தங்கள் சகோதரனின் ஆவேச உணர்ச்சியில் கிளர்ந்தெழுந்து நின்றனர். இச்சமயம் பாண்டேயின் துப்பாக்கியிலிருந்து சீறிச் சென்ற ஒரு தோட்டா ஹியூஸன்மீது பாய்ந்து அவனைப் பிணமாக்கியது. இந்த அபாய நிலைமையைக் கேள்வியுற்ற மற்றோர் அதிகாரியான லெப்டினன்ட் பாக் அவ்விடத்தை நோக்கிக் குதிரைமீது வந்துகொண்டிருக்கையில், பாண்டேயின் துப்பாக்கியிலிருந்து சென்ற மற்றொரு தோட்டா குதிரையின் மீது பாய்ந்து குதிரையையும் அந்த அதிகாரியையும் கீழே விழுந்து உருளும்படி செய்தது. பாண்டே மீண்டும் தன் துப்பாக்கியைக் கெட்டிக்கையில், லெப்டினன்ட் பாக் எழுந்து பாண்டேயை நோக்கிக் குறி வைத்தான்.

தம்மை நோக்கி நிற்கும் ஆபத்தைத் துச்சமாக மதித்துச் சிறிதும் கலங்காது தம் வாளை உருவினார் பாண்டே. பாக் வைத்த குறி தவறிவிட்டது. வேறு வழியின்றி அவனும் வாளை எடுத்தான். பாண்டே வெகு துரிதமாகப் பாய்ந்து அவனைக் கீழே வீழ்த்தினார். இச்சமயம் மற்றொரு வெள்ளை அதிகாரி பாண்டேயை நோக்கிக் குறி வைக்கையில், விடுதலை ஆவேசம் கொண்ட ஒரு சிப்பாய் தன் துப்பாக்கியின் அடிக் கட்டையால் அவன் மண்டையைப் பிளந்தான். உடனே ''மங்கள பாண்டேயைத் தொடாதே'' என்ற கோஷம் சிப்பாய்களிடமிருந்து வானளாவியது. பிறகு கர்னல் வீலர் என்பவன் அங்கு வந்து பாண்டேயைக் கைது செய்யும்படி உத்தரவிட்டான்.

''சுதந்திரக் கொடியை உயர்த்திப்பிடிக்கும் எங்கள் சகோதரரைத் தொட மாட்டோம்'' என்று ஒரே குரலாகச் சிப்பாய்கள் கோஷித்தனர். வெள்ளை அதிகாரிகளின் உதிரம் பெருக்கெடுத்து ஓடுவதையும் சிப்பாய்களின் ஆவேசத்தையும் கண்ட வீலர் மிரண்டு ஜெனரல் பங்களாவை நோக்கி ஓட்டம் பிடித்தான்.

தலைக்கு மேல் வெள்ளம் போகும் அபாயத்தைக் கேள்வியுற்ற ஜெனரல் ஹியர்ஸே பல ஆங்கிலச் சிப்பாய்களுடன் அங்கு வந்து சேர்ந்தான்.

ஆங்கிலேயர்களின் தொகை அதிகமாகிவிட்டதால் இனி அவர்கள் கையில் சிக்குவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை அறிந்த பாண்டே, விரோதிகளின் கையில் வீழ்வதைக் காட்டிலும் வீர மரணமடைவதே சிறந்ததென்று துப்பாக்கியைத் தம் நெஞ்சுக்கு நேராகத் திருப்பித் தம்மைத் தாமே சுட்டுக்கொண்டார். படுகாயமடைந்த பாண்டேயின் உடல் மறுகணம் பூமியில் துவண்டு விழுந்தது. உடனே அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். பாண்டேயின் தீரத்தைக் கண்டு திகைத்துப்போன வெள்ளை அதிகாரிகள் ஆழ்ந்த சிந்தனையுடன் தங்கள் கூடாரங்களுக்குச் சென்றனர்.

1857, மார்ச் 29ந் தேதி நிகழ்ந்த இச்சம்பவம் குறித்து ஒரு ராணுவ சபை முன்னிலையில் பாண்டே விசாரிக்கப்பட்டார். விசாரணையின்போது அவரிடமிருந்து இதர புரட்சித் தலைவர்களின் பெயர்களைத் தெரிந்துகொள்வதற்கு அதிகாரிகள் பெரு முயற்சி செய்தனர். ஆனால் அவர்களின் சாகச வலையில் பாண்டே விழவில்லை. இப்புனித தேசபக்தருக்கு இறுதியில் தூக்குத்தண்டனை விதித்து ஏப்ரல் 8ந் தேதி தண்டனையை நிறைவேற்றுவதென்று தீர்மானித்தனர் வெள்ளை ஆட்சியினர். நாட்டிற்காகத் தம் இன்னுயிரைக் காவுகொடுக்க நிற்கும் அவ்வீரரைத் தூக்கிலிட பராக்பூரில் ஓர் ஆள்கூடக் கிடைக்கவில்லை. மக்களுக்கு அவர் மேல் அவ்வளவு பக்தி. கடைசியில் தண்டனையை நிறைவேற்றுவதற்குக் கல்கத்தாவிலிருந்து நான்கு கூலிகளைக் கொண்டுவந்தனர். ஏப்ரல் 8ந் தேதி காலையில் பாண்டே ஆயுதம் தாங்கிய காவலர்கள் சூழத் தூக்குமேடைக்குப் போனார். சிறிதும் அஞ்சாமல் செல்லும் அவரின் உணர்ச்சி மிக்க முகம் அவருள் கொதிக்கும் உக்கிரத்தையும், உறுதிப்பாட்டையும், உத்வேகத்தையும் தெளிவாகக் காட்டியது. மற்றப் புரட்சிக்காரர்களின் பெயர்களைக் கூறினால் மன்னித்து விடுதலை செய்வதாக ஆசை காட்டினர் ஆட்சியினர்.

மங்கள தேஷ்பாண்டே ஒரு மானிடப் பெண் பெற்றெடுத்த வெறும் மனிதன் அல்ல. அவர் பாரத அன்னை பெற்றெடுத்துப் பாலூட்டி வளர்த்த இந்நாட்டின் வீரமகன். அவரா உயிரை இச்சிப்பவர்?

'அன்னை பூமிக்கு என் உயிரைத் தத்தம் செய்வதில் பூரண மகிழ்ச்சி அடைகிறேன்' என்று கர்ஜித்தார். பின் தாமே சுருக்கிட்டுக்கொண்டு தூக்கில்தொங்கினார்.

1857ம் வருஷ சுதந்திர யுத்தத்தில் முதன் முதலாகத் தம் உயிரை அர்ப்பணம் செய்தார் மங்கள தேஷ்பாண்டே.

— கர்ணன்

உயிருக்கு உயிர்

கோமதி நாகராஜன்

தோட்டத்தில் போட்டிருந்த பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்தவாறு, தூரத்தே விளையாடிக் கொண்டிருந்த சிறுவனை இமை கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தார் டாக்டர் ஷண்முகம். மற்றொரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அருகே உட்கார்ந்த நண்பரைக்கூடக் கவனிக்கவில்லை.

"எதை அத்தனை சுவாரஸ்யமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறாய் ஷண்முகம்?" என்று வினவினார். குரல் கேட்டுச் சட்டென்று திரும்பி நண்பரை நோக்கினார் ஷண்முகம்.

"எல்லாம் உன் மகனுடைய விளையாட்டைத்தான் ரசித்துக் கொண்டிருந்தேன்."

"வந்து வெகு நேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறாயா என்ன?"

"இல்லையே. ஐந்து நாற்பதுக்குத்தான் வந்தேன். நீ இன்னமும் கோர்ட்டிலிருந்து வரவில்லை என்று தெரிவிக்கவும், இப்படியே தோட்டத்தில் உட்கார்ந்து விட்டேன்" என்றார். இன்னமும் தாம் ரசித்த விளையாட்டுக் காட்சியிலிருந்து மனம் விடுபடாமலே.

"மணி ஆறேகால் ஆகிறதே."

"அடடே, நான் வந்து அரை மணி நேரம் ஆகிவிட்டதா? நேரம் போனதே தெரியவில்லையே?"

"அத்தனை சுவாரஸ்யம் உனக்குச் சிறுபிள்ளை விளையாட்டில்!"

"உன் மகன் விளையாட்டா விளையாடுகிறான்? சிக்கல் எடுக்கிறான் நூல்கண்டிலிருந்து. நாயின் கழுத்தில் கட்டி அதை முறையாகப் பல பக்கங்களில் ஓட விட்டும் குதிக்க விட்டும் அவன் நூலைச் சுற்றும் வேடிக்கையைப் பாரேன்!" என்றார் டாக்டர் பெருமிதத்துடன்.

"அவனுக்கு என்ன வேலை? எந்த விதத்திலாவது பொழுதைக் கழிக்க வேண்டுமே!" என்று அசிரத்தையுடன் சொன்ன நண்பரின் முகத்தை நோக்கினார் ஷண்முகம். "நீ ஏன் இவ்வளவு களைத்துக் காணப்படுகிறாய்?"

"வழக்கு விசாரணைகள் முடிந்து வெளியேறுவதற்குள் ஐம்புலன்களும் அசந்து போய் விடுகின்றன....என்ன சிரிக்கிறாய்?"

"ஒன்றுமில்லை. கண்களுக்குப் புலப்படாத எதிரிகளோடு போரிட்டு உயிரை மீட்டுக் கொடுக்கிற எங்கள் தொழிலிலும் களைப்பு! உயிரை எடுக்கின்ற உன்னுடைய தொழிலிலும் களைப்பு! ஒப்பிட்டுப் பார்த்தால் வேடிக்கையாக இல்லை?" என்று புன்னகை செய்தார் ஷண்முகம்.

"நண்பன் என்ற முறையில் என் சொந்த விஷயத்தில் எவ்வளவு வேண்டுமானாலும் சொல். பொறுத்துக் கொள்கிறேன். என் தொழில், கடமை பற்றி மட்டும் பேசாதே. இந்தப் பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்திருக்கும்வரையில் நான் உன் நண்பன்... ஆனால் அங்கே நான் நியாயத்தின் பிரதிநிதியான நீதிபதி என்பதை மறக்க வேண்டாம்."

"இதற்காகவா நீ இவ்வளவு கோபிக்கிறாய்...?"

"உயிரை எடுக்கும் தொழில் என்று நீ குறிப்பிடலாமா?"

"இதுவரை எத்தனை வழக்கு விசாரணைகளுக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கியிருக்கிறாய்? சென்ற வார வழக்கின் முடிவு கூட மரண தண்டனை என்று படித்ததாக ஞாபகத்துக்கு வரவும்...."

"பார்த்திபன் வழக்கைச் சொல்கிறாயா? வழக்கின் விசாரணை முழுதும் நீ படித்திருக்க மாட்டாய். தீர்ப்பை மட்டும் படித்துவிட்டு வந்து பழிக்காதே."

"பார்த்திபன் நிரபராதி என்பது நான் அறிந்த உண்மை. நிரபராதிக்கு மரண தண்டனை — சரியான தீர்ப்பு என்று என்னை நம்பச் சொல்கிறாயா விநாயகம்?"

"ஏதோ நான் தனிப்பட நின்று தீர்ப்பு வழங்கியது போலல்லவா பேசுகிறாய்? சந்தர்ப்பங்களும், சாட்சியங்களும் அவன் குற்றவாளி என்பதை அசைக்க முடியாமல் நிரூபிக்கின்றன."

"சாட்சிகள் என்பது என்ன? கூலி தந்து கூண்டிலே கொண்டு வந்து நிறுத்திப் பேச வைக்கும் ஒரு நாடகம்தானே?"

"அந்தக் கூலிக் கூட்டங்களை எதிர்க் கட்சியும் பயன்படுத்திக் கொள்ளலாமல்லவா, நிரூபிக்க வழியிருந்தால்?"

"இருக்கட்டுமே! பத்து நிமிடங்கள் கூண்டிலே ஏறிக் கூறும் சாட்சிகளின் வாக்கு மூலம் உனக்குப் பெரிதாக இருக்கிறது. பதினேழு வருடங்கள் அந்தப் பார்த்திபனோடு பழகியவன் நான்.... நான் கூறுவதையும் கொஞ்சம் எடுத்துச் சிந்திக்கலாமே."

"இதை நீ முறையான இடத்திலே காட்டி நிரூபித்திருந்தால் ஏற்றுக்கொள்ளப்படும்."

"விஷயத்தைக் கேள். இந்தப் பார்த்திபன் வௌவால் மேலே பறந்தால் கூட அலறிக்கொண்டு ஓடுவான். இப்படிப்பட்ட பயந்தாங்கொள்ளி அரிவாளை எடுத்து வெட்டிவிட்டு, பதினைந்து சாட்சிகள் கொட்டுக் கொட்டென்று பார்த்துக் குறித்துக்கொள்ளும்படி ஓடுகிறான் என்றால் யாரால் நம்ப முடியும்?"

"ஷண்முகம்! உனக்கு இந்த வழியில் அநுபவம் இல்லாததனால்தான் இப்படிச் சொல்கிறாய்! பூனையின் அரவம் கேட்டு நடுங்கும் கோழைகள்கூடக் கண நேரத்

தூண்டுதலும் உணர்ச்சிக் குழப்பங்களும் ஏற்படும்பொழுது அஞ்சாமல் பல கொலைகளைச் செய்திருக்கிறார்கள்...... அவர்களை உனக்கு நான் நேரிலே காட்ட முடியும்.''

''குற்றவாளிகள் உலகிலே மூழ்கி நம் பார்வையும் மஞ்சள்காமாலை கொண்டோர் பார்வையாகி விடுகிறது.....''

'' வேண்டுமென்றே விதண்டாவாதம் செய்கிறாயா?.... சரி, காட்சிகளை விட்டுத் தள்ளு...... இதோ பார்த்திபனேதான் கொலை செய்ததாக ஒப்புக் கொண்டிருக்கிறான்..... குற்றவாளியே நேரில் ஒப்புக் கொள்ளும் பொழுது மற்றவர்கள் நாக்குக்கு அங்கு வேலையில்லை...... முக்கியத்துவமும் இல்லை.''

''அவன் குற்றம் செய்ததாகவே இருக்கட்டும்.... தண்டனையின் தரத்தைத் தளர்த்தி விருக்கலாமல்லவா ?''


''உயிருக்கு உயிர் என்பதுதான் நீதி. உயிருக்கு ஊறு செய்பவர்களை இரக்கம் காட்டி விட்டால், அடுத்து எதிர்ப்படும் உயிர்களுக்கு அமைதியிராது.''

''அப்படியானால் விடுவிக்கப்பட்ட குற்றவாளிக்குக் கொலை செய்வது தண்ணீர் பட்ட பாடு என்கிறாயா?'' டாக்டரின் கண்கள் சிவந்து அனலைப் பொழிந்தன.

''அப்படி அர்த்தம் இல்லை. அவன் முன் அடுத்து எதிர்ப்படுபவர்களுக்கு நிம்மதி இருக்காது..... தவிர இது ஜூரர்கள் வழக்கின் போக்கைக் கடைசி வரை ஆராய்ந்து, கலந்து, ஒருமனதாகக் கூறும் முடிவை ஒட்டியதே தீர்ப்பு.....இதை நீ சற்றுச் சிந்திக்க வேண்டும்.'' நண்பர்கள் இருவரும் வழக்கத்துக்கு விரோதமாக உரத்த குரலில் விவாதிப்பதை வியப்போடு உற்று நோக்கிக் கொண்டிருந்த சிறுவனைக் கண்டதும், ''உன் பையன் எப்படி இருக்கிறான் பார்! நாளைக்கே குட்டி பதினாறடி தாண்டும் போலிருக்கிறதே'' என்றவாறு எழுந்தார் டாக்டர். ''எப்படி வந்தாலும் சரி...அப்பாவைப் போல் நண்பனை பழிக்கும் இந்த உத்தியோகத்துக்கு வந்து விடக்கூடாதப்பா'' என்ற விநாயகத்தைக் கூர்ந்து நோக்கினார் ஷண்முகம்.

''ஓ...... நோ..... நோ..... டோண்ட் பாதர் அபௌட் திஸ். டேக் இட் ஈஸி....'' என்று சிரித்தபடி கூறி விடைபெற்றுக் கொண்டார். தோட்டத்தில் பசிய சூழ்நிலையில் அவரது நெடிய உருவம் கலந்து மறைந்தது.

சுற்றிலும் ஒலித்த உயிர்த் துடிப்புக்களையும், வேதனைப் பிரலாபங்களையும் கடந்து, மெல்லக் கண் திறந்தார் விநாயகம். நெட்டுயிர்ப்பைத் தொடர்ந்து பார்வை டாக்டர் ஷண்முகத்தின் மீது பதிந்தது.



''நல்ல நினைவு வருகையில் இன்றுதான் உன்னை நேரில் பார்க்க முடிகிறது, ஷண்முகம்!'' என்றார் ஆயாசத்துடன்.

''உஸ்...... நீ இப்பொழுது என்னுடைய பேஷண்ட்...... அதிகமாய்ப் பேசக் கூடாது'' என்று அடக்கினார் ஷண்முகம்.

''புறப்படும் பொழுது கோதையிடம் இதைத்தான் சொன்னேன். ஆபரேஷன் என்று கேட்கவுமே கண்ணீரைக் கொட்டினாள். 'எதற்காகப் பயப்படுகிறாய் கோதை? என் உயிரையே நண்பனின் கையில் ஒப்படைக்கப் போகிறேன். அவன் பத்திரமாக என்னை உன்னிடம் சேர்த்து விடுவான்' என்று சொல்லிச் சமாதானப்படுத்தி விட்டு வந்தேன்'' என்றார் உலகத்து நம்பிக்கை அனைத்தும் முகத்திலே ஒளிர.

''டேக் ரெஸ்ட்...... நாளைக்கு ஆபரேஷன்'' என்றபடி கேஸ் ஷீட்டில் சில விவரங்களைக் குறித்து விட்டு அங்கிருந்து அகன்றார் டாக்டர்.

இதுவரையில் நெஞ்சிலே ஒட்டிக் கொண்டிருந்த தைரியம் ஆபரேஷன் தியேட்டருக்குள் நுழையவும் காய்ந்த சருகுகள் போல் உதிர, கண்களில் நீர் துளிர்க்க நண்பரை ஏறிட்டு நோக்கினார் விநாயகம். அவரைச் சிறிதும் கவனிக்காது கொதிக்கும் ஆயுதங்களையும், மற்றும் நர்ஸ் தயார் செய்து கொண்டிருந்த உபகரணங்களையும் மேற்பார்த்துக் கொண்டிருந்தார் டாக்டர். மின் விசிறியின் பிரம்மாண்ட நிழல் சுழன்று முகத்திலே கோலமிட்டுக் கொண்டிருந்தது.

''நர்ஸ்..... நான் கூப்பிடும் வரை சற்று வெளியே இருக்கிறாயா?'' உத்தரவு பிறந்த விநாடியே வேகமாக வெளியேறினாள் நர்ஸ்.

''விநாயகம்! பார்த்திபன் விஷயமாக ஒரு நாள் உன்னிடம் வாதாடினேன். ஞாபகம் இருக்கிறதா?'' ஊசி மருந்தை உள்ளே ஏற்றியபடி வினவினார் ஷண்முகம்.

விநாயகத்தின் முகம் அந்த நிலையிலும் இருண்டு கறுத்தது. ''இப்பொழுது எதற்கு அதை நினைவுபடுத்துகிறாய்?''

''நினைவுபடுத்த வேண்டியது என்னுடைய முறை. பார்த்திபன் நிரபராதி என்று எடுத்துச் சொல்லியும், சட்டத்தின் பெயரால் அவனைத் தண்டித்து விட்டீர்கள்....''

''உம்......''

''தண்டனை விஷயத்தில்கூட உங்கள் கடுமையைக் குறைக்கவில்லை...... உயிருக்கு உயிர் என்று வாதாடினாய்......''

''அது நீதியின் தீர்ப்பு!''

''தெரிந்து கொண்டேன். பார்த்திபன் நிரபராதி என்பது எனக்குத் தெரியும். ஒரு நிரபராதிக்கு நீதியின் தீர்ப்பு மரண தண்டனை என்பது சட்டமானால்..... நானறிய நீ ஒரு குற்றவாளிதான்!''

''ஷண்முகம்! நீ என்ன சொல்கிறாய்?''

''ஆம்...... ஓர் உயிரை அழித்தவன்தான் உன் தீர்ப்பின் மூலமாக..... அந்தக் கோணத்தில் பார்க்கும்பொழுது நீ ஒரு கொலைகாரன் என்கிறேன் நான்.'' கொதிக்கும் ஆயுதங்கள் ஆவியைக் கக்கும் ஓசையை உள்ளடக்கியபடி மின் விசிறி மேலே சுழன்றது.

''இந்தச் சமயத்தில் இது என்ன விவாதம், ஷண்முகம் ?'' மன அதிர்ச்சியில் குரல் வலிமை இழந்து ஒலித்தது.

''ஒன்றுமில்லை..... இப்பொழுது உன் உயிர் என் கையில் இருக்கிறது.... என்று...''

''ஷண்முகம்..... ஷண்முகம்.....!''

''நர்ஸ், கம் இன் அண்ட் கெட் ரெடி. பார் த ஆபரேஷன்.''

மூக்கருகே வந்து தாக்கிய மருந்தின் நெடி புலன்கள் வழியே பாய்ந்து அவற்றைத் தன்னுள் ஆகிணப்படுத்திக் கொண்டது.

''டாக்டர் பேஷண்ட் பல்ஸைப்பாருங்க.''

''சில விநாடிகளில் சரியாகி விடும்....லெட் அஸ் ப்ரொஸீட்.''

விநாயகம்! காலையில்தான் ஆபரேஷன் முடிந்திருக்கிறது. பையனோடு மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருந்தால் என்ன ஆவது? அசத்தம் ?'' என்று செல்லமாகக் கடிந்தபடி உள்ளே வந்த டாக்டருக்கு வணக்கம் தெரிவித்தார் விநாயகம். குறுகுறுவென்று அவர் பார்வை தன்னைச் சுற்றிப் படர்வதை உணர்ந்த ஷண்முகம், ''என்ன அப்படிப் பார்க்கிறாய் விநாயகம்?'' என்றார்.

''ஒன்றுமில்லை, ஆபரேஷனுக்கு முன்பு சில விநாடிகள் ஒரு புது மனிதனைத் தோற்றுவித்தாயே, அது உண்மையாக இருக்குமா? அல்லது மயக்க நிலையில் அரைகுறைச் சிந்தனையின் தெளிவற்ற தோற்றங்களா? என்ற சந்தேகம் உண்டாயிற்று.''

''ஓ, அதைச் சொல்கிறாயா? அது ஒரு சிறு சோதனை..... அவ்வளவுதான்!''

''அப்பா.... ஒருசில விநாடிகளில் உயிர்ப் பீதியின் எல்லையிலே..... அப்பப்பா?''

''ஆம்....... அதற்காகத்தான் அந்த அதிர்ச்சி வைத்தியம். குற்றவாளியே ஆனாலும் அவனுக்கும் மரண பீதியும் உயிர் ஆசையும் உண்டு.....தண்டனை என்ற பெயரில் விதியின் முடிவு நெருங்கிக் கொண்டிருக்கும்பொழுது ஏற்படும் உணர்வை, கொஞ்சம் இஞ்செக்ட் செய்து பார்த்தேன். அவ்வளவே.......''

''அதற்காகவா..... அப்படி......?''

''தட் இஸ் ஆல் ரைட். பர்கிவ் அண்ட் பர்கெட் எவரி திங்..... உடம்பை அலட்டிக் கொள்ளாமல் தூங்கு....நான் வருகிறேன்.'' மலையின் மீது வெண்மையான மேகங்கள் இறங்கி வர்ஷித்தது போன்ற அவரது சொற்களால் விநாயகத்தின் உள்ளம் தண்மையுற்றுக் குளிர்ந்தது.

''டாடி, இங்கே யார் வந்திருக்கிறார்கள், பாரேன்'' என்று குதித்துக் கொண்டு அருகே வந்த பையனின் கரங்களைப் பற்றியபடி வெளியே வந்தார் விநாயகம்.

கன்னத்தில் கையூன்றியபடி உட்கார்ந்து கொண்டிருந்த நண்பரைக் கண்டதும், அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''என்ன ஷண்முகம்! ஏன் இப்படிக் கலங்கிப் போய் உட்கார்ந்திருக்கிறாய்?'' என்று கேட்டார் விநாயகம்.

''உன்னிடம் ஒரு விஷயம் கேட்டுப் போகலாமென்று.''



கால்கேட் டூத் பிரஷ்
மேலும் துப்புரவாக உங்கள்
பற்களை சுத்தம் செய்யும்படி
அமைக்கப்பட்டிருக்கிறது!
COLGATE
NYLON TOOTH BRUSH
ADULT
HARD
ஸ்டெரிலைஸ் செய்யப்பட்ட நைலான் பிரிஸ்ஸில்கள் உறுதியாகப் பொருத்தப்பட்ட படியால் அதிக நாள் உழைக்கக்கூடியது!
புதியது
மிகவும்
கவர்ச்சியானது !!
கால்கேட்
சூபர் டீலக்ஸ்
டூத் பிரஷ்
வாய் துர்நாற்றத்தை அகற்ற கால்கேட் காட்டும் வழி
TBG-15 TAM



சக்தியும், வளர்ச்சியும் அளிக்கும்!
Bournvita
இதில் அடங்கியது
பால்
கோகோ.
சர்க்கரை
மால்ட்
காட்பரீஸ்
போர்ன்விடா
BENSONS/I-CF.24 TM

''என்ன விசேஷம்?''

''இன்று விடுதியில் ஓர் உயிர் போய்விட்டது.''

''ஒரு டாக்டரின் வாழ்க்கையில் இதுபோல எத்தனையோ அநுபவங்கள்? இதற்குப் போய் உடைந்து விட்டாய்?''

''விநாயகம், இந்த அஜாக்கிரதையினால்தான் இந்த உயிர் நஷ்டம்.....''

''ஏன்? என்ன நடந்தது?''

''நான் இரவு படுக்கும் பொழுது தூக்க மாத்திரை களை வழக்கத்தை விடக் கூடுதலாகச் சாப்பிட்டிருக்கிறேன் போலிருக்கிறது. இன்றைக்கு இரண்டு மூன்று ஆபரேஷன் கேஸ்கள்...எல்லாம் ஸீரியஸ் டைப்—தியேட்டருக்குள் புகும் வரையில் 'ட்ரௌஸினெஸ்' என்னை விட்டுப் போகவில்லை. மனத்தின் அரை விழிப்பு நிலையில் நான் ஏதோ தவறு செய்திருக்கிறேன். வார்டில் கொண்டு போட்ட பேஷண்ட் அலறினான். உடன் எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தோம்...முக்கியமான ரத்தக் குழாய் ஒன்று அறுபட்டு ரத்தம் பெருகிக் கொண்டிருந்தது.''

''அப்புறம்.......?''

''உடனடியாகச் சிகிச்சை ஆரம்பிப்பதற்கு முன்பு கதை முடிந்து விட்டது. என் கவனக் குறைவால் ஒருவன் வாழ்க்கையே முடிந்து விட்டது. என்ன சிரிக்கிறாய்?''

''தினமும் நூறு பேருக்கு உயிர் கொடுக்கிறாய். ஒன்றிரண்டு சொல்லிக் கொள்ளாமலே கிளம்பி விடுகின்றன. கடைசிவரையில் உபாதையிலிருந்து மீட்கப் போராடும் டாக்டர் அதற்கு எப்படிப் பொறுப்பாக முடியும்?'' என்று கேட்டார் விநாயகம்.

''இதோ பார், விநாயகம்! ஒரு நாள் உன் வாயால் குற்றவாளியே நேரில் ஒப்புக் கொண்டால் யாரும் அசைக்க முடியாது என்று சொன்னாயல்லவா?''

''அது கோர்ட்டில்.''

''உன் உயிரை மீட்டுக் கொடுத்தவன் என்பதனால் சுயநலம் உன் கண்ணை மறைக்கிறது. அதனால் இதுபோலத் தட்டிக் கழிக்கும் பதிலைக் கூறுகிறாய்'' என்று உஷ்ணமாகக் கூறிய நண்பரருகே நெருங்கி உட்கார்ந்தார் விநாயகம்.

''டாடி.....டாடி..... இங்கே வந்து பாரேன்.... என் மீனுவுக்கு மூச்சே போய் விட்டது.... செத்துப் போச்சு டாடி.....'' என்ற பையனின் கூக்குரலைக் கேட்டுக் கூடத்துப் பக்கம் விரைந்தார் விநாயகம். டாக்டரும் தொடர்ந்து சென்றார்.

அழுக்குத் துணிக் குவியலின் மீது சிறுவனின் பூனைக் குட்டி செத்து விறைத்துக் கிடந்தது. டாக்டர் குனிந்து அதைப் புரட்டிப் பார்த்துக் கைகளை விரித்தார். ''ஏதோ விஷந் தீண்டியிருக்க வேண்டும்'' என்று குன் கொட்டினார்.



''பக்தா! உனக்கு என்ன வரம் வேண்டும்.''
''ஓம் மரத்தை வெட்ட எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு. தயவு செய்து உங்க சக்கரத்தாலே அதை அறுத்துக் கொடுத்துடுங்க.''

துணிக் குவியலைக் கைத்தடியால் புரட்டினார் ஜட்ஜ். பெரிய கருந் தேள் ஒன்று ஊர்ந்து சென்றது. சிறுவன் அதைச் சுட்டிக் காட்டி அலறினான். அடுத்த நிமிடம் கைத்தடியின் அடியே அதன் உடல் நசுங்குண்டது. கடைசிப் பலத்த அடியில் உயிரையும் விட்டு. வேலைக்காரனைக் கூப்பிட்டு இரண்டையும் அகற்றச் செய்துவிட்டு, இருவரும் தோட்டத்திலே வந்து அமர்ந்தனர்.

''டாடி..... மீனு ஏன் செத்துப் போச்சு?''

''தேள் கொட்டிடுச்சுடா கண்ணே!''

''தேள் ஏன் செத்தது?''

''நான் அடிச்சுக் கொன்றேன்.''

''நீ ஏன் அடிச்சுக் கொன்னே?''

''அது பூனையைக் கொட்டியதனால்.''

''பூனையைக் கொட்டிச்சு..... அது செத்துப் போச்சு..... அதனாலே அதைக் கொன்னியா?''

''ஆமாம்டா, கண்ணே!''

''பூனையைக் கொன்ன தேளை நீ கொன்னுயே...... அப்போ தேளைக் கொன்ற உன்னை யாரு கொல்லுவாங்க டாடி?''

நண்பர்கள் பிரமித்து வாயடைத்து நிற்கையில் கோதை அருகே வந்தாள். அவள் முகத்திலே கோபம் கூத்தாடியது.

''ஏய், பாஸ்கர், என்ன கூத்து நடக்குது இங்கே?'' என்று அதட்டினாள். ''உன் பையன் என்ன சொல்கிறான் கேள்'' என்ற கணவனை 'எனக்குத் தெரியும்' என்ற பாவனையில் அடக்கி விழித்தாள். ''இம் லேம்மா, டாடி அன்னிக்கு டாக்டர் மாமா கிட்டே சொல்லிக்கிட்டிருந்தாரம்மா..... உயிரை அழித்தால் அந்த உயிரை எடுக்கணும் மின்னு..... அதுக்காக..... அதுக்காக—'' சொல்ல அருகே இழுத்துக் கொண்ட தாயின் அணைப்புக்குள் மீதி வார்த்தைகள் சிதறப் பட்டு விட்டன.

''இதோ பாருடா பாஸ்கர்..... ஒவ்வோர் உயிருக்கும் முடிவை வைச்சவன் சாமிதான்..... எந்த உயிர் போவதற்கும் யாரும் காரணமில்லை! ஆனால் பக்கத்திலே இருப்பவனை அவர் கருவியாக்கிக் கொள்கிறார்; இப்போ அப்பா தேளை அடிக்கக் கம்பைத் தூக்கியது போல.... இதுதான்டா உண்மை. மற்றதெல்லாம் நாமாகக் கொள்ளும் சட்டம்தான்'' என்றாள் புன்னகையோடு.

அங்கு வீற்றிருந்த மூவரின் பார்வைகளுக்கும் அவள் ஒருத்தியே இலக்கானாள். மூன்று சந்திப்புகளில் தீர்க்கப்படாத ஒரு வாதத்தை ஒரு பெண், ஒரு குழந்தை உள்ளத்திலேகூடப் பதியும்படி எத்துணை அழகாக எடுத்துரைக்கிறாள்? அந்தத் தாய்க் கோலத்தை மனத்திலே ஏற்றியபடி நண்பரிடம் விடைபெற்றுக் கொண்டு எழுந்தார் டாக்டர்.

கரப்பு, மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவற்றை... தப்பாமல் கொல்லுவது:

புதிய

ஃப்ளிட்

உடனடிப் பிரயோகப்

பவுடர்


அமுக்குத் தூவல் பெட்டியில் வருகிறது. தூவ இலகுவானது, பயன்மிக்கது.



கரப்பு, மூட்டைப்பூச்சி, பிறவகை ஊரு மினப் பூச்சிகள் அனைத்தையும் ஒழிப்பதற்கென்றே தனிமுறைப்படி தயாரிக்கப் பட்டுள்ள ஃப்ளிட் பவுடர், தப்பாமல் கொல்கிறது. நேரடியாகத் தூவப்படும் பூச்சிகளை மட்டுமின்றி தூவிய இடத்தை நெடுநேரம் கழித்து அண்டும் பூச்சிகளை யும் பலிவாங்கி விடுகிறது. வேண்டும் போது பயன்படுத்தக்கூடிய நிலையிலுள்ளது ஃப்ளிட் பவுடர்... இலகுவாகத் தூவிப் பயன்காண வாகான அமுக்குத் தூவல் பெட்டியில் வரும் பூச்சிக் கொல்லி இதுவொன்றே.

மறவாதீர்கள்: ஊருமினப் பூச்சிகள் யாவினையும் கொன்றுகுவிப்பது ஃப்ளிட் பவுடர்.

கையாள மிக வசதியானது ஃப்ளிட் பவுடர்



வீடுகளிலே: கரப்பான் பூச்சிகளை ஒழிக்க, அலமாரி, இழுப்பறைகள் ஆகியவற்றின் மூலைமுடுக்குகளிலும், சாக்கடைப் பொந்துகளுக்கு அருகேயும் தூவுக. மூட்டைப் பூச்சிகளுக்கு முடிவு கட்ட, படுக்கைகள் எங்கும் 4 வாரத்திற்கு ஒரு முறை மருந்தடிக்கவும்.



நூல் நிலையங்களிலே, புத்தக அலமாரிகளிலே: வெள்ளிப் பூச்சிகளை விரட்ட, புத்தகங்கள், அலமாரித் தட்டுகள், புத்தகத் தட்டுகளுக்கும் பின்புறம் எங்கும் தூவிவைக்கவும்.



தோட்டங்களிலே: தாவர வர்க்கங்களைச் சற்றேனும் பாதிக்காமல், தோட்டப்பூச்சிகளை மட்டும் கொன்றொழிக்க வல்லது. இலைகள் மீதும் அடிப்பரப்பிலும் தூவி வைத்தால் தோட்டப் பயிர்களுக்கு அருமை உறுதியான பாதுகாப்பு.



மற்றுமொரு எஸ்ஸோ ESSO தயாரிப்பு

எஸ்ஸோ ஸ்டாண்டர்ட் ஈஸ்டர்ன் இன்க்.
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடைமையோடு யூ.எஸ்.ஏ. வில் இணைப்புப் பெற்றது).

CMEF-1A-TAM

வட்ட மேஜை

* விசைத்தறி வினை
* கவனக் குறைவு!
* கல் நெஞ்சம்!
* நாடகம் முன்னேற

ஒரு விசைத் தறி இயங்கினால் எட்டுக்கு மேலான நெசவாளர் குடும்பங்கள் பாதிக்கப் படும் என்பது யாவரும் அறிந்ததே. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் காங்கிரஸ் பல ஆண்டு களாக விசைத் தறி தமிழ் நாட்டில் புகு வதை எதிர்த்து வந்தது. ஆனால் பிற மாகா ணங்களில் உற்பத்தியாகும் விசைத்தறி ஜவுளிகள் தமிழ்நாடு கைத்தறித் துணிக்குப் போட்டியாக வந்து கைத்தறி நெசவாளர் கூலியை மேலும் குறைக்கின்றன. ஆகவே, விசைத் தறியைக் கைத்தறி நெசவாளர் களுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் மட் டுமே கொடுக்கப்பட வேண்டும் என்றும், அசோக் மேத்தா விசைத்தறி விசாரணைக் குழு வந்திருந்தபொழுது, விசைத் தறி வாங்குவதற்குப் போதுமான பொருளா தாரம் கைத்தறி நெசவாளர்களுக்கு இல் லாததால் அரசாங்கம் இதர குடிசைத் தொழிலுக்குக் கடன் வசதி அளிப்பது போல் நெசவாளர்களுக்கும் அளிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டோம்.

ஆனால் திடீரென்று சில மாதங்களாக மத்திய அரசாங்கச் சுங்க வரி இலாகாவினர் கேட்டவர்களுக் கெல்லாம் எவ்வித விசாரணை யும் இன்றி, கட்டுப்பாடுமின்றி, லைசென்ஸ் கொடுத்துவருகிறார்கள். இதில் ஆயிரக் கணக் கான விசைத் தறிகளுக்கு லைசென்ஸ் கொடுக் கப்பட்டிருக்கின்றன. ஆனால் கைத்தறி நெசவாளர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக் கும் ஒரு லைசென்ஸ்கூடக் கொடுக்கவில்லை. இதனால் பல லட்சக் கணக்கான கைத்தறி நெசவாளர்களின் எதிர்காலம் பாதிக்கப் படுகிறது.

சென்னை-2 டாக்டர் கே. எஸ். கோபாலசாமி
20–8–65 தமிழ்நாடு கைத்தறி
நெசவாளர் காங்கிரஸ்

எனது கணவர் ஆர். கிருஷ்ணமூர்த்தி பி.ஏ. அவர்கள் மதுரையில் டி. வி. எஸ். கோவாபரேட்டில் ஸ்டோரில் ஆடிட்டராக வேலை பார்த்து வந்தார். கடந்த 18–7–65 தேதி உடம்பு வலியாக இருந்ததை முன் விட்டு, காலை 9 மணிக்கு டவுன் பஸ்ஸில் ஏறி எர்ஸ்கின் ஆஸ்பத்திரிக்குச் சென்று என். ஜி. ஓ. வார்டில் டாக்டர் சீட்டுப் பெற்று, ஒரு நர்ஸால் பென்சிலின் இஞ்செக்ஷன் போடப் பட்டு உயிர் நீத்தார்.

எனது கணவர் சென்று வெகு நேரமாகி யும் காணுமல் சுமார் பத்தரை மணிக்கு நான் மேற்படி ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்க் கையில் எனது கணவர் துடிதுடித்து உயிர் பிரியும் பரிதாபக் காட்சியைக் காண நேரிட் டது. என் கணவருக்கு வயது 32. ஒன்றரை வயதுள்ள ஆண் குழந்தை ஒன்று இருக்கிறது.

ஏற்கனவே வேரொரு டாக்டர் கல்லுப் பட்டியில் எனது கணவருக்கு பென்சிலின் ஊசி போட்டு அபாயம் ஏற்பட்டு மறு இஞ் செக்ஷன் செய்து குணப்படுத்தியுள்ளார். கடந்த மாதத்துக்கு முன்னால் மதுரையில் இதே எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் இஞ்செக் ஷன் செய்து வீட்டுக்கு வந்ததும் மயக்கம் ஏற்பட்டு, மறுபடியும் ஆஸ்பத்திரிக்குச் சென்று அதே டாக்டர் குணப்படுத்தியிருக் கிறார். இப்படியிருக்க அவருக்கு மறுபடியும் பென்சிலின் இஞ்செக்ஷன் போடலாமா? இவ்விதம் கவனக் குறைவாக இருந்து எங்கள் குடும்பத்தை மீளாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டார்களே!

கம்பம்
1-8-65 கே. லலிதா

என் பெண் ஓர் அரசாங்க உயர் நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பில் சேர்ந்தது முதல் இப்போது மே மாதம் எஸ். எஸ். எல். ஸி. தேர்வு எழுதுகிற வரை யில் ஒரு நாள்கூடத் தவறாமல் பள்ளிக்குப் போயிருக்கிறான். ப்ளூ, டிங்கிக் காய்ச்சல் வந்த போதுகூடக் கையில் மாத்திரைகளை எடுத்துக் கொண்டு பள்ளிக்குப் போய் விடு வான். ஒவ்வொரு மாதமும் பரீட்சையில் மூன்றாவது ராங்கைத் தவற விட்டதில்லை. அப்படியிருந்தும் இந்த ஆண்டு எஸ். எஸ். எல். ஸியில் பெயில்.

மார்க்குகளைக் கேளுங்கள். தமிழ் 122, கணக்கு 75, சயன்ஸ் 54, இங்கிலீஷ் 38, சோஷியல் 26, ஹிந்தி 26, (50) 'மாடரே ஷன்' முறைப்படி 5 மார்க்குகள் உண்டாம். இவனுக்குத் தேவையோ 6. ஆக, ஒரே ஒரு



"அவா, மூணு பேருக்குள்ளும் சண்டை. ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்துக் கொள்வதில்லையாம்!"



''ஏன் சார்! அந்தக் குளம் ரொம்ப ஆழமோ?''
''அதுவா! மார்பளவுத் தண்ணீர்தான் இருக்கும். பலர் முழுவதுக.''

மார்க்குக்காக ஒரு பெண் தேர்வு பெறவில்லை. ஒன்பதாம் வகுப்பு முதல் நன்னடத்தை சர்டிபிகேட், வாங்கிய மார்க்குகள், பள்ளிக்கு நான் தவறாது வருகிற சர்டிபிகேட் முதலிய வைகளெல்லாம் எஸ். எஸ். எல். ஸி. புத்தகத்தில் இணைப்பது எதற்காக? மாணவர்களின் கல்வித் தரத்தைச் சீர்தூக்கிப் பார்த்து ஆவன செய்வதற்காக அல்லவா?

சென்னை
27-7-65

ஒரு மார்க்கால் பெயிலான
பெண்ணின் தாய்

''சுவையான சர்ச்சைகள்'' என்ற தலைப்பில் திரு ராஜகோபாலும் திரு சகஸ்ரநாமமும் வெளியிட்ட கருத்துக்களைக் கண்டேன்.

இன்றைய நிலையில் தமிழ் நாட்டில் நாடகக் கலை அது பயில்முறையாகட்டும் தொழில் முறையாகட்டும் வளரவில்லை—முன்னேறவில்லை — முழுமை பெறவில்லை என்பதே என் துணிந்த கருத்து.

இன்று தொடர்ந்து நடைபெறக் கூடிய நாடகங்கள் பயில் முறையிலும் இல்லை, தொழில் முறையிலும் இல்லை, என்பது வருந்தத் தக்கதே.

மூன்று ஆண்டுகளுக்குமுன் கல்கத்தாவில் ''அங்கர்'' என்ற வங்காள நாடகத்தைக் காணுகின்ற வாய்ப்புக்கிடைத்தது. அங்கு நாடகங்கள் பகல் காட்சியில்கூட நடக்கின்றன. அதுவும் ஒரு நாளைக்கு மூன்று காட்சி நாடகங்கள். நான் சென்றது பகல் காட்சிக்கே. 2-30 மணிக்கு நாடகம் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. 2-15 மணி வரை தியேட்டர் வாசலில் யாரையுமே காணவில்லை. நினைத்துக் கொண்டேன். நம்மூர் போலிருக்கிறது. கூட்டமேவராது என்று. விசாரித்ததில் டிக்கட்டுகள் முன்கூட்டியே விற்றுவிட்டது என்றார்கள். வியந்தேன். இங்கு நல்ல சினிமாவுக்குத்தான் அட்வான்ஸ் புக்கிங். வங்காளத்தில் நாடகத்துக்கென்றும் இது நேர்மையல்லவா? காட்சி நேரம் நெருங்கியதும் கொட்டகையே நிறைந்துவிட்டது ''ஹவுஸ் புல்.''

அது ஒரு நிலக்கரிச் சுரங்கத்தைப் பற்றிய நாடகம். நிலக்கரிச் சுரங்கத் தோற்றத்தின் முதற்காட்சியைக் கண்டு பிரமித்துப் போனேன். எவ்வளவு இயற்கையான படைப்பு! சுரங்கத்தின் வெளித்தோற்றம்—தொழிலாளர்கள் உள்ளேயும் வெளியேயும் போய் வருகின்ற காட்சி — அருகேயுள்ள மரங்களில் பெண் தொழிலாளர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஏணை கட்டித் தூங்க விட்டுச் செல்லும் காட்சி. கணவனுக்கு மனைவி சோறு படைக்கின்ற தோற்றம். இவ்வளவுக்கும் மேலாகப் பளுக்களைத் தூக்கியும் இறக்கியும் வைக்கும் அளவுக்கு ஒரு கிரேன் வேலை செய்து கொண்டிருந்தது. ஒரு நாடக மேடையிலே கிரேனை எப்படி அமைக்க முடிந்தது—அது எப்படி இயங்கிக் கொண்டிருந்தது? இதை என்னால் நம்பவே முடியவில்லை. இந்த நாடகத்தில் பங்கேற்பவர்கள் அனைவரும் பயில்முறை நடிகர்கள் என்பதும் இந்த நாடகம் தொடர்ந்து நூறு நாட்கள் நடைபெற்று மீண்டும் ரசிகர்களின் வேண்டுகோளுக்காக நடைபெறுகிறதென்றும் கேள்விப்பட்டபொழுது எனக்கு இரட்டிப்பு அதிர்ச்சி ஏற்பட்டது. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போல் கடைசிக் காட்சி அமைந்திருந்தது. சுரங்கத்துக்குள்ளே வரவிருக்கும் ஆபத்தை உணர்ந்த பல தொழிலாளர்கள் உள்ளே போய் வேலை செய்ய மறுத்தனர். ஆனால் சில கருங்காலிகள் அதிகக் கூலி பெற்று உள்ளே சென்றனர். சுரங்கம் வெட்ட வெட்டத் தண்ணீர் வர ஆரம்பித்தது. அது அளவிலாப் பெருக்கெடுத்துத் தொழிலாளர் அனைவரையும் அதிலே மூழ்கடிக்கச் செய்து விட்டது. தண்ணீரிலே அமிழ்ந்து அவர்கள் உயிர் போராடும்பொழுது போட்ட கூக்குரலும் தண்ணீரின் வேக ஒலியும் நேரிடையாகவே பார்க்கின்ற பிரமை ஏற்பட்டதால் நான் திகைத்துப் போனேன். இத்தகையதொரு கலை நுணுக்கத்தையும் காட்சியமைப்பையும் தமிழகம் என்று பெறுமோ என்று என்னை ஏங்கினேன்.

இன்று என்ன காரணத்தினாலோ தமிழகத்தில் நாடகங்களில் காட்சியமைப்பில் அதிகக் கவனம் செலுத்துவதில்லை. மேலும், சினிமாவில் நிற்கும் குணச்சித்திர நடிப்பினால், மனத்தை உருக்குகின்ற நிலையினால் நடித்துப் பெயர் பெற்ற பயில்முறை நடிகர்கள் அரிதென்றே சொல்ல வேண்டும். அதற்கு மாறாக நகைச் சுவையைக் காண்கிறோம். அதுவும் ஆங்கில மொழிக் கலப்பால் ஏற்படுகின்ற வெடிச் சிரிப்பும், தமிழைத் தவறாக மாற்றுவதால் ஏற்படுகின்ற கேலிச் சிரிப்பும், நடுநடு பாஷையில் கொச்சையாய்ப் பேசுவதால் ஒலிக்கின்ற ஆபாசச் சிரிப்பையும்தானே காண முடிகிறது? இயற்கையான கருத்தாழம் நிறைந்த நகைச் சுவையைக் காண முடியாது.

இன்னொன்று. இவர்கள் நடத்துவது தமிழ் நாடகம்தானே? ஆங்கிலத்திலோ, ஹிந்தியிலோ, சமஸ்கிருதத்திலோ புரியாத தலைப்பைக் கொடுத்துத் தமிழுக்குத் துரோகம் இழைக்க வேண்டாமே!

சென்னை-2
19-8-65

எஸ். ராயப்பன்
நாவல் புராமாடிக் சென்டர்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10


எனக்கு
என்னதான்
வந்து விட்டது?
எனக்கு எப்பொழுதும் ஒரே சோர்வு. எதற்கெடுத்
தாலும் எரிச்சலும் சிடுசிடுப்புமாய் இருந்தேன்.
அக்கம்பக்கத்தவர்கள் கூட என்னிடமிருந்து
ஒதுங்கியே இருந்தார்கள் !
எங்கள் டாக்டர் என்
சோர்வைப் போக்க வழி
சொன்னார். சரியான
போஷாக்கின்மைதான்
சக்திக் குறைவுக்கு
காரணம் என்றார்.
ஹார்லிக்ஸ்
அருந்தும்படி
சொன்னார்.
Horlicks
ஹார்லிக்ஸ் விரைவிலேயே
எனக்கு சக்தியளித்தது!
அதோடு என் பழைய
தெம்பும் திரும்பக்கிடைத்தது.
ஹார்லிக்ஸ் என் வாழ்க்
கையை மீண்டும்
மகிழ்ச்சிகரமாக்கியது!
ஹார்லிக்ஸ்
அதிக சக்தி யளிக்கிறது!
Horlicks

...TERED NO. M. 4392
...red as a Newspaper in Ceylon

